மல்லிகை வாசகம்

எட்டாம் புத்தகம்

டாக்டர் மா. இராசமாணிக்கனர்,
M.A., L.T., M.O.L., Ph.D.

ல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1

மல்லிகை வாசகம்

எட்டாம் வகுப்பு

[புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது]

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L., Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1.

[விலை ரூ. 1·80

முதற் பதிப்பு—1966

[Paper used: 10·9 kgs. D/Cr. White Printing]

Printed at Sree Ramaprasad Press, 56, Broadway Madras-1

முகவுரை

இத்தமிழ்ப் பாட நூல் எட்டாம் வகுப்பு மாணவர்க்கு உரியது. இது கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள (Syllabus, dated 7-7-1965) பாட இயலின்படி தயாரிக்கப் பெற்றது.

ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அருஞ்சொற் பொருள், கேள்விகள், பயிற்சி என்னும் மூன்று தலைப்புக்கள் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பயிற்சிக்கும் தவறுது விடை எழுதிப் பழகும் மாணவர் மொழித் தேர்ச்சியில் சிறப்புறுவர் என்பது திண்ணம்.

இந்நூலை நன்முறையில் பயன்படுத்தி மொழித் துறையில் முற்போக்கு அடைதல் மாணவர் கடமையாகும். கல்வித் துறையினர் இந்நூல் பரவுதற்கு ஆக்கம் தருவர் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்

உள்ளுறை

உரை

செய்யுள்

தேசிய கீதம்


ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்;

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸ்ஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!



காந்தி அடிகள்

1. காந்தி அடிகள்

1. ***காந்தி அடிகள்*** பெயரைக் கேளாத தமிழர் இருத்தல் இயலாது. அப்பெரியார் இங்கிலாந்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். அவர் வழக்கறிஞராக இருந்து பெரும்பொருள் திரட்டி இன்ப வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆயின், அவர் அங்ஙனம் தந்நலத்துடன் வாழாது, 'இந்தியா உரிமை பெறவேண்டும்; இந்தியர் தம் ஆட்சி பெற்று நல்வாழ்வு வாழவேண்டும்,' என்னும் நோக்கம் கொண்டு, அதற்கேற்ற பல துறைகளிலும் தொண்டு செய்தவர்; இந்தியர் நலனுக்காகவே தம் அலுவலை விட்டவர்; தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தவர்; துப்பாக்கி முதலிய போர்க் கருவிகளைக் கொண்டு மக்களை அடக்கியாண்ட ஆங்கிலேயர் ஆட்சியைத் 'துன்புறுத்தாமை' என்னும் அறவாள் ஒன்று கொண்டே பணிவித்த பெரியார்; ஏழைகள் மிகுந்த இந்த நாட்டில் தாமும் ஓர் ஏழைக் கோலமே பூண்டு எளிய வாழ்வுகொண்ட உத்தமர். அவருடைய தூய வாழ்க்கையையும் அறக் கொள்கைகளையும் பாராட்டிய பொதுமக்கள் அவரை 'அடிகள்' என்று அழைப்பாராயினர். நம் பொருட்டுத் தந்நலம் துறந்த அவ்வடிகளது வரலாற்றை அறிந்து மகிழ்தலும், அப்பெரியார் அருளுரைகளைப் பின்பற்றி நடத்தலும் நமது கடமை அன்றோ?

2. காந்தியடிகள் கத்தியவாரில் போர்பந்தர் என்னும் ஊரில் 1869இல் வணிக மரபிற் பிறந்தவர். அவர் தந்தையார் இராசகோட்டைச் சிற்றரசரிடம் அமைச்சராயிருந்தார். நற்குணங்

கட்கு உறைவிடமாக இருந்த அவர், இராச கோட்டை மக்களது பாராட்டுக்கு உரியவரானுர். அவர் மனைவியார் பெருந்தன்மை மிக்கவர்; சமயக் கொள்கைகளில் அழுத்தமான பற்றுடையவர். அவ்வம்மையாருடைய கடவுள் பக்தியும் சமயப் பற்றும் நேரிய வாழ்க்கையும் காந்தியாரது நல்வாழ்விற்கு அடிப்படையாக அமைந்தன. நயம்படப்பேசுதல், உண்மையுடைமை, தவற்றை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மை முதலிய நற்பண்புகள் தந்தையார் வாயிலாக அவரை அடைந்தன என்னலாம்.

3. அடிகள் மாணவராக இருந்தபொழுது இரண்டு நாடகங்களைப் பார்த்தார்: ஒன்று 'தசரதன் சாபம் பெற்ற வரலாறு,' மற்றது 'அரிச்சந்திரன் வரலாறு;' இந்த இரண்டும் அவரது உள்ளத்தில், 'பெற்ருேர்க்குத் தொண்டு புரிதல் பிள்ளைகள் கடமை,' 'எதனையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்,' 'உயிர் போவதாயினும் பொய் பேசுதல் ஆகாது' என்னும் மூன்று படிப்பினைகளை ஊன்றச் செய்தன. 'நான் இவற்றை என் வாழ்நாளிற் கடைப்பிடிப்பேன்' என்று அவர் உறுதி செய்துகொண்டார். அப்பெரியார் இறக்குமளவும் இவற்றைப் பின்பற்றி வந்தது உலகம் உணர்ந்த செய்தியாகும்.

4. அடிகள் பதினுன்கு வயதுடைய மாணவராய் இருந்தபொழுது தீய மாணவருடன் அறியாது பழகி, இறைச்சி உண்ணத் தொடங்கினுர்; அத்தீயவர் பழக்கத்தால் பீடி, சிகரெட்டுப் பிடிக்கவும் கற்றுக்கொண்டார்; ஆயின், விரைவில் அவை தீய பழக்கங்கள் என்பதை உணர்ந்து வெறுத்துத் தள்ளினுர்; தமது தவற்றை ஒரு கடிதத்தில் எழுதி, நோய்வாய்ப்பட்டிருந்த தம் தந்தையாரிடம் கொடுத்தார். கடிதத்தைப் படித்த தந்தையார் அடிகளைக் கோபிக்கவில்லை;

அதற்குப் பதிலாகக் கண்ணீர் விட்டார். தம் தவற்றை எண்ணித் தந்தையார் கண்ணீர் விடுவதைக் கண்ட அடிகள், 'கோ'வென்று கதறி அழுதார். அவர் அன்று முதல் மேற்சொன்ன தீய பழக்கங்களை மேற்கொள்ளவில்லை. தந்தையார் விட்ட கண்ணீர் மைந்தரது உள்ளத்திற் படிந்த மாசினைக் கழுவிய நன்னீர் ஆயிற்று.

5. அடிகள் தமது பத்தொன்பதாம் வயதில் இங்கிலாந்து சென்றார்; 'நான் இங்கிலாந்தில் இறைச்சி தின்பதில்லை; குடி வகைகளை அருந்துவதில்லை; சிறந்த ஒழுக்கத்துடன் இருந்து மீள்வேன்,' என்று தாயாருக்கு வாக்களித்துச் சென்றார். அவ்வுத்தம மைந்தர் வாக்களித்தவாறே நடந்து கொண்டார். அடிகள் பாரிஸ்டர் பட்டத்திற்காகப் படிக்கலானார். அவர் பல சமயங்களில் ஆக்ஸ் போர்டு, கேம்பிரிட்சு முதலிய நகரங்களில் உள்ள பல்கலைக் கழகங்களைப் பார்வையிட்டார்; தொழிற் கல்விச்சாலைகளைக் கண்டார்; கல்வியையும் கைத் தொழிலையும் மேனாட்டார் எவ்வாறு பள்ளிகளில் கற்பிக்கின்றனர் என்பதை அறிந்தார்; அவரது அரசியல் அமைப்பையும், கட்டுத் திட்டங்களை யும், கட்சிகளின் அமைப்பையும் கவனித்தார்; நாடோறும் செய்தித்தாள்களைப் படிப்பதில் ஆங்கிலேயர் காட்டிய ஊக்கத்தைக் கண்டார்; காலத்தை வீணாக்காது ஒவ்வொருவரும் உழைப்பதைப் பார்த்து வியந்தார்; அரசர் முதல் ஆண்டி ஈறாக அனைவரும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு விளங்கியதை உணர்ந்தார்; 'நாமும் இந்தியாவில் இந்நற்பண்புகளைப் பரப்ப வேண்டும்' என்று மனவுறுதி கொண்டார்.

6. அடிகள் பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின்னர் இந்தியா மீண்டார்; இராசகோட்டையில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கி நடத்தலானார். அவருக்குப் போதிய வருவாய் கிடைக்

கத் தொடங்கியது. அப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயர் குடியேறத் தொடங்கினர்; இந்தியரும் அங்குச் சென்று காடு கெடுத்து நாடாக்கினர்; வெள்ளையர் வாழ வசதிகள் செய்து தந்தனர். அங்ஙனம் உதவி செய்ததை மறந்து, நிற வேறுபாடுகொண்ட வெள்ளையர் இந்தியர்க்குப் பல உரிமைகளை அளிக்க மறுத்தனர். அதனால் இந்தியருக்கும் ஆங்கிலேயர்க்கும் மனக் கசப்பு மிகுந்தது. அவ்வமயம் தென் ஆப்பிரிக்க நீதி மன்றத்தில் இந்தியர் ஒருவர் சார்பிற் பேச அடிகள் அங்குச் சென்றார்.

7. காந்தியடிகள் மூன்றாண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் தங்கி, இந்தியரை வன்மையுள்ள சமூகமாக மாற்றினார்; அன்பு ஒன்றே கொண்டு, அரசாங்கத்தைத் தமிழர் விருப்பத்திற்கு இணங்கச் செய்தார்; எளிய வாழ்க்கை வாழவும் தங்கள் வேலைகள் எல்லாவற்றையும் தாங்களே செய்து கொள்ளவும் கற்பித்தார்; பின்னர் இந்தியா மீண்டு மறுபடியும் தம் குடும்பத்துடன் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; அங்கு வெள்ளையர்க்கும் டச்சுக்காரர்க்கும் நடந்த போரில் வெள்ளையர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்கள் இந்தியரை நேசிக்குமாறு செய்தார். அவர் இந்தியாவுக்குத் திரும்பிச் சில மாதங்கள் தங்கி, மீண்டும் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்; அரசாங்கத்தாரைக் கண்டு இந்தியர்க்கு உரிமைகள் வழங்கப் பாடுபட்டார். அங்கிருந்த இந்தியருக்குத் தலைவராய்ச் சிறை சென்றார். 'பகைவரை நேசி; துன்புறுத்தாதே; நீ வேண்டுவது கிடைக்கும் வரையில் அமைதியாகப் போராடு' என்பது அவரது அறிவுரை. தென் ஆப்பிரிக்க இந்தியர் அவரது அறிவுரைப்படியே நடந்து வெற்றி பெற்றனர். அடிகள் அவர்களிடம் பிரியா விடைபெற்று 1914 இல் தம் தாய்நாடு மீண்டார்.

8. இந்தியா மீண்ட அடிகள் ஒரு வருட காலம் இந்தியா முழுமையும் சுற்றிக் காங்கிரசுத் தலைவர்களையும் பொதுமக்களையும் அவர்கள் மனப் போக்குக்களையும் அறிந்தார்; தொழிலாளிகட்கும்—முதலாளிகட்கும், உழுபவர்க்கும்—உழுவிப்பவர்க்கும் இருந்த போராட்டங்களைக் கவனித்தார்; பின்பு என்னென்ன முறைகளில் நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்பதை வரையறை செய்துகொண்டு காங்கிரசிற் சேர்ந்தார். தென் ஆப்பிரிக்காவில் செய்த அறப்போரினால் இந்தியர் அவர் பெயரை நன்கு அறிந்திருந்தனர்; ஆதலால், அவரே இந்தியாவிலும் உரிமை இயக்கத்தை முன் நின்று நடத்தவல்லர் என்று முடிவு கூறினர். அடிகள் காங்கிரசு இயக்கத்தலைமையை ஏற்று உரிமைப் போரில் இறங்கினார்.

9. ‘நாம் ஆங்கிலேயரது ஆட்சியை வெறுக்கிறோமே தவிர ஆங்கிலேயரை வெறுக்கவில்லை; நமக்குத் தேவைப்படும் ஆடைகளை நாமே நெய்து கொள்வோம்; வெளிநாட்டுப் பொருள்களை வாங்குவதால் நமது செல்வம் வெளிநாடுகட்குச் செல்கிறது; நமது நாடு வறுமைப்படுகிறது; நாட்டுத் தொழில்கள் இறக்கின்றன. ஆதலின் நம் நாட்டிற் செய்யப்படும் பொருள்களையே வாங்குவோம். அன்பு—அமைதி—பிறரைத் துன்புறுத்தாமை என்னும் அறக்கொள்கைகட்குப் பணிந்துநடப்போம்,’ என்று அடிகள் நாடெங்கும் பேசினார்; மக்கள் மனங்களைக் கவர்ந்தார்; ஆட்சியாளர் கொடுமைகட்கு ஆளாயினார். அவருடைய அறவழி ஒன்றினால்தான் இந்தியா விடுதலைபெறமுடியும் என்பதை நன்கு உணர்ந்த வல்லபாய் படேல், ஜவாகர்லால் நேரு, சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் போன்ற அறிஞர் பலரும் அவர் தலைமையை ஏற்று உரிமைப்போரில் பங்குகொண்டனர்; பலமுறை சிறை சென்றனர்; தம் இன்ப வாழ்க்கையைத்

துன்ப வாழ்க்கை ஆக்கிக்கொண்டனர். இங்ஙனம் உரிமைப்போர் பல ஆண்டுகள் நடந்தது. இறுதியில் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.

10. தமது தியாகம் பலனளித்தது கண்ட அடிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. எனினும், நாடு விடுதலை பெற்றது போதும் என்று அவர் ஓய்வு கொள்ளவில்லை. அப்பெரியார் தமது 78 ஆம் வயதிலும் ஊர் ஊராகச்சென்று இந்து முஸ்லிம் கலகங்களை அடக்கிவந்தார்; இந்துக்களையும் முஸ்லிம்களையும் அன்புகொள்ளுமாறு செய்ய உண்ணு நோன்பை மேற்கொண்டார்; அப்பெரியார் இல்லை எனின், இந்தியா முழுமையிலும் உள்நாட்டுக் குழப்பம் தலைவிரித்து ஆடியிருக்கும். இங்ஙனம் நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்டுவந்த அம்மகான், 1948 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 30ஆம் நாள் மாலையில் தில்லியில் நடைபெற இருந்த வழிபாட்டுக் கூட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

11. காந்தியடிகள் பொன்னுரைகள் பல. "எந்த நாட்டிலும் இல்லாத சாதி வேறுபாடுகள் இந்நாட்டில் உள்ளவரையில் இந்நாடு முன்னேற்றம் பெறுது; 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என்று கோடிக்கணக்கானவர் இருக்கும் வரையில் இந்து சமூகம் ஒற்றுமை அடையாது; நாட்டு மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறுதவரையில் நமது சமூகம் அறிவுடைய சமூகம் ஆகாது. பெண் கல்வி பெருகுதல் வேண்டும். சுருங்கக் கூறின், சாதி வேறுபாடு, தீண்டாமை, கல்வியின்மை, பெண்ணடிமை என்பன ஒழிக்கப்படல்வேண்டும்; கட்டாயக்கல்வி, தொழிற்கல்வி, அனைவரும் ஒரு தாயீன்ற மக்கள் என்னும் உணர்ச்சி முதலியன வளர்பிறை போல வளர்ச்சிபெற வேண்டும்" என்பன அடிகள் அருளிய பொன்னுரைகளிற் சிலவாகும்.

அருஞ்சொற்பொருள்

துன்புறுத்தாமை - பிறர்க்குத் தீங்கு செய்யாமை. முன்னிரண்டு படிப்பினைகளும் முதற் கதையைச் சேர்ந்தவை; பின்னது இரண்டாம் கதையைச் சேர்ந்தது. தண்ணீர் - குளிர்ந்த நீர் (தண்மை+நீர்); வெந்நீர் - வெம்மை+நீர். உழுவிப்பவர் - நிலக்கிழார்.

கேள்விகள்

1. காந்தியார் 'அடிகள்' என்று ஏன் அழைக்கப் பட்டார்?
2. அடிகள் பெற்றோரிடமிருந்து பெற்ற நல்லன எவை?
3. அடிகள் பார்த்த இரண்டு நாடகங்கள் எவை? அவற்றின் நிகழ்ச்சிகள் யாவை?
4. அடிகள், நாடக நிகழ்ச்சிகளிலிருந்து கற்றுக் கொண்ட படிப்பினைகள் யாவை?
5. 'தந்தையார் விட்ட கண்ணீர் மைந்தரது உள்ளத்திற் படிந்த மாசினைக் கழுவிய நன்னீராயிற்று'.— இடம் சுட்டி விளக்குக.
6. அடிகள் தாயாரிடம் என்ன வாக்களித்து இங்கிலாந்து சென்றார்?
7. அடிகள் இங்கிலாந்திற் பார்த்து அறிந்தவை யாவை?
8. அடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்த திருப்பணிகள் எவை?
9. 1914இல் இந்தியா மீண்ட அடிகள் ஒரு வருட காலம் செய்த வேலைகள் எவை?
10. அடிகள் காங்கிரசின் தலைமையேற்ற பின்பு நாடெங்கும் பேசிய பேச்சு யாது?
11. அடிகள் தம் இறுதிக் காலத்தில் செய்துவந்த நாட்டுப் பணி யாது?
12. அவர் பொன்னுரைகளிற் சில யாவை?

பயிற்சி

1. பிரித்து எழுதுக: அடக்கியாண்ட, சமயப்பற்று, சிற்றரசர், மனக்கசப்பு.

2. சேர்த்து எழுதுக: வரலாறு + ஐ, தவறு + ஐ, துன்பம் + வாழ்க்கை, உரிமை + போர்.

3. வாக்கியங்களில் அமைக்க: நலனுக்காக, தியாக வாழ்வு, அறிவுரை, பொன்னுரை, அறப்போர்.

4. இப்பாடத்தின் ஒவ்வொரு பகுதியை (பாராவை) யும் படித்து அதற்கு ஏற்ற தலைப்புத் தருக.

5. காந்தியடிகள் இளமை - இங்கிலாந்து வாழ்க்கை - தென்னாப்பிரிக்காவில் தொண்டு - இந்தியாவில் உரிமைப் போர் - அவர் செய்த தொண்டு: இக்குறிப்புக்களைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.

2. ஊருணி நீர்

1. *நக்கீரர்* என்பவர் முல்லையூர் பெருநிலக் கிழார். அவரது மனைவியார் *அழகம்மையார்* என்பவர். *புலவர் அழகப்பர்* என்பவர் முல்லையூரைச் சேர்ந்தவர். அவர் பல ஆண்டுகளாக நக்கீரருடன் பழகிவந்தார். புலவரது பழக்கத்தால் நக்கீரர் சங்ககாலத் தமிழ் நூல்களை நன்கறிந்தார்; பழந்தமிழ் மக்கள் வாழ்க்கையையும் உயர்ந்த கொள்கைகளையும் உணர்ந்திருந்தார். அவர் திருக்குறளை நன்கு கற்றவர்; வள்ளுவர் பொன் மொழிகளைத் தம்மால் இயன்றவரையில் கடைப் பிடித்தார்.

2. அழகம்மையாரும் தமிழறிவில் சிறந்து விளங்கினார்; சிற்றூர் மக்களிடம் நன்கு பழகினார்; தம் பண்ணை ஆட்களிடம் பேரன்பு காட்டினார்; அடிக்கடி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அழகப்பருக்கு ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் இருந்தனர். அவருடைய மனைவியார் சில ஆண்டுகளுக்கு முன்னரே காலமானார். அழகம்மையாரே அப்பிள்ளைகள் இருவரையும் தம் வளமனையில் வைத்து வளர்த்துவந்தார். நக்கீரர் வேண்டுகோளின்மீது அழகப்பரும் அவருடன் தங்கி வாழலானார்.

3. நக்கீரருக்கும் அழகம்மையாருக்கும் ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் *தமிழரசி*. அழகப்பர் தமிழரசிக்கும் தம் மக்களான நெடுஞ்செழியனுக்கும் மாதவிக்கும் நாளும் பாடம் கற்பிக்கலானார். பிள்ளைகளின் கல்வி அறிவு வளர்பிறை போல வளர்ந்துவந்தது. அவர்கள் இறைப்பற்றிலும் நல்ல ஒழுக்கத்திலும் சிறக்கத் தொடங்கினர்.

"இறைவனுல் படைக்கப்பட்ட மக்கள் அனை வரும் ஒரே இனத்தவரே. சமுதாயத்தில் முதலில் தொழில் கருதியும், நிலம் கருதியும், பண்பு கருதியும் மக்கள் வெவ்வேறு பெயர் பெற்றனர். செக்கு ஆட்டி எண்ணெய் எடுப்பவன் 'செக்கான்' எனப் பட்டான். வாணிகம் செய்தவன் 'வாணிகன்' அல் லது 'வணிகன்' எனப்பட்டான். இவை தொழில் பற்றி வந்தபெயர்கள். கடற்கரையில் வாழ்ந்து மீன் பிடித்தவர் 'கரையார்' எனப்பட்டனர். இது நிலம் பற்றிவந்த பெயராகும். 'மறம்' என்பதற்கு 'வீரம்' என்பது பொருள். மறத்தை உடையவர் 'மறவர்' எனப்பட்டனர். இது பண்புபற்றி வந்த பெய ராகும். ஆயின், இவை நாளடைவில் சாதிபற்றிய பெயர்களாக மாறிவிட்டன. அறிவுடையோர் இச் சாதிகளை எண்ணி வேறுபாட்டு உணர்ச்சி கொள் ளார்," என்று புலவர் அழகப்பர் பிள்ளைகளிடம் அவ்வப்போது கூறிவந்தார். அவர் கூறிவந்த அறிவுரைகள் பிள்ளைகளின் உள்ளங்களில் பசு மரத்தாணிபோலப் பதிந்தன. அப்பிள்ளைகள் எத்தகைய வேறுபாடும் காட்டாமல் எல்லாப் பிள்ளைகளுடனும் மனம்கலந்து பழகினர்.

4. தமிழரசியும் புலவர் பிள்ளைகளும் அவ்வப் போது பண்ணையாட்களின் தெருக்களுக்குச் சென் றனர்; அங்கிருந்த பிள்ளைகளுக்குப் படிக்கப் பள்ளி இல்லை என்பதை உணர்ந்தனர். தமிழரசி தன் தந்தையிடம் கூறி ஒரு பள்ளியைத் தோற்றுவித் தாள். அப்பள்ளியில் பண்ணையாட்களின் பிள்ளை களும் சேர்க்கப்பட்டனர். அழகம்மையார் அப் பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்கள், எழுது கோல்கள், கரும்பலகைகள், நோட்டுப் புத்தகங் கள் ஆகியவற்றை வழங்கினுர். நக்கீரர் உடை களை அளித்தார். பண்ணையாட்களும் பிற ஏழை மக்களும் நிலக்கிழாரையும் அவர் குடும்பத் தாரையும் உளமாரப் பாராட்டினர்.

5. தமிழரசி, தன் தந்தையிடம் பயிர்வேலே செய்யும் பண்ணேயாட்களின் நலத்திற் கவலே கொண்டாள். ஒருமுறை பண்ணேயாட்களின் ஓலேக் குடிசைகள் தீப்பிடித்துச் சாம்பராயின. பாவம்! அவ்வேழைமக்கள் இருக்க வீடின்றித் தவித்தனர். தமிழரசி அவர்களது அவல நிலே யைக் கண்டு உள்ளம் உருகிஞள்; தன் தந்தை யார் கட்டியிருந்த விருந்தினர் மாளிகையிலும் பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிறிது காலம் அவர்களேத் தங்கியிருக்கும்படி ஏற்பாடுசெய்தாள். பெற்ருேரும் தம் மகளேப்போலவே இரக்க உள்ளம் வாய்ந்தவர். ஆதலால் அவ்விருவரும் தமக்குச் சொந்தமான ஓரிடத்தில் ஒவ்வொரு பண்ணேயாளுக்கும் ஒவ்வோர் ஓட்டு வீடாகக் கட்டிக்கொடுத்தனர்; அவர்கள் அனேவருக்கும் பயன்படத்தக்க முறையில் இரண்டு பெரிய கிணறுகளேயும் வெட்டுவித்தனர்; குளிப்பதற்கும் அறைகளேக் கட்டுவித்தனர்.

6. நிலக்கிழார் பண்ணேயாட்களுக்குச் செய்த நலன்களேக் கண்டு ஊராரும் வியந்து பாராட் டினர். இச்செய்தி அயலூர்களில் பரவியது. ஆங்காங்கு இருந்த நல்ல உள்ளம் படைத்த நிலக்கிழார்களும் தத்தம் பண்ணேயாட்களுக்குத் தேவையான வசதிகளேச் செய்ய முற்பட்டனர். சில ஊர்களில் இருந்த பீடித் தொழிலாளர் போன்றவர் தத்தம் முதலாளிகளுக்குத் தம் தேவைகளேக் குறிப்பிட்டு வேண்டுகோள் விடுத் தனர். 'ஊருடன் ஒத்து வாழ்' என்பது முது மொழி. ஆதலால் அம்முதலாளிகள் தமக்கு விருப்பம் இல்லாவிடினும் தொழிலாளர் கிளர்ச் சிக்கு அஞ்சி, அவர்களுக்குச் சில வசதிகளேச் செய்ய முன்வந்தனர். நக்கீரர் செய்த நற்செயல் பல ஊர் ஏழைகளுக்கும் நலம் விளேவித்ததைப் பாருங்கள்.

7. முல்லையூரில் நெசவாளர் குடும்பங்கள் நூறு இருந்தன. முதலாளிகள் சிலர் அவர்களுக்குக் குறைந்த கூலி கொடுத்துவந்தனர். அதனுல் நெசவாளர் துன்புற்றனர். தமிழரசி அவர்களது துன்ப நிலையைப் போக்க எண்ணினுள்; தன் பெற்றோரிடமும் புலவரிடமும் நெசவாளரது அவல நிலையை எடுத்துக் கூறினுள். புலவர், "கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, அரசாங்க உதவி பெற்றுச் சங்கத்தின் வாயிலாகவே நெசவுக்குரிய நூலைத் தருவிக்கவேண்டும்; சங்கத்திலிருந்தே எல்லோருக்கும் நூலை வழங்கவேண்டும்; நெய்யப்படும் ஆடைகளைச் சங்கமே வாங்கி விற்பனை செய்யவேண்டும். அப்போதுதான் நெசவாளர் உயர்ந்த கூலியைப் பெறுவர்," என்று கூறினுர்.

8. அழகம்மையார் தமது சொத்திலிருந்து ஐயாயிரம் வெண்பொற்காசுகளை உதவினுர். நக்கீரரும் அதே தொகையை வழங்கினுர். புலவர், நிலக்கிழார் மாளிகையில் நெசவாளரை ஒன்று கூட்டினுர்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் பப்பத்து வெண் பொற்காசுகளாகக் கொடுத்தார்; அப் பணத்தைக்கொண்டு ஒவ்வொருவரையும் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்தார். சில மாதங்களில் அரசாங்க உதவியும் கிடைத்தது. புலவர் மகனுன நெடுஞ்செழியனே அச்சங்கத்தின் கணக்கனுக நியமனம் பெற்றுன். நெசவாளருக்குத் தேவையான நூல் திங்கள்தோறும் தருவிக்கப்பட்டது. நெசவாளர் ஊக்கத்தோடு உழைத்தனர்; உயர்ந்த கூலியைப் பெற்றனர்; "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் உண்மையை உணர்ந்தனர்.

9. நக்கீரர் தோற்றுவித்த பள்ளியில் ஊர்ப் பிள்ளைகள் அனைவரும் படித்தனர். தொடக்கத்தில் முதல் ஐந்து வகுப்புக்களைக் கொண்டிருந்த அப் பள்ளி, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு நடுத்தரப் பள்ளியாக மாறியது; மேலும் மூன்று ஆண்டு

களுக்குப் பின்னர் உயர்நிலைப் பள்ளியாக மாறியது. ஊர்ப்பிள்ளைகள் அப்பள்ளியில் இலவசமாகக் கல்விகற்றனர். எல்லாப் பிள்ளைகளும் கல்வியில் ஈடுபட்டதனால், முல்லையூர் மக்களிடையே அறிவு வளர்ந்தது; தீய பழக்கங்கள் ஒழிந்தன. அவரவர் தத்தம் தொழில்களில் கருத்தைச் செலுத்தினர். புலவர் அழகப்பர் வாரத்திற்கு ஒரு முறை திருக்குறள்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்; மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழிகளை எடுத்துரைத்தார்.

10. இங்ஙனம் பெருஞ்செல்வராகிய நக்கீரரும் அவர் குடும்பத்தாரும் புலவரும் மேற்கொண்ட நன்முயற்சியால் முல்லையூர் மக்கள் நல்வாழ்வு பெற்றனர். ஒவ்வோர் ஊரிலுமுள்ள பெருஞ்செல்வர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து நக்கீரரைப்போல் பொதுப்பணியில் ஈடுபடின், நாட்டில் கல்வி வளரும்; தொழில்கள் வளரும்; ஏழை மக்கள் இன்பமாக வாழ வழி உண்டாகும். நல்ல உள்ளம் படைத்த செல்வனது செல்வம் ஊர் நடுவிலுள்ள *ஊருணி நீரைப்*போன்றது. நக்கீரர் செல்வம் ஊருணி நீரைப்போல ஊரார்க்குப் பயன்பட்டது. அங்ஙனம் பிறர்க்குப் பயன்பட வாழ்தலே வாழ்வாகும். அத்தகைய வாழ்வைப் பெறுவதே பெருஞ்செல்வர்க்குப் புகழைத் தரும்.

அருஞ்சொற்பொருள்

நக்கீரர் - இது சங்ககாலப் புலவரின் பெயர். அப்பெயரைப் பிற்காலத்தவர் தம் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குகின்றனர். **சங்க காலத் தமிழ் நூல்கள்** - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன. **பண்ணையாட்கள்** - வயல் வேலை செய்பவர். **இறைப்பற்று** - கடவுள் பற்று. **பண்பு** - குணம். **வளர்பிறைபோல, பசுமரத்தாணிபோல** - உவமைகள்.

அளித்தார், வழங்கினுர் - கொடுத்தார். அவலம் - துன்பம். வெண் பொற்காசு - ரூபாய். ஊருணி - ஊர் + உண்ணி, ஊராரால் உண்ணப்படும் நீரைக்கொண்ட இடம்.

கேள்விகள்

1. புலவர் அழகப்பர் சாதிகளைப்பற்றி யாது கூறினுர் ?
2. அழகம்மையார் நற்பண்புகள் யாவை ?
3. தமிழரசி பிறர்க்குச் செய்த நன்மைகள் எவை ?
4. நக்கீரர் நெசவாளர் வாழ்வை எவ்வாறு உயர்த்தினுர் ?
5. 'நக்கீரர் ஊருணி நீரைப்போன்றவர்' என்பது எவ்வாறு பொருந்தும் ?
6. நீ இப்பாடத்தால் அறியும் படிப்பினை யாது ?

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள உவமைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. இப்பாடத்தில் வந்துள்ள பழமொழிகளைக் கூறுக. வேறு நான்கு பழமொழிகளையும் கூறுக.

3. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக:— மரம் - மறம், இரக்கம் - இறக்கம், பல்லி - பள்ளி, பால்-பாழ்.

4. நக்கீரர் இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.


5. தமிழரசி இப்பாடச் செய்தியைச் சொல்வதுபோலச் சொல்லுக.

3. எங்கள் சுற்றுலா

1. என் பெயர் *மணிவண்ணன்*. நான் சென்னைத் திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு மாணவன். எங்கள் வகுப்பு ஆசிரியரும் தமிழாசிரியரும் எங்களை அழைத்துக் கொண்டு *நீலகிரி*க்குச் சென்றுவரத் திட்டமிட்டனர்; சென்னை மையைப் (சென்டிரல்) புகைவண்டி நிலையத்திலிருந்து இரவு எட்டு மணி அளவில் புறப்படும் நீலகிரி விரைவு வண்டியில் எங்களுக்கு ஒரு பெட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டுப் பாளையம் புகைவண்டி நிலையத்திலிருந்து எங்களைக் குன்னூர், கோத்தகிரி, நீலகிரி ஆகிய மலை நகரங்களுக்குக் கொண்டுசெல்லப் பெரிய உந்து வண்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. நீலகிரியிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் நாங்கள் தங்கக் கடித வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டது. மலைச் செலவை எண்ணி நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

2. நாங்கள், சென்ற வியாழக்கிழமை இரவு சென்னையைவிட்டுப் புறப்பட்டோம். நாங்கள் ஏறிக்கொண்ட நீலகிரி விரைவு வண்டி மெய்யாகவே விரைந்து ஓடியது. சென்னைக்கு ஏறத்தாழ நாற்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள அரக்கோணம் சந்திப்பு வரையில் நாங்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டே சென்றோம். அந்த இரவு முழு நிலா இரவு. ஆதலால் நிலவு பால்போலக் காய்ந்துகொண்டிருந்தது. நாங்கள் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை இருந்த இயற்கைக் காட்சிகளையும் செயற்கைக் காட்சிகளையும் நிலவு வெளிச்சத்தில் நன்றாய்ப் பார்த்து மகிழ்ந்தோம்.

3. வண்டி அரக்கோணத்திற்கப்பால்சென்று கொண்டிருந்தபோது நாங்கள் உறங்கிவிட்டோம்; காலை ஆறு மணியளவில் துயில் நீத்து எழுந் தோம்; காலைக்கடன்களை முடித்துப் பல் விளக் கினேம்; வண்டியின் இரு புறங்களிலும் பார்வை யைச் செலுத்தினேம். வண்டி ஏறத்தாழ ஏழரை மணியளவில் கோயம்புத்தூர்ப் புகைவண்டி நிலை யத்தை அடைந்தது. நாங்கள் அங்குக் காலைச்



நீலகிரி இருப்புப்பாதை—குன்னூர் அருகில் ஒரு காட்சி

சிற்றுண்டி உட்கொண்டோம். பின்பு எங்கள் வண்டி ஏறத்தாழ ஒன்பது மணியளவில் மேட்டுப் பாளையத்தை அடைந்தது. கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் வரையில் நிலம் சிறிது மேடாகவே காணப்பட்டது. எனவே, மேட்டுப் பாளையம் என்னும் பெயர் மிக்க பொருத்தமானதே யாகும்.

4. ஒரு பெரிய உந்துவண்டி எங்களை ஏற்றிக் கொண்டு மேட்டுப்பாளையத்திலிருந்து பத்தரை மணி அளவில் புறப்பட்டது. அது சிறிது நேரம் நிலத்தின்மீது ஓடிக்கொண்டிருந்தது. மலையடி வாரத்தை நெருங்க நெருங்கப் பாதையின் இரு மருங்கிலும் கமுகந் தோப்புக்கள் காணப்பட்டன. ஒவ்வொரு கமுகமரமும் தென்னைமரத்தைவிட உயர்ந்திருப்பதைக் கண்டு நாங்கள் வியப்புற்றோம். "மலைவளம் இங்கிருந்துதான் தொடங்கு



நீலகிரிமலை—இயற்கைக் காட்சி

கிறது. நீங்கள் பாதையின் இரு பக்கங்களிலும் காணப்படும் காட்சிகளையும் வண்டி செல்லும் மலைப்பாதையையும் பார்த்துக்கொண்டே வாருங்கள். பாதையில் மேடுகளும் பள்ளங்களும் ஆங்காங்குக் காணப்படும். பாதையின் ஒருபால் மலைப் பிளவுகளும், ஆழ்ந்த பள்ளங்களும் காணப்படும். வண்டி அவற்றில் விழுந்துவிடும் என்று நீங்கள் அஞ்ச வேண்டா," என்று எங்கள் ஆசிரியர் கூறினர். அப்போது வண்டி மலைப் பாதையில் ஏறத் தொடங்கியது.

5. மலைப்பாதை, மலைச்சரிவுகளைச் செதுக்கி ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளது. பாதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் வண்டிகள் ஒதுங்கத் தக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டினால் போக்குவரவில் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ள இடமில்லை. சில மூலைகளில் மலையின் உயரம் குறிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மலைகள் பலவாகும். எங்கள் உந்துவண்டி அப்பல மலைகளையும் கடந்து சென்றது. பாதையின் ஒருபுறம் பள்ளத்தாக்காக அமைந்துள்ளது; மற்றொருபுறம் மலைப்பகுதியாகக் காண்கிறது. பள்ளத்தாக்கில் வானளாவிய மரங்களும் செடிகளும் கொடிகளும் பசுமைக் காட்சியை வழங்கின.

6. பாதையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது. "நீங்கள் இச் சரிவில் என் பின்னே நடந்து வாருங்கள். மரம், செடி, கொடிகளைக்கொண்ட இன்பப் பூங்கா ஒன்று இருக்கிறது. அதனைப் பார்த்து மகிழுங்கள்," என்று எங்கள் ஆசிரியர் கூறினார். நாங்கள் அவர் பின்னே சென்று அப்பூங்காவைக் கண்டோம். நாங்கள் அதுவரையில் காணாத பல புதிய செடிகளையும், கொடிகளையும், கடுக்காய்மரம் போன்ற மரவகைகளையும், நாகலிங்கமலர்போன்ற மலர் வகைகளையும் கண்டு வியந்தோம்.

7. உந்துவண்டி சென்ற பாதையில் நாங்கள் சில அருவிகளைப் பார்த்தோம். யூகலிப்ட்ஸ் தைல மரங்கள் மிக்க உயரமாக வளர்ந்துள்ளன. அவற்றின் மணம் காற்றில் மிதந்து வந்தது. சிறிது நேரத்தில் நாங்கள் மலைமீதும் மலைச் சரிவுகளிலும் அமைந்திருந்த ஒரு நகரத்தைக் கண்டோம். அக் காட்சி எங்கள் உள்ளங்களைக் கவர்ந்தது.

"இது நீலகிரி மலைகளின்மீதுள்ள பெரிய நகரங்களுள் இரண்டாவது; முதல் நகரம் உதகமண்

டலம். இதன் பெயர் **குன்னூர்.** இப்பெயர் ‘குன்றூர்’ என இருந்திருக்கலாம். இது கோவையி லிருந்து ஏறத்தாழ நூற்று இருபது கிலோமீட்டர் தொலைவில் இருப்பது; கடல் மட்டத்திற்குமேல் ஆயிரத்து அறுநூற்று எண்பது மீட்டர் உயரத்தில் உள்ளது. மேட்டுப்பாளையத்திலிருந்து உதகமண்ட லத்திற்குச் செல்லும் புகைவண்டிப் பாதை இதன் வழியாகச் செல்கிறது. இது வாழ்வதற்கு மிகச் சிறந்த இடம். ‘சிம்ஸ் பூங்கா,’ ‘காட்டேரி நீர் வீழ்ச்சி,’ ‘புலிப்பாறை’ முதலிய இடங்கள் இங்குக் கண்டு மகிழத் தக்கவையாகும். இங்கு நாய்க் கடியை நீக்கும் மருத்துவ நிலையம் ஒன்று இருக் கிறது,” என்று எங்கள் ஆசிரியர் மொழிந்தார். பின்பு நாங்கள் ‘சிம்ஸ் பூங்கா’ முதலிய இடங் களைப் பார்வையிட்டோம்.

8. பின்னர் நாங்கள் குன்னூருக்குமேல் பதி னெட்டுக் கிலோமீட்டர் தொலைவிலுள்ள **கோத்த கிரி**க்குச்சென்றோம். “இவ்வூர் கடல் மட்டத்துக்கு மேல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது மீட்டர் உயரத்திலுள்ளது. இதுவே நீலகிரி மலைகளின்மீது அமைக்கப்பட்ட முதல் கோடை வாழ்விடமாகும்,” என்று ஆசிரியர் அறைந்தார். எங்கள் உந்துவண்டி அருவங்காடு முதலிய ஊர்களைக் கடந்து, மாலை மூன்றுமணி அளவில் உதகமண்டலத்தை அடைந்தது. நாங்கள் ஓர் உயர்நிலைப் பள்ளியில் தங்கினோம்; பகல் உணவு உட்கொண்டோம்; பின்பு ஊரின் பல பகுதிகளைப் பார்வையிட்டோம்.

9. **உதகமண்டலம்** நான்கு குன்றுகளுக் கிடையில் அமைந்துள்ளது. அவற்றுள் ஒன்றின் பெயர் **தொட்டபெட்டா** என்பது. அதன் கொடு முடி நீலகிரி மலைகளில் உள்ள கொடுமுடிகளில் மிகவும் உயர்ந்தது. அதன் உயரம் ஏறத்தாழ இரண்டாயிரத்து அறுநூற்றுப்பத்து மீட்டராகும். குன்றுகளின் அடிவாரங்களிலும் சரிவுகளிலும்

சோலைகள் உள்ளன. வீடுகளும் அலுவலகங்களும் அவற்றினிடையில் கட்டப்பட்டுள்ளன. நாங்கள் அங்கு ஓர் அழகிய ஏரியைக் கண்டோம். கிரிக்கெட்டு விளையாட்டுவெளி மிகப் பெரியதாக அமைந்துள்ளது. நீலகிரியிலுள்ள பூங்கா அரசினர் பாதுகாப்பில் உள்ளது. அது மிகத் தூய்மையாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பின்பு நாங்கள் '**தொதவர்**' என்னும் மலைவாழ்மக்களைக் கண்டோம்; அவர்களுடைய குடிசைகளைப் பார்வையிட்டோம்.

10. நாங்கள் இரவு உணவுக்குப் பின்பு பள்ளி மண்டபத்தில் ஒன்று கூடினோம். அப்பொழுது எங்கள் ஆசிரியர் எங்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார் :

" நீலகிரி மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலைகளையும் மேற்குத்தொடர்ச்சி மலைகளையும் இணைக்கின்றன. நீலகிரி மலைகளின் சராசரி உயரம் ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது மீட்டராகும். இம்மலைகளின்மீது அமைந்துள்ள மேட்டு நிலத்தின் மொத்த நீளம் ஏறத்தாழ ஐம்பது கிலோ மீட்டர்; அகலம் முப்பது கிலோ மீட்டர். இம்மலைநாடு ***நீலகிரி மாவட்டம்*** எனப்படும். இங்குப் பல ஆறுகள் பாய்கின்றன. அவற்றுள் பைகாரா, குண்டா, காட்டேரி என்பவை குறிப்பிடத் தக்கவை. பைகாரா ஆற்றுநீரைக்கொண்டு மின்சாரம் உண்டாக்கப்படுகிறது.

" இம்மாவட்டத்தின் பரப்பில் பாதி அளவுக்கு மேல் அடர்ந்த காடுகள் உள்ளன. இங்கு மழை மிகுதி; வெப்பம் குறைவு. இம்மாவட்டத்தில் தேயிலை, காப்பி, யூகலிப்ட்ஸ், கொய்னா, ஆரஞ்சு, ரப்பர்த் தோட்டங்கள் முதலியவை வளத்துடன் இருக்கின்றன. உருளைக்கிழங்கு, சம்பா கோதுமை, காய்கறிகள், பழவகைகள், ராகி, சாமை முதலி

யனவும் விளைகின்றன. இங்கிருந்து மைசூருக்குச் செல்ல நல்ல மலைப்பாதை இருக்கிறது; அத்துடன் இம்மாவட்டத்துச் சிற்றூர்கள் பலவற்றிற்குச் செல்லவும் உந்துவண்டிப் பாதைகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

"இம்மாவட்டத்திலுள்ள சிற்றூர்களில் கன்னடமொழி பேசும் மக்களே மிகுந்துள்ளனர். அவர்கள் காடுகளையும் மலைச்சரிவுகளையும் பண்படுத்தி விளைநிலங்களாக்கியுள்ளனர். அவர்கள் மிக்க உழைப்பாளிகள். பெரிய நகரங்களில் தமிழ் பேசும் மக்களும் வாழ்கின்றனர். அவருள் ஒரு சிலர் செல்வ வளத்துடன் இருக்கின்றனர்."

11. நாங்கள் மறுநாள் பகல் ஒரு மணி வரையில் உதகமண்டலத்திலுள்ள ஆளுநர் மாளிகை, சட்டமன்றக் கட்டடம் முதலிய இடங்களைப் பார்வையிட்டோம்; பின்பு உந்துவண்டியில் ஏறி இயற்கைக் காட்சிகளைக் கண்டுகொண்டே மேட்டுப்பாளையம் வந்துசேர்ந்தோம். அங்கிருந்து நீலகிரி விரைவு வண்டியில் ஏறி, மறுநாள் காலையில் சென்னையை அடைந்தோம். நாங்கள் இம்முறை மேற்கொண்ட சுற்றுலா மிக்க இன்பத்தைத் தந்தது. நாங்கள் இச்சுற்றுலாவை என்றும் மறவோம்.

அருஞ்சொற்பொருள்

உந்துவண்டி - மக்களை ஏற்றிச்செல்லும் பஸ். செலவு - பிரயாணம். சந்திப்பு - பல புகைவண்டிப் பாதைகள் சந்திக்கும் இடம். துயில் - தூக்கம். நீத்து - விட்டு. சிற்றுண்டி - சிறுமை + உண்டி; அளவில் சிறிய உணவு. பால் - பக்கம். வழங்கின - கொடுத்தன. கமுகந்தோப்பு - பாக்குமரத்தோப்பு. தைலம் - நெய். அறைந்தார், மொழிந்தார் - சொன்னார். கொடுமுடி - மலைச்சிகரம். ஆளுநர் - கவர்னர்.

கேள்விகள்

1. ஆசிரியர் சுற்றுலாவிற்காகச் செய்த முன்னேற்பாடு கள் யாவை?
2. மலைப்பாதை எப்படி அமைக்கப்பட்டுள்ளது?
3. பிள்ளைகள் மலைப்பாதையில் சென்றபோது கண்ட காட்சிகள் யாவை?
4. மாணவர், வழியிலுள்ள இன்பப் பூங்காவில் பார்த் தவை யாவை?
5. குன்னூரைப்பற்றி யாது அறிவாய்?
6. உதகமண்டலம் எவ்வாறு அமைந்துள்ளது?
7. பிள்ளைகள் உதகமண்டலத்தில் பார்த்தவை யாவை?
8. நீலகிரிமலைகளைப்பற்றி ஆசிரியர் கூறிய விவரங்கள் யாவை?

பயிற்சி

1. வேண்டும் × வேண்டா; 'வேண்டாம்' என்று கூறுவதோ, எழுதுவதோ தவறு. இதை நன்கு நினைவில் வை.

2. நெருங்க நெருங்க—இஃது அடுக்குத் தொடர்; இது போன்ற அடுக்குத் தொடர்கள் ஆறினைக் கூறுக.

3. சேர்த்துக் கூறுக:—வர + திட்டமிட்டனர், உயர் நிலை + பள்ளி, பார்வையை + செலுத்தினோம், ஒதுங்க + தக்க, இன்பம் + பூங்கா, வாழ்விடம் + ஆகும்.

4. பிரித்துக் காட்டுக:—மேட்டுப்பாளையம், மணியள வில், பத்தரை, வியப்புற்றோம், பூங்கா, தொலைவிலுள்ள, ஆற்றுநீர், மலைப்பாதை, சிற்றூர்.

5. நீலகிரி மலைகளைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

4. சங்க காலப் புலவர்கள்

1. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்பன எட்டுத்தொகை நூல்கள் எனப்படும். இவை ஏறத்தாழக் கி. பி. 300க்கு முற்பட்ட சங்ககாலப் புலவரால் பாடப் பெற்றவை. இப்பாடல்கள் சங்ககாலப் புலவர் வாழ்க்கை, நற்பண்புகள் முதலியவற்றை விளக்குவனவாகும். அக்காலப் புலவர்கள் பைந்தமிழைப் பாங்குறக் கற்றவர்; பணிவு, இன்சொல், அன்புடைமை முதலிய உயர்ந்த பண்புகளைப் பெற்றவர்; பிறர் துயரம் காணப்பொறுதவர்; உண்மை நட்பினரைத் துன்பத்திலும் பிரியாதவர்; உண்மையே பேசும் இயல்பினர்.

2. *பெருஞ்சித்திரனார்* என்பவர் ஒரு புலவர். அவர் *குமணன்* என்ற மன்னனைக் கண்டு தமது குடும்பத்து வறிய நிலையைக் கீழ்வருமாறு படம் பிடித்துக் காட்டினர் :

"பெரும, என் தாய் வயது முதிர்ந்தவள்; 'என் உயிர் இன்னும் போகவில்லையே!' என்று சொல்லிக்கொண்டு கோலூன்றி நடந்து துன்பப் படுகிருள். பிள்ளைப்பேற்ருலும் வறுமையாலும் என் மனைவியின் உடல் வற்றிவிட்டது. அவள் குப்பையில் தானே முளைத்த கீரையைப் பறித்து உப்பில்லாமல் சமைப்பாள். நாங்கள் அதனை உண்போம். அவளது ஆடை மாசுண்டு கிடக்கும். குழந்தை அவளது மார்பைச் சுவைத்துப் பால் இல்லாமல் அழும். அவள் என் முகம் நோக்கி அழுவாள். அந்நிலையில் யான் நின்முகம் நோக்கி வந்தேன். அரசே, நீ மனமகிழ்ச்சியின்றி

யானையைக் கொடுப்பினும் ஏற்றுக்கொள்ளேன்; மனமகிழ்ச்சியோடு தினையளவு தரினும் அதனைப் பனையளவாக மதித்து ஏற்றுக்கொள்வேன்.''

3. *பெருந்தலைச்சாத்தனார்* என்ற புலவர் கோடைமலைத் தலைவனான **கடியநெடுவேட்டுவன்** என்பவனிடம் சென்று பரிசில் வேண்டினார். அவன் எக்காரணத்தாலோ, அவர்க்கு விரைந்து பரிசில் கொடாது கால நீட்டிப்புச் செய்தான். புலவர் அது கண்டு வெகுண்டார்; அவனை நோக்கி, "தலைவனே, செல்வத்தால் சிறப்புற்ற முடியுடை வேந்தர் மூவரேயாயினும், அவர் எம்மை விரும்பி வரவேற்று இன்முகத்துடன் அளிக்கும் பொருளையே பெறுவோம்; எம்மை மதியாது ஈயும் பொருளைப் பெறமாட்டோம்,'' என்று கூறி அவ்விடத்தை விட்டு அகன்றார்.

4. கண்டீரக்கோப் பெருநள்ளி என்பவன் தோட்டி மலைநாட்டுச் சிற்றரசன். அவன் சிறந்த கொடையாளி. அவன் தம்பி **இளங்கண்டீரக்கோ** என்பவன். புலவர்கள் அவனிடம் நெருங்கிப் பழகினர். ஒரு நாள் நன்னன் என்னும் சிற்றரசனது மரபில் வந்த **இளவிச்சிக்கோ** என்பவன் இளங்கண்டீரக்கோவுடன் அமர்ந்திருந்தான். அப்பொழுது *பெருந்தலைச் சாத்தனார்* அங்குச் சென்றார். அவர் மிக்க முகமலர்ச்சியுடன் இளங்கண்டீரக்கோவைத் தழுவி மகிழ்ந்து உரையாடினார். புலவர் தன்னைத் தழுவாமையையும் தன்னுடன் பேசாமையையும் கண்டு இளவிச்சிக்கோ நெருப்பிற்பட்ட புழுவெனத் துடித்தான். அவன் புலவரை நோக்கி, "என்னைத் தழுவாமைக்குக் காரணம் யாது?'' என்று பணிவுடன் வினவினான்.

5. புலவர் அவனை நோக்கி, "கண்டீரக் கோவும் அவன் பின்னவனான இவனும் புலவர்

களைப் போற்றிப் பாதுகாப்பவர்கள். இவர்தம் வாழ்வரசியாரும் புலவர் மாட்டுப் பேரன்புடையவர்; தம் கணவர் வளமனையில் இல்லாத பொழுதும் புலவரை மகிழ்ச்சியோடு வரவேற்கும் இயல்பினர்; இச்சிறப்புக்களை நோக்கி நான் இவனைத் தழுவினேன். நீ நன்னன் என்னும் கொடையாளி மரபில் வந்தவன்; நல்லியல்புகளை உடையவன். ஆயினும் உன் முன்னோனை அந்நன்னன் பிற்காலத்தில் பெண்கொலை புரிந்தான். அவனுக்குப் பின்வந்த உன் முன்னோருள் ஒருவன் புலவரைக் கண்டதும் வாயிற் கதவுகளை மூடிவிட்டான். இங்ஙனம் உன் முன்னோர் செய்த தீச்செயல்களைப் புலவர் உலகம் மறக்கவில்லை. ஆதலால் அந்நாள் முதலாக உங்கள் மலையைப் புலவர் பாடுதல் ஒழிந்தது. யான் உன்னைத் தழுவாமைக்குக் காரணம் இதுவேயாகும்,'' என்று விடை பகர்ந்தார். புலவருடைய அஞ்சாமையும் உண்மை உரைக்கும் ஆற்றலும் இதிலிருந்து விளங்குகின்றன அல்லவா?

6. **ஔவையார்** என்பவர் பெண்பாற் புலவர். அவர் உலகியல் அறிவு மிக்கவர். அப் பெருமாட்டியார் தகடூரை ஆண்ட **அதியமான் நெடுமானஞ்சி** என்பவனிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் எக்காரணத்தாலோ பரிசில் தரக் காலம் தாழ்த்தினன். ஔவையார் வெகுண்டார்; அரண்மனையைவிட்டு வெளியேறினர்; வாயிற் காவலனைக் கண்டு, "வாயில் காப்போய், உன் அரசன் தன் தகுதியை அறியான். அவன் அதனை அறியாவிடினும் என் தரத்தையும் அறிந்தவனாகத் தெரியவில்லையே! இவ்வுலகத்தில் அறிவும் புகழும் உடையவர் இன்றும் வாழ்கின்றனர். எனது புலமையை மதித்துப் பரிசில் வழங்குவோர் இருக்கின்றனர். யான் அவர்களை நோக்கிச் செல்லுகின்றேன்.

இதனை உனது அரசனுக்குக் கூறுவாயாக,'' என்று கூறினர்.

7. *வெளிமான்* என்பவன் ஒரு சிற்றரசன். பெருஞ்சித்திரனர் ஒரு முறை அவனைக் காணச் சென்றார். அப்பொழுது வெளிமான் இறந்துவிட்டான். அவன் தம்பியான *இளவெளிமான்* அரசனுனன். புலவர் அவனிடம் சென்று தமது வறுமையை விளங்க உரைத்தார். இளவெளிமான் புலவர் அருமை அறியாதவன்; புலவர்க்கு ஈயும் மனம் இல்லாதவன். ஆதலால் அவன் சிறிதளவு பொருள் கொடுக்க முயன்றான். மானவுணர்ச்சி உடைய புலவர் அதனைப் பெருமல் வெளியேறினர்; நேரே குமண வள்ளலிடம் சென்றார்; யானையையும் பல பொருள்களையும் பரிசிலாகப் பெற்றார்; யானைமீது அமர்ந்து தம் ஊர் நோக்கித் திரும்பினர்.

8. பெருஞ்சித்திரனர் வழியில் இளவெளிமானது வளமனைக்குச் சென்றார்; தாம் ஏறிச் சென்ற யானையை அவனுக்குக் காட்டினர்; "மன்னனே, அகன்ற இவ்வுலகில் புலவரைப் பாதுகாப்பவன் நீ ஒருவனே அல்லன். அப்பெரு மக்கள் பலர் உள்ளனர். புலவர்தம் தகுதி அறிந்து கொடுப்பவர் உளர் என்பதை எனது யானையைக் கொண்டும் என்னிடமுள்ள பரிசில்களைக் கொண்டும் அறிந்துகொள்,'' என்று கூறி அகன்றார்.

9. சங்ககாலப் புலவருள் *கபிலர்*போன்றவர் நட்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாவர். தமிழரசர் போரின்றி வாழவேண்டும் என்பதில் *ஔவையார்* போன்றவர் மிக்க கவலைகொண்டனர். அரசனும் அரசியும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று *பரணர்* போன்ற புலவர் பெருமக்கள் பாடுபட்டனர். இங்ஙனம் சங்ககாலப் புலவர் உயர்ந்த

பண்புகள் பெற்று விளங்கினர் என்பதை அவர் தம் பாடல்கள் உணர்த்துகின்றன.

அருஞ்சொற்பொருள்

பைந்தமிழ் - பசுமை + தமிழ் = இளந்தமிழ். பாங்குற- அழகு பொருந்த. இன்சொல் - இளமை + சொல். மாசு - அழுக்கு. கொள்வேன் × கொள்ளேன். கோடைமலை - கோடைக்கானல் மலை. வெகுண்டார் - கோபித்தார். இளங் கண்டீரக்கோ, கண்டீரக்கோவின் இளவல், தம்பி. பேசுதல் × பேசாமை. தழுவுதல் × தழுவாமை. வாழ்வரசி - மனைவி. வளமனை - பல வசதிகளும் பொருந்திய வீடு. கொடையாளி - வள்ளல். மரபு - பரம்பரை. நன்னன் பெண் கொலை புரிந்தமை: நன்னனது மாந்தோப்பிலிருந்து ஒரு மாங்காய் வாய்க்காலில் மிதந்து வந்தது. ஒரு பார்ப்பனப் பெண் அதனை எடுத்து உண்டாள். நன்னன் அவளைக் கொல்லத் துணிந்தான். அவளது தந்தை எண்பத்தொரு யானைகளும் அவள் நிறையளவு பொன்னால் செய்யப்பட்ட பாவை ஒன்றும் கொடுக்க முன் வந்தான். நன்னன் அவற்றை ஏற்க மறுத்து அவளைக் கொன்றான். பெருமாட்டி × பெருமான். தகடூர் - சேலம் மாவட்டத்திலுள்ள தருமபுரி என்னும் ஊர். வெகுண்டார் - சினங்கொண்டார்; வெகுள்- பகுதி. தரம் - மதிப்பு. சிறிதளவு × பெரிதளவு. அகன்றார் - நீங்கினார்; அகல் - பகுதி. கபிலர் - பாரிவள்ளலுடைய இன்பத்திலும் துன்பத்திலும் உடன் இருந்தவர். ஔவையார் - அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் நடக்க இருந்த போரைத் தடுத்தவர். பரணர் - பேகனுக்கு அறிவுரை கூறி அவனை மனைவியோடு வாழும்படி செய்தவர். பகர்ந்தார் - சொன்னார்.

கேள்விகள்

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
2. சங்க காலப் புலவர் இயல்புகள் யாவை?
3. பெருஞ்சித்திரனார் தம் வறுமையை எங்ஙனம் சித்திரித்தார்?

4. பெருந்தலைச் சாத்தனார் கோடைமலைத் தலைவனை நோக்கிக் கூறியது யாது?

5. பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக்கோவைத் தழுவினமைக்குக் காரணம் என்ன?

6. பெருந்தலைச் சாத்தனார் இளவிச்சிக்கோவைத் தழுவாமைக்குக் காரணம் என்ன?

7. ஔவையாரது மானவுணர்ச்சிக்குச் சான்று யாது?

8. பெருஞ்சித்திரனார் இளவெளிமானிடம் கூறியது யாது?

பயிற்சி

1. விளக்கி வரைக:—கபிலர் நட்பிற்குச் சிறந்தவர், ஔவையார் தமிழரசர் போரின்றி வாழவேண்டும் என்பதில் கவலை கொண்டவர்.

2. பிரித்துக் காட்டுக:—புறநானூறு, குறுந்தொகை, பைந்தமிழ், கோலூன்றி, திணையளவு, மனமகிழ்ச்சி, இன்முகம்.

3. இப்பாடப் பொருளைச் சுருக்கி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

5. அறிவியல் அறிஞர் மார்க்கோனி

1. தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் சிறந்த அறிவியல் அறிஞர். அவர் அமெரிக்க நாட்டவர். அப் பெரியார் தமது இடைவிடா ஆராய்ச்சியால் மின்விளக்குக்களேயும் மின் விசிறிகளேயும் இசைத் தட்டுக்களேயும் அவற்றை இயக்கும் இயந்திரத்தையும் பல்வேறு புதிய கருவிகளேயும் கண்டறிந்து புகழ்பெற்றவர். இங்ஙனம் அறிவியல் துறையில் உலகிற்குப் பயன்பட்ட பெரியோர் பலராவர். அவருள் வானெலிகண்ட ***மார்க்கோனி*** என்பவரும் ஒருவர்.

2. மார்க்கோனியின் முழுப்பெயர் ***குக்லியல்மோ மார்க்கோனி*** என்பது. இவர் இத்தாலி நாட்டினர். இவர் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் போலோஞ என்னும் நகரில் 1874 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 24 ஆம் நாளில் தோன்றினர். இவர் தந்தையார் பெயர் சிஞோர் மார்க்கோனி என்பது. மார்க்கோனிக்கு மூத்தவர் பெயர் ஆல்போன்சு என்பதாம். இவருடைய அன்னேயார் நன்கு படித்தவர்; இசைப் பயிற்சி மிக்கவர்; சிறந்த ஒழுக்கமுடையவர். அவர் தம் மக்களேக் கண்ணும் கருத்துமாய் வளர்த்துவந்தார்; அவர்களுக்குத் தாமே கல்வி கற்பித்தார்; இசைப் பயிற்சியையும் அளித்தார்; பல நாட்டுப் பெரு மக்களுடைய வரலாறுகளே அவ்வப்போது கூறி வந்தார்.

3. மார்க்கோனி பள்ளிப் படிப்பை விரும்பவில்லே. இவர் தம் வீட்டின் பின்புறத்திலிருந்த திராட்சைத் தோட்டத்தில் அமர்ந்து இயற்கைப் பொருள்களே ஆய்ந்துவந்தார்; கள்ளிப்பழங்களேப் பிழிந்து எடுத்த சாற்றைக்கொண்டு எழுதிப்

பார்த்தார். இவர் இங்ஙனம் ஒவ்வொரு பொருளை யும் ஆராயத் தொடங்கினர். இவர் விவிலியநூல், கிரேக்கநாட்டு வரலாறு, புதுமை கண்ட பெரு மக்களின் வரலாறுகள், அறிவியல் கட்டுரைகள் ஆகியவற்றை விரும்பிப் படித்தார்; "யான் எப் பாடுபட்டாயினும் உலகம் போற்றத்தகும் புதுமை ஒன்றைக் கண்டறிதல்வேண்டும்," என்று தம்முள் அவ்வப்போது கூறிக்கொண்டார்.

4. மார்க்கோனி தாமஸ் ஆல்வா எடிச னுடைய ஆராய்ச்சிகள் பற்றிய கட்டுரைகளைப் படித்தார்; தந்திக் கலையில் வல்ல பெரியார் ஒருவருடன் நட்புக்கொண்டார்; தந்தியடிக் கும் கலையை அவர்பால் கற்றறிந்தார்; மின் ஆற்றலைப் பற்றியும் அவரிடம் கேட்டறிந்தார். அன்னையார் மார்க்கோனியின் போக்கை நன்கு அறிந்தார்; அவருக்கு வீட்டின் மாடியில் ஒரு பகுதியை உதவினர்; அப்பகுதியிலிருந்து ஆராய்ச்சிகள் நிகழ்த்த இசைவு அளித்தார்; "மகனே, பொறுமையுடன் ஆராய்ச்சி செய்; முயன்றல் முடியாதது இல்லை", என்று அடிக் கடி ஊக்கி வந்தார்.



மார்க்கோனி

5. மார்க்கோனி இத்தாலி நாட்டை அடுத்த ஆல்ப்ஸ் மலைப்பகுதிக்கு அண்மையில் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு வயது இருபது. அவர் அங்கே இருந்தபொழுது

ஒரு செய்தித்தாளில் அறிவியல் கட்டுரை ஒன்றைப் பார்த்தார். செருமானிய நாட்டு அறிவியல் அறிஞர் ஒருவர் அதனை எழுதியிருந்தார். 'வான வெளியில் ஆற்றல் மிக்க ஈர்ப்பு அலைகள் பரந்துள்ளன. அவ்வலைகள் ஒளிக்கதிர் அலைகளைப் போலக் கண்களைத் தாக்குவன அல்ல' என்பதே அக்கட்டுரையின் சுருக்கம்.

6. வானவெளியில் ஆற்றல் மிக்க ஈர்ப்பு அலைகள் நிறைந்திருத்தல் கூடும் என்று மார்க்கோனி முன்னரே எண்ணியிருந்தார்; அக்கட்டுரையைப் படித்ததும் தாம் எண்ணியது சரி என்பதை உணர்ந்தார்; அந்த ஈர்ப்பு அலைகளின் வழியாகச் செய்திகளை அனுப்புதல் கூடுமோ என்பதை ஆராயவேண்டும் என்று துணிந்தார்; ஒலி அலைகளை உண்டாக்கி, தந்தியின் மூலம் செய்திகளை அனுப்புதற்குரிய கருவியால் நெடுந் தொலைவிலுள்ள இடங்களுக்கும் செய்திகளை அனுப்பக்கூடும் என்று நம்பினார். அவர் அன்று முதல் அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டார்.

7. கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் ஒரு கட்டுரை வரைந்தார்; 'மின் காந்த அலைகள் நம் பார்வைக்குப் புலப்படா. ஆயினும் அவை விண்ணில் நிரம்பியுள்ளன. அவை ஒரு மணித்துளிக்கு 2,79,000 கி. மீ. தொலைவு விரைவில் செல்லுகின்றன,' என்பதை அக்கட்டுரையில் வெளியிட்டிருந்தார். இச்செய்தியை அடிப்படையாகக்கொண்டு செருமானிய நாட்டைச் சேர்ந்த எர்ட்ஸ் என்னும் அறிவியல் அறிஞர் பல ஆராய்ச்சிகளை நிகழ்த்தினார்; மின்பொறி, எத்திசையிலும் செல்லும் ஆற்றல் உடையது என்னும் உண்மையைக் கண்டறிந்தார். மார்க்கோனி இந்த அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுகளை நன்கு அறிந்தார்; அம்முடிவுகளை

அடிப்படையாகக்கொண்டு தமது ஆராய்ச்சியை நிகழ்த்தலானுர்.

8. மார்க்கோனி பல மாதங்கள் ஆய்ந்து ஆய்ந்து மின்விசைப்பொறியை உண்டாக்கும் வழிகளைக் கண்டறிந்தார்; இறுதியில் ஒலி வாங்கிக் கருவி ஒன்றைச் செய்து முடித்தார்; ஒலி அனுப்பும் கருவியையும் செய்து முடித்தார்; ஒரு நாள் தம் முன்னவரான ஆல்போன்சைச் சிறிது தொலைவில் இருக்குமாறு கூறினுர்; தாம் அமைத்த ஒலி வாங்கிக் கருவியை அவரிடம் வைத்தார்; தாம் இருந்த இடத்திலிருந்தே ஒலியை எழுப்பினுர். அவ்வொலி அவர் தமையனுருக்கு நன்கு கேட்டது. தமது முயற்சி பயனளித்ததைக்கண்டு அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

9. பின்பு மார்க்கோனி தம் வீட்டிற்கு அருகிலிருந்த மலையின் ஒரு பக்கத்தில் ஒலி அனுப்பும் கருவியை அமைத்தார்; அம்மலையின் மற்ெருரு பக்கத்தில் ஒலி வாங்கும் கருவியை அமைத்தார்; தம் தமையனுரை ஒலி வாங்கும் கருவியின் பக்கத்தில் இருக்கச் செய்தார்; அவர் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தார்; தாம் அனுப்பும் ஒலி கேட்கிறது என்பதற்கு அறிகுறியாக ஒவ்வொரு முறையும் அத்துப்பாக்கியிலிருந்து வேட்டு எழுப்புமாறு வேண்டினுர்; பின்பு மார்க்கோனி ஒலியனுப்பும் கருவியின் வாயிலாகச் செய்திகளை அனுப்பலானுர். தமையனுர் ஒவ்வொரு செய்திக்கும் வேட்டு எழுப்பிக்கொண்டே இருந்தார். இச்சோதனை மார்க்கோனிக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. மார்க்கோனி ஒலி கேட்கும் தொலைவினை மிகுதிப்படுத்தினுர்; அதற்கு ஏற்ப ஏரியலின் நீளத்தையும் படிப்படியாக மிகுதிப்படுத்திவந்தார். அவர் இவ்வாறு பல சோதனைகளைச் செய்து சிறந்த கருவிகளைச் செய்து முடித்தார்.

10. மார்க்கோனி நாட்டுப்பற்று உடையவர். தாம் கண்டறிந்த புதுமையை முதலில் தம் நாட்டிற்கு உரிமையாக்க விரும்பினர். ஆயின், இத்தாலிய அரசாங்கம் அவரை மதிக்கவில்லை ; பொதுமக்களும் பொருட்படுத்தவில்லை. மார்க்கோனியின் அன்னையார் தம் மைந்தருக்கு ஆறுதல் கூறினர். அவ்வம்மையார் ஆராய்ச்சிக் கருவிகளோடு தம் மைந்தரை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார் ; தமக்குத் தெரிந்த பெரியோர்களுக்குத் தம் மைந்தரை அறிமுகப் படுத்தினர். அதன் பயனாகத் தொள்ளாயிரம் அடிகள் (270 மீட்டர்) உயரம்கொண்ட அஞ்சல் நிலையக் கட்டடம் ஒன்றில் மார்க்கோனி தம் சோதனையை நிகழ்த்திக் காட்டினர்.

11. மார்க்கோனி கப்பல் அதிகாரிகளின் முன்னிலையில் தம் ஆராய்ச்சியை வெற்றியுடன் நிகழ்த்தினர் ; பின்பு எட்டுக் கல் (12 கி.மீ.) தொலைவுக்கு அப்பால் செய்தியை அனுப்பிக் காட்டினர். இவ்வியத்தகு சாதனையைக் கண்ட ஆங்கிலேயர் இவரைப் பாராட்டினர். ஆங்கிலச் செய்தித்தாள்கள் இவரது சாதனையை வியந்து பாராட்டின. இச்செய்தி இத்தாலி நாட்டுக்கு எட்டியது. இத்தாலி நாட்டு மன்னரும் அறிவியல் அறிஞர்களும் மார்க்கோனிக்கு அழைப்பு விடுத்தனர். தாய்நாடு மீண்ட மார்க்கோனி தாம் கண்டறிந்த புதுமையை நிகழ்த்திக் காட்டினர்.

12. மார்க்கோனி இங்கிலாந்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவினர் ; அங்குக் கம்பியில்லாத் தந்திக் கருவிகளைச் செய்ய முற்பட்டார் ; மேலும் மேலும் ஆராய்ந்து சிறந்த கருவிகளை அமைத்தார் ; உலகமே வியக்கும்படி அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் செய்திகளை அனுப்புவதில் வெற்றி கண்டார். அவ்வரிய சாதனையைக் கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அமெரிக்க

அறிவியல் அறிஞரான தாமஸ் ஆல்வா எடிசனே மார்க்கோனியின் ஆராய்ச்சியைப் பாராட்டினர். உலகப் பெரும் பரிசாகிய '**நோபெல் பரிசு**' மார்க்கோனிக்குக் கிடைத்தது. இத்தாலிய அரசாங்கமும் ஆங்கில அரசாங்கமும் இவருக்குப் பட்டங்களை வழங்கின. இங்ஙனம் மார்க்கோனியும் உழைப்பால் உலகம் போற்றும் அறிவியல் அறிஞரானர். நாளும் வானெலி கேட்கும் நாமும் இப்பெரியாரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேம் அல்லவா ?*

அருஞ்சொற்பொருள்

அறிவியல் - விஞ்ஞானம். அறிவியல் அறிஞர் - விஞ்ஞானி. விவிலிய நூல் - கிறித்துவ சமய நூல். நிகழ்ந்த - நடந்த. இசைவு - சம்மதம். ஈர்ப்பு அலைகள் - இழுக்கும் அலைகள். பரந்துள்ளன - பரவியுள்ளன. மணித்துளி - விநாடி. ஆய்ந்து ஆய்ந்து - அடுக்குத் தொடர். ஆய்ந்து - ஆராய்ந்து. பொறி - கருவி. அறிகுறி - அடையாளம். வாயிலாக - வழியாக. படிப்படியாக - இரட்டைக் கிளவி. வியத்தகு - ஆச்சரியப்படத்தக்க. உலகம் - உலகத்தவர். நோபெல் பரிசு - எட்டாயிரம் பவுன் மதிப்புள்ளது; சுவீடன் நாட்டு நோபெல் என்னும் பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட பரிசு.

கேள்விகள்

1. தாமஸ் ஆல்வா எடிசன் கண்டறிந்த புதுமைகள் யாவை ?
2. மார்க்கோனி பிள்ளைப் பருவத்திலேயே ஆராய்ச்சியில் ஆர்வமுள்ளவர் என்பது எவ்வாறு தெரிகிறது ?
3. மார்க்கோனியின் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தவை யாவை ?
4. மார்க்கோனி எதனில்எங்ஙனம் வெற்றி கண்டார் ?

---

*இப்பெரியார் 20-7-1937 இல் காலமானர்.

5. மார்க்கோனி இங்கிலாந்தில் எங்கெங்குச் சோதனை கள் நிகழ்த்தினர் ?

6. எடிசன் மார்க்கோனியைப் புகழக் காரணம் யாது ?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக :- துரை—துறை, பரந்து—பறந்து, அரி—அறி, ஒலி—ஒளி—ஒழி, பல்லன்—பள்ளன், உயர்ச்சி—முயற்சி.

2. சேர்த்துக் கூறுக :—சாறு + ஐ, வயிறு + ஐ, கற்று + அறிந்தார், இசை + பயிற்சி, நெடுமை + தொலைவு, அ + முடிவு, துப்பாக்கியை + கொடு, நாடு + கு.

3. பிரித்துக் காட்டுக :-இசைத்தட்டு, அவ்வப்போது, இயற்கைப்பொருள், பெருமக்கள், தந்தியடிக்கும், ஈர்ப் பலைகள், வானவெளி, இச்செய்தி, மற்றொரு.

4. மார்க்கோனியே இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

6. ஆதித்த சோழன்

1. சிதம்பரத்திற்கு வடக்கே ஏறத்தாழ ஏழரைக் கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளாறு என்னும் ஓர் ஆறு பாய்கின்றது. இது வடவெள்ளாறு எனப்படும். புதுக்கோட்டைக்கு அருகில் வெள்ளாறு என்னும் பெயரில் மற்றோர் ஆறு பாய்கின்றது. அது தென்வெள்ளாறு எனப்படுகிறது. இந்த இரண்டு ஆறுகட்கும் இடைப்பட்ட நிலப்பகுதியே சங்க காலத்தில் ***சோழநாடு*** எனப்பட்டது. ***சோழர்*** என்ற மரபரசர் சோழநாட்டை வழிவழியாக ஆண்டுவந்தனர். சங்க காலச் சோழர் வளவர், கிள்ளி என்று பல பெயர்களைப் பெற்றிருந்தனர். சங்க காலச் சோழருள் ***கரிகாலன்*** மிகச் சிறந்தவன் ; பெருவீரன் ; தனது ஆட்சியை வடக்கிலும் தெற்கிலும் விரிவாக்கியவன்.

2. ஏறத்தாழக் கி. பி. 300இல் பல்லவர் என்ற புதிய மரபினர் தொண்டை நாட்டையும் பின்பு அதனுடன் சோழ நாட்டின் பெரும் பகுதியையும் ஆளத் தொடங்கினர். அவர்கள் ஏறத்தாழக் கி. பி. 875 வரையிலும் தமிழகத்தில் வலிமை பெற்றிருந்தனர். அக்காலத்தில் சோழர் பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசராய் இருந்தனர். குடந்தையை அடுத்துள்ள ***பழையாறை*** என்னும் நகரம் அவர்தம் கோநகரமாகும். அப்பெருநகரம் இன்று பல சிற்றூர்களாய் அழகிழந்து காணப்படுகின்றது. சோழர் ஒருபால் பல்லவருடனும் மற்றொருபால் பாண்டியருடனும் மணவுறவுகொண்டிருந்தனர் ; சமயத்திற்கு ஏற்றாற்போல் அரசியல் வாழ்வை மேற்கொண்டிருந்தனர் ; அதாவது, ஒரு சமயம் பல்லவரோடு சேர்ந்து பாண்டியரை

எதிர்த்தனர்; மற்றொரு சமயம் பாண்டியருடன் கூடிப் பல்லவரை எதிர்த்தனர்.

3. ஏறத்தாழக் கி. பி. 850இல் ***விசயாலயன்*** என்ற பெயர் கொண்ட சோழன் பழையாறையில் வாழ்ந்துவந்தான். அவன் மகன் ***ஆதித்த சோழன்*** என்பவன். தந்தையும் மகனும் சோழப் பெருநாட்டை அமைக்க ஆர்வங் கொண்டனர்; இரவும் பகலும் அதே எண்ணத்தில் திளைத்தனர். அப்பொழுது சந்திரலேகா என்னும் ஊரைத் தலை நகராகக் கொண்டு தஞ்சை நாட்டை ***முத்தரையன்*** ஒருவன் ஆண்டுவந்தான். விசயாலயன் முத்தரையனைப் போரில் வென்று தஞ்சாவூரைக் கைப்பற்றினன்; அங்கு ஓர் அரண்மனையைக் கட்டினன்; தனது படையைப் படிப்படியாகப் பெருக்கலானன்.

4. ஆதித்த சோழன் இளவரசனானன். அவன் உயர்ந்த முறையில் போர்ப் பயிற்சி பெற்றான். அவன் அரசியல் அறிவிலும் சிறந்து விளங்கினன்; பல்லவப் பெருநாட்டைக் கவரத் தக்க நேரத்தை எதிர்பார்த்திருந்தான். ஆயினும் அதே நேரத்தில் பல்லவ அரசனாய் இருந்த ***அபராசிதவர்மனுடன்*** நட்பு முறையில் பழகினன். அபராசிதன் சிறந்த தமிழ்ப் புலவன்; பல கலைகளில் வல்லவன்; ஆயின், போர்ப் பயிற்சியில் பட்டறிவு மிகுதியும் இல்லாதவன். அக்காலத்தில் இரண்டாம் ***வரகுணன்*** என்பவன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான்; பெரும் படையைச் செலுத்தும்பேராண்மைபெற்றவன். அவன் பல்லவ நாட்டைக் கவரத் திட்டமிட்டான்; ஒரு பெரும் படையுடன் பல்லவ நாட்டின்மீது பாய்ந்தான்.

5. அபராசிதன் இளைஞன். அதனல் அவனுக்கு உதவியாக அவனது பாட்டனை கங்க அரசன் ***பிருதிவீபதி*** என்பவன் வந்தான். முத்த

ரையன் பாண்டியருடன் சேர்ந்துகொண்டான். ஆதித்த சோழன் பல்லவனுக்கு உதவியாகச் சென்ருன். ஒருபால் பல்லவர் படை, கங்கர் படை, சோழர் படை ஆகிய மூன்றும் அணிவகுத்து நின்றன. மற்ருெருபால் பாண்டியர் படையும் முத்தரையன் படையும் அணிவகுத்து நின்றன. இவ்விருதிறப் படைகளும் **திருப்புறம்பயம்** என்னும் இடத்தில் போர் புரியத் தொடங்கின. திருப்புறம்பயம் குடந்தைக்கு வடமேற்கில் ஏறத் தாழ ஒன்பது கிலோ மீட்டர் தொலேவில் உள்ளது. அவ்வூரின் வடக்கில் கொள்ளிடம் என்னும் பேரியாறும், தெற்கில் மண்ணியாறும் பாய்கின் றன. அவ்வூரில் ஒரு சிறந்த சிவன் கோவில் உள்ளது. அஃது அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது.


6. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருப்புறம் பயத்தில் பல்லவனுக்கும் பாண்டியனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. கரிகள் கரிகளே எதிர்த் தன; பரிகள் பரிகளேத் தாக்கின; வீரர் வீரரோடு போரிட்டனர்; கரிகள் துதிக்கைகளே இழந்து ஓல மிட்டன; பரிகள் கால்களே இழந்து கதறின; உறுப் பிழந்த வீரர்கள் கூக்குரலிட்டனர்; மாண்ட கரி களின்மீதும் பரிகளின்மீதும் வீரர்கள் நின்று போரிட்டனர்; போர்க்களத்தில் குருதியாறு பெருக்கெடுத்தது. யாண்டும் பிணக் குவியல்கள் காணப்பட்டன. கழுகுகள் போர்க்களத்தை வட்ட மிட்டன. ஆதித்த சோழன் வாளேந்திக் கடும் போர் புரிந்தான். வயது முதிர்ந்த பிருதிவீபதியும் முன்னணியில் நின்று போரிட்டான். பகைவர் விட்ட அம்பு பிருதிவீபதியின் மார்பைத் துளேத் தது. அதனல் அம்முதியவன் மண்ணில் விழுந்து மாண்டான்.

7. தன் பாட்டனை பிருதிவீபதி மடிந்ததைக் கண்ட அபராசிதன் தன்னே மறந்து போரிட

லானுன். மன்னனே முன்னின்று போர் புரிவதைக் கண்ட வீரர்களும் உள்ளக் கிளர்ச்சிகொண்டு தம்மை மறந்து போரிட்டனர். ஆதித்தன் யானைக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதுபோலப் பகைவர் கூட்டத்துள் பாய்ந்து கடும்போர் புரிந்தான். அவனைப் பின்பற்றிச் சோழர் படை வீரரும் கடும் போர் புரிந்தனர். எதிரிகளான பாண்டிய நாட்டு மறவர்கள் இளைத்தவர்களா? அவர்களும் உயிரைத் துரும்பாக மதித்துப் போரிட்டனர். வரகுண பாண்டியனும் வாள் வீசினுன். போர் நெடுநேரம் கடுமையாகவே நடைபெற்றது. நேரம் செல்லச் செல்லப் பாண்டியர் படை நிலை தளர்ந்தது. முத்தரையன் ஓட்டம் பிடித்தான். பாண்டியன் படையின் வலிமை குறைந்துகொண்டே வந்தது. இறுதியில் வரகுண பாண்டியன் தோல்வியுற்று ஓடினுன்.

8. அபராசிதன் அகமிக மகிழ்ந்தான்; தன்னுடன் சேர்ந்து கடும்போர் புரிந்து தனது வெற்றிக்கு உதவிய ஆதித்தனை மார்புறத் தழுவினுன்; மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினுன்; அவனுக்குப் பல பரிசில்கள் ஈந்து சிறப்பித்தான். ஆதித்தன் மட்டற்ற மகிழ்ச்சியோடு தஞ்சைக்கு மீண்டான். ஆதித்தன் தஞ்சையில் வாளா இருக்கவில்லை; தனது படையை மேலும் பெருக்கினுன்; அதற்குத் தக்க பயிற்சி அளித்தான்; போர்க் கருவிகளைப் புதுப்பித்தான்; அக்காலத்திலும் பல்லவனுடன் நட்பு முறையிலேயே பழகிவந்தான். பின்பு ஆதித்தன் திடீரென்று பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்; அபராசிதனைக் கொன்று பல்லவ நாட்டைக் கைப்பற்றினுன்.

9. சோழர் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சோழ நாட்டைத் தாமே ஆண்டுவந்தனர்; பல்லவர் நுழைவால் தம் அரசினை இழந்தனர்;


ஆதித்தன் காலத்துத் தென்னாடு
நருமதை
தபதி
கோதாவிரி
இரட்டர் பேரரசு
கிருஷ்ணை
வாதாபி
துங்கபத்திரை
வடபெண்ணை
பொத்தப்பி
பல்லவர் நாடு
காளத்தி
வேங்கடம்
காஞ்சி
கங்கநாடு
பாலாறு
கடல்மல்லை
தென்பெண்ணை
திருநாவலூர்
சிதம்பரம்
காவிரி
கொடும்பாளூர்
உறையூர்
திருப்புறம்பயம்
திருவாரூர்
வஞ்சி
நெல்வேலி
மதுரை
சேரநாடு
வைகை
பாண்டிய நாடு
இலங்கை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா

ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளாகத் தம் உரிமை இழந்து துன்புற்றனர். ஆதித்த சோழன் அத் துன்ப நிலையை அகற்றிவிட்டான். ஆதித்த சோழன் வழியினர் அவனைத் தங்கள் மரபில் தோன்றிய பெருவீரனாகக் கருதிப் பாராட்டினர். புலவர்களும் ஆதித்தன் வீரச் செயல்களைப் போற்றிப் புகழ்ந்தனர்.

10. ஆதித்த சோழன் தன் நாட்டை விரிவாக்கும் வேலையில் முனைந்தான். அவன் காலத்தில் இன்றைய மைசூர் நாடு கங்க நாடு எனப்பட்டது. தழைக்காடு என்பது அதன் தலைநகரம். அது காவிரியின் கரையில் உள்ளது. ஆதித்தன் கங்க நாட்டைக் கைப்பற்றினான். சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதி கொங்கு நாடாகும். ஆதித்தன் அந்நாட்டையும் தனது பெருநாட்டில் சேர்த்துக்கொண்டான். ஆதித்தன் காலத்தில் தாணுரவி என்பவன் சேர வேந்தனாகத் திகழ்ந்தான். அவன் ஆதித்தனுக்கு நண்பன். ஆதித்தன் தன் மகனான பராந்தகனுக்கு அவன் மகளை மணமுடித்தான். இந்த மண உறவால் சேரநாடு தன்னாட்சி பெற்று விளங்கியது. பின்பு ஆதித்தன் கிருஷ்ணையாறு வரையில் தனது நாட்டை விரிவாக்கினான்.

11. ஆதித்த சோழன் சிறந்த சிவபக்தன். அவன் காலத்தில் இருந்த பாடல் பெற்ற கோவில்கள் செங்கல், சுண்ணாம்பு, மண், மரம் முதலியவற்றால் கட்டப்பட்டவை. அவை அப்பர், சம்பந்தர் முதலிய சிவனடியார்களால் பாடப்பெற்ற சிறப்புடையவை. ஆதலால் அவை என்றும் அழியாமல் இருக்கவேண்டும் என்றும், தமிழ் மக்களது சமய உணர்ச்சிக்கு நிலைக்களங்களாக விளங்க வேண்டும் என்றும் ஆதித்தன் கருதினான். அதனால் அப்பெருமகன் காவிரியின் இரு கரைகளிலுமுள்ள கோவில்களைக் கற்றளிகளாக மாற்ற

முற்பட்டான். அவன் மேற்கொண்ட முயற்சி அவன் காலத்தில் முற்றுப்பெறவில்லை; அவனுக்குப் பின்பு வந்த சோழப் பேரரசர் பலரும் அம் முயற்சியில் ஈடுபட்டு முற்றுவித்தார்கள்.

12. ஆதித்த சோழன் ஏறத்தாழக் கி.பி. 880 முதல் 907 வரையில் அரசனாய் விளங்கினான். அவன் காளத்திக்கு அருகில் தொண்டைமான் ஆற்றூர் என்னுமிடத்தில் இறந்தான். ஆதித்தன் மகனான **பராந்தகன்** தன் தந்தை இறந்த இடத்தில் ஒரு கோவிலைக் கட்டினான். அது ஆதித்தேசுவரம் எனப் பெயர் பெற்றது. ஆதித்தனுக்குக் கோதண்டராமன் என்னும் பெயருமுண்டு. அதனால் அக்கோவில் 'கோதண்டராமேசுவரம்' என்றும் வழங்கப்பட்டது. பராந்தகன் அக்கோவிலில் பூசையும் விழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தான்.

அருஞ்சொற்பொருள்

ஆதித்தன் - சூரியன். வளவர் - வளமான நாட்டை உடையவர். குடந்தை - கும்பகோணம். கோநகரம் - தலைநகரம். சந்திரலேகா தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் இருக்கும் செந்தலை என்னும் ஊர். முத்தரையர்- இவர்கள் தமிழ்ப்பற்று மிக்கவர்கள்; நாலடியார் என்னும் நூல் முத்தரையரைப் பாராட்டுகிறது. படிப்படியாக - இரட்டைக்கிளவி. பட்டறிவு - அநுபவம். கொள்ளிடம் – காவிரியிலிருந்து பிரியும் முதல் ஆறு. அப்பர் - திருநாவுக்கரசர். யாண்டும் - எங்கும். முன்னணி – முன்வரிசை. கடும்போர் - கடுமை+போர். செல்லச் செல்ல - அடுக்குத் தொடர். மட்டு - அளவு. மட்டற்ற - அளவற்ற. வாளா - வறிதே, வீணாக. வழியினர் - பரம்பரையில் வந்தவர். புலவர்கள் - சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியிலும், ஒட்டக்கூத்தர் மூவருலாவிலும், சேக்கிழார் பெரிய புராணத்திலும் ஆதித்தனைப் பாராட்டியுள்ளனர். முனைந்தான் -

முற்பட்டான். திகழ்ந்தான் - விளங்கினான். தன்னாட்சி - சுய ஆட்சி. கற்றளி - கல் + தளி = கற்கோவில்.

கேள்விகள்

1. சோழர், பல்லவர் காலத்தில் எத்தகைய நிலையில் இருந்தனர்?
2. சோழன் விசயாலயனைப்பற்றி யாது அறிவாய்?
3. திருப்புறம்பயப் போரைப்பற்றிய விவரங்கள் யாவை?
4. சோழப் பெருநாடு அமையத் திருப்புறம்பயப் போர் அடிப்படையாய் அமைந்தது என்பது எவ்வாறு பொருந்தும்?
5. ஆதித்தன் எங்ஙனம் சோழப் பெருநாட்டை அமைத்தான்?

பயிற்சி

1. குறிப்பு வரைக:—பழையாறை, முத்தரையன், தாணுரவி, ஆதித்தேசுவரம்.

2. பின் வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—ஏறத்தாழ, மணவுறவு, இரவும் பகலும், படிப்படியாக, நட்புமுறை, செல்லச் செல்ல, பின்பற்றி.

3. ஆதித்தன் போர்ச் செயல்களை விளக்கி இருபத்தைந்து வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

4. ஆதித்த சோழனே இப்பாடச் செய்தியைக் கூறுவதுபோலக் கூறுக.

7. மணிமேகலை ஆசிரியர்

1. **மணிமேகலை** என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவளது வரலாற்றை ஒரு பெருங் காவியமாகப் பாடியவர் **மதுரைக் கூலவாணிகன் சாத்தனூர்** என்பவர். நெல், வரகு, சோளம், இறுங்கு, சாமை, தோரை, கேழ்வரகு முதலியவை 'கூலம்' என்று அக்காலத்தில் பெயர் பெற்றன. அவற்றை வாணிகம் செய்தவர், 'கூல வாணிகர்' எனப்பட்டனர். நம் புலவர் அவற்றை மதுரையில் வாணிகம் செய்த காரணத்தால் 'மதுரைக் கூலவாணிகன் சாத்தனூர்' என்று அழைக்கப்பெற்றூர்.

2. சாத்தனூர் ஒரு நல்லாசிரியரிடம் நற்றமிழை நலமுறப் பயின்றூர்; செய்யுள் செய்யும் திறமை பெற்றூர். அக்காலத்தில் (கி.பி. இரண்டாம் நூற்றுண்டில்) மதுரையில் **தமிழ்ச் சங்கம்** ஒன்று இருந்தது. பாண்டியர் பல நூற்றுண்டுகளாக அச்சங்கத்தை வளர்த்துவந்தனர். அவர்களும் சங்கப் புலவர்களாய் இருந்து தமிழ்ப் பாக்களைப் பாடினர். பல நாட்டுப் பெருமக்களும் அதில் கூடியிருந்து தமிழை ஆராய்ந்தனர்; பல நூல்களையும் செய்யுட்களையும் பாடினர். சாத்தனூர் அப்பெருமக்களோடு தொடர்புகொள்ள விரும்பினூர்.

3. "கற்றூரைக் கற்றூரே காமுறுவர்"

என்பது முதுமொழி அன்றூே? சாத்தனூர் காலத்தில் **நக்கீரர், கபிலர், பரணர், மருத்துவன் தாமோதரனூர்** போன்ற புலவர் பெருமக்கள் சங்கத்தில் வீற்றிருந்து தமிழாராய்ந்து வந்தனர். அப்பெருமக்கள் சாத்தனூரை இன்முகத்துடன் வர

வேற்று உரையாடினர்; அவரது உரையாடலைக் கண்டு அவரது பெரும் புலமையை அளந்தறிந் தனர்; அன்று முதல் சாத்தனாரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். அவருடைய புலமை, மாசற்ற ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் புலவர் தம் உள்ளங்களைக் கவர்ந்தன.

4. சாத்தனார் மதுரையில் வாழ்ந்துவந்த போது சேரநாட்டைச் **செங்குட்டுவன்** என்பவன் ஆண்டுவந்தான். அவன் மிகச்சிறந்த போர்வீரன்; குடிமக்களைக் கண்ணும் கருத்துமாய் ஆள்வதில் பெயர் பெற்றவன்; ஒழுக்கம் மிக்கவன்; தமிழ்ப் பற்று மிக்குடையவன்; சைவன்; ஆயினும் சமயப் பொதுநோக்கு உடையவன்; அவனது பின்னவ ரான **இளங்கோ** என்பவர் துறவை மேற்கொண் டவர்; மிகச் சிறந்த புலவர்.

5. சாத்தனார் செங்குட்டுவனைப் பற்றியும் இளங்கோவைப்பற்றியும் நிரம்பக் கேள்வியுற்றார்; அப்பெருமக்களுடன் நட்புக்கொள்ள விரும்பினார்; மதுரை வந்து மீண்ட சேரநாட்டுப் புலவர்க ளுடன் அந்நாடு சென்றார்; சேரர்பெருமானையும் இளங்கோவடிகளையும் கண்டு அளவளாவினார். அன்று முதல் அம்மூவரும் உள்ளம் ஒன்றிய நண்பராயினர்.

6. சாத்தனார் மதுரையில் குடியேறியபோது ***நன்மாறன்*** என்பவன் மதுரையை ஆண்டு வந்தான். அவன் புலவர் புரவலனாய்த் திகழ்ந் தான். அவன் நமது புலவரை வருவித்துப் பரிசில் நல்கி மகிழ்வித்தான். புலவர் அவனை நோக்கி, "பாண்டியர் பெருமானே, நீ ஆரம் தாழ்ந்த அழகு மிக்க மார்பினையுடையவன்; முழந்தாள் அளவும் தாழ்ந்துள்ள நீண்ட கைகளையுடையவன்; அழகு மிக்கவன். நீ கடலிடத்தே கிளர்ந்து எழு கின்ற செஞ்ஞாயிற்றைப்போலப் பகைவரைச்

சுட்டெரிப்பவன்; ஆயினும் எம்போன்ற புலவர், பாணர், விறலியர், கூத்தர் என்பவர்க்குத் திங்களை ஒப்பவன். அரசே, நீ நீடு வாழ்க,'' என்று கூறி வாழ்த்தினர்.

7. சில ஆண்டுகளுக்குப் பின்பு நன்மாறன் சித்திரமாடம் என்னும் வளமனையில் இறந்தான்; அதனல் அவன், 'சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்' எனப் பெயர் பெற்ருன். அவனுக்குப் பின்பு பாண்டியன் **நெடுஞ்செழியன்** அரசுகட்டில் ஏறினன். அவன் மிகச் சிறந்த புலவன்; தன் நாட்டில் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும் என்று வற்புறுத்தியவன். அறநெறி தவருத அம் மன்னன் ஊழ்வினை வசத்தால் பொற்கொல்லன் பேச்சை நம்பிக் கோவலனைக் கொல்வித்தான். கணவனை இழந்த கண்ணகி மதுரைத் தெருக்களில் கண்ணீர் சோரவும் கூந்தல் அவிழ்ந்து புரளவும் புலம்பினுள். தான் செய்தது பொறுக்க இயலாத குற்றம் என்பதைக் கோவலன் மனைவியான அக்கண்ணகியால் அறிந்தவுடனே பாண்டியன் உயிர் நீத்தான். சாத்தனர் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் கண்டார். அவர் மனம் நெருப்பிற்பட்ட புழுவெனத் துடித்தது.

8. கண்ணகி ஆருத்துயர்கொண்டு வையையாற்றின் ஒரு கரை வழியே சென்று, பல மலைகளைத் தாண்டிச் சேரநாட்டை அடைந்தாள்; அங்கு ஒரு மலைமீது வேங்கைமரத்தடியில் நின்ருள்; தன்னை நாடி வந்த விமானமொன்றில் ஏறி விண்ணகம் சென்ருள். அவ்வரிய காட்சியை மலைநாட்டு மக்கள் கண்டு வியந்தனர்; தமது மலைநாட்டைக் காணவந்த செங்குட்டுவனிடம் அவ்வியத்தகு செய்தியை விளம்பினர். அவ்வமயம் சாத்தனர் அங்கிருந்தார். அவர் அங்கிருந்த செங்குட்டுவன் முதலியோரிடம் கண்ணகியின் வரலாற்றைக் கூறினர்.

9. செங்குட்டுவன் கண்ணகியைக் கோவில் கட்டி வழிபட விரும்பினன்; அவளது உருவம் பொறிக்கத்தக்க கல்லை இமயத்திலிருந்து கொண்டு வர ஒரு பெரும்படையுடன் இமயம் நோக்கிச் சென்றன்; தன்னை எதிர்த்த ஆரிய மன்னரை வென்றன்; பத்தினியின் உருவம் பொறித்தற்குரிய கல்லை இமயத்திலிருந்து கொண்டுவந்தான்; அதனைக் கங்கையில் நீராட்டித் தூய்மை செய்தான்; தனது நாட்டில் கோவில் கட்டிப் பத்தினியை வழிபட்டான்; அவ்வழிபாட்டு விழாவில் அரசர் பலர் கலந்துகொண்டனர்.

10. கண்ணகியின் வரலாற்றை ஒரு பெருங்காவியமாகப் பாடவேண்டும் என்று சாத்தனர் இளங்கோவடிகளை வேண்டிக்கொண்டார். அப்பெரியார் அதற்கு உடன்பட்டார். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றை ஒரு பெருங்காவியமாகப் பாடுமாறு அடிகள் சாத்தனரை வேண்டினர்; சாத்தனர் அதற்கு உடன்பட்டார்.

11. கோவலன் கண்ணகி ஆகியோர் வரலாற்றைக் கூறுவது *சிலப்பதிகாரம்* என்னும் பெருங்காவியம். *மணிமேகலை* என்னும் பெருங்காவியம் மணிமேகலையின் வரலாற்றை உரைப்பது. இக்காவியத்தில் அக்காலப் பெருநகரங்களாய் விளங்கிய வஞ்சி மாநகரம், காஞ்சி மாநகரம், காவிரிப்பூம்பட்டினம் என்பவற்றின் அமைப்பையும் சிறப்பையும் காணலாம்; அக்கால விழாக்கள், அவற்றைப்பற்றிய விவரங்கள், மக்களுடைய பழக்க வழக்கங்கள், கடல் வாணிகம் பற்றிய செய்திகள் முதலியவற்றை அறியலாம். சாத்தனர் காலத்தில் தமிழகத்தில் இருந்த எல்லாச் சமயங்களைப்பற்றிய விவரங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் நடை எளிமையும் இனிமை

யும் வாய்ந்தது. வருணனைப் பகுதிகளும் இந்நூலில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. நீங்கள் மேல் வகுப்புக்களில் இந்நூலைப்பற்றி மிகுதியாக அறிந்து மகிழ்வீர்கள்.

அருஞ்சொற்பொருள்

காமுறுவர் - விரும்புவர். முதுமொழி - பழைய மொழி. இன்முகம் - இனிமை + முகம். சைவன் - சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவன். சமயப் பொது நோக்கு - எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதும் மனநிலை. முன்னவர் - தமையன். பின்னவர் - தம்பி. அளவளாவுதல் - உரையாடி மகிழுதல். ஒன்றிய - ஒன்றுபட்ட. புரவலன் - உணவும் பிற பொருள்களும் தந்து எளியவரைப் பாதுகாப்பவன். ஆரம் - மாலை. கிளர்ந்து - கொந்தளித்து. செஞ்ஞாயிறு - சிவந்த சூரியன். பாணர் - பாடுவோர். விளம்பினர் - சொன்னர். காவியம் - ஒப்பற்ற ஒரு தலைவனது வரலாற்றினை விரித்துப் பாடப்பெற்றுள்ள பெருநூல். எல்லாச் சமயங்கள் - மணிமேகலையின் காலத்தில் தமிழகத்தில் இருந்த பௌத்தம், சமணம், ஆசீவகம், சைவம், வைணவம் முதலியன.

கேள்விகள்

1. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப்பற்றி யாது அறிவாய்?
2. "கற்றுரைக் கற்றுரே காமுறுவர்."—இது கூறப் பெற்ற சந்தர்ப்பம் யாது?
3. செங்குட்டுவன், இளங்கோ என்பவர் யாவர்?
4. சாத்தனர் பாண்டியன் நன்மாறனை நோக்கிக் கூறியது யாது?
5. சாத்தனர் மனம் எப்பொழுது நெருப்பில் பட்ட புழுவெனத் துடித்தது?
6. செங்குட்டுவன் கண்ணகியை எங்ஙனம் சிறப்பித்தான்?
7. சிலப்பதிகாரம் என்பது யாது? அதனைப் பாடியவர் யாவர்?

8. மணிமேகலை என்னும் காவியத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள் யாவை?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—இன்முகம், வரவேற்று, பொதுநோக்கு, இயலாத, ஆருத்துயர், தூய்மை, வழிபாடு, பெருங்காவியம்.

2. பிரித்துக் காட்டுக:—இன்முகம், மிக்குடையவன், நாட்டுப்புலவர், பெருமக்கள், அறநெறி, ஆருத்துயர், வையையாறு, பொறுத்தற்கரிய.

3. சேர்த்துக் கூறுக:—கூலம் + வாணிகம், தமிழ் + ஆராய்ந்து, மிக + சிறந்த, செங்குட்டுவனை + பற்றி, சேர நாடு + அரசன், புரவலனுய் + திகழ்ந்தான், நாடு + ஐ, அ + சமயம்.

4. சாத்தனுரே இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

8. கிழக்கு ஆப்பிரிக்கா

1. ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டு அதன் விவரங்களை அறியப் பாடுபட்ட ஐரோப்பிய அறிஞர் பலராவர். அவர்தம் உழைப்புக்குப் பின்னரே ஐரோப்பியர் ஆப்பிரிக்காவிற் குடியேறி, நாட்டைத் திருத்தி வாழலாயினர். அவர்கள் குடியேறி வாழக் காரணமாக இருந்தவருள் முதல் இடம் பெறத்தக்கவர் **டேவிட் லிவிங்ஸ்டன்** என்பவர். அடுத்துக் குறிப்பிடத் தக்கவர் **ஜோசப் தாம்ஸன்** என்னும் அறிஞராவர். அவர் ஐந்து முறை ஆப்பிரிக்காவினுள் சென்று அதன் உள் நாட்டுப் பகுதிகளை அறிந்து வெளியிட்டார். அவர் செலவுகளிற் குறிப்பிடத்தக்கது மூன்றும் செலவாகும். கி.பி. 1882 வரையிற் கிழக்கு ஆப்பிரிக்கா வைப்பற்றி உலகத்திற்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. சான்ஸிபார், மொம்பஸா என்னும் கிழக்குக் கரையில் உள்ள இடங்கட்கும் விக்டோரியா ஏரிக்கும் இடையில் உள்ள நிலப்பகுதியை நன்கு ஆராய்ந்து, கூடுமாயின், நீர்வீழ்ச்சிக்கு நேரான பாதை ஒன்றைக் கண்டுபிடிக்குமாறு இங்கிலாந்தில் இருந்த சில ஆராய்ச்சிக் கழகத்தார் தாம்ஸனை அனுப்பினர்.

2. தாம்ஸன் கி.பி. 1892 இல் தமது முயற்சியை மேற்கொண்டார். அவருக்கு உதவியாக ஆங்கிலவீரர் பதின்மர் சென்றனர்; அவருடைய உடை முதலியவற்றைச் சுமந்துகொண்டு கிழக்காப்பிரிக்கச் சுதேசிகள் நூற்றிருபதின்மர் அவருக்கு முன் வழிகாட்டிச் சென்றனர்; அந்த வேலையாட்களுட் பெரும் பகுதியினர் திருடர்கள்; புதியவரைத் துன்பத்திற் செலுத்தி அவர்தம் பொருள்களைக் கவர்ந்து செல்லும் இயல்பினர். ஆயினும் என் செய்வது? அவர் அவர்களைக்

கொண்டே உள்நாட்டுச் செலவை மேற்கொள்ள வேண்டியவர் ஆயினர். ஜோசப் தாம்ஸன் வாக்கு நயம் உடையவர்; மலர்ந்த முகத்தோற்



கிழக்கு ஆப்பிரிக்கா

றம் பெற்றவர்; பொறுக்க இயலாத துன்பநிலையிலும் பொறுமையைக் கையாள்பவர். ஆதலால் அவர் சுதேசிகளைப் பக்குவமாய் நடத்திவரலானர்.

3. தாம்ஸன் சான்ஸிபார் தீவைவிட்டு ஆப்பிரிக்காவிற்குள் நுழைந்து சென்ருர்; கரையோரப் பகுதியைக் கடந்ததும் அகன்ற பெரிய பொட்டல் நிலத்தைக் கண்டார். அங்குச் செடி கொடி இனங்கள் இல்லே; அருந்த நல்ல தண்ணீர் இல்லே; அப்பொட்டலேக் கடக்க அவர் அரும்பாடு பட்டார். அடுத்துப் பெரிய காடு ஒன்று காட்சி அளித்தது. அக்காட்டுப் பகுதியில் வானளாவிய மரங்களும் நீர்நிலேகளும் ஆங்காங்குச் சிற்றூர்களும் காணப்பட்டன. தாம்ஸன் அந்நிலப் பகுதியை மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டே சென்று ஒரு மலேத்தொடரை அடைந்தார். அத்தொடரில் உள்ள குறிக்கத் தக்க கொடுமுடி ***கிலிமஞ்சரோ*** என்பது. அது வெப்ப நிலப்பகுதியில் இருப்பினும், அதன் உச்சியில் பனிப் படலங்கள் தலேப்பாகை போலக் காட்சி அளித்தன.

4. அந்த மலேத்தொடரை அடுத்திருந்தது ***மசைநாடு*** என்பது. அந்நாட்டு மக்கள் கொலே, திருட்டு முதலியவற்றுக்கு அஞ்சாதவர். அவர்களேப்பற்றிப் பயங்கரமான கதைகள் கூறப்பட்டன. அவற்றைக் கேட்ட தாம்ஸன் புன்னகை புரிந்து அஞ்சா நெஞ்சினராய்த் தம் செலவை மேற்கொண்டார்; பல சிற்றூர்களேக் கடந்து சென்ருர்; தம்மைத் தாக்கவந்த மக்களிடமிருந்து பக்குவமாய்த் தப்பித்துக்கொண்டு மேலும் செல்லலானுர். அப்பொழுது அவர் சென்ற பகுதி மிக்க வெப்பமுள்ள நிலப்பகுதி ஆகும். செவ்வனே சமைக்கப்படாத உணவு, பலவகைப் பூச்சிகளின் துன்பம், அமைதியுடன் தூங்க வசதியற்ற நிலேமை, காய்ச்சல் புழுக்கனேக்கொண்ட கெட்ட நீர் முதலிய துன்பங்கட்கு இடையே அவரது செலவு தடையின்றி நடந்தது.

5. தாம்ஸன் ஒரு சிற்றூரில் தங்கியபொழுது அவ்வூரார் அவருடைய பொருள்களில் பலவற்

றைக் கவர்ந்து சென்றனர். தாம்ஸன் பொறுமையோடு வழிநடக்கலானர் ; நடந்து, ஒரு சிற்றூரை அடைந்தார் ; அங்கு ஒருவன் தன் ஈட்டியால் தாம்ஸனைத் தாக்க முயன்ருன். அவர் புன்முறுவலுடன் ஈட்டிக் குறியினின்றும் விலகி நின்ருர் ; மழையில் நனைந்துகொண்டு அன்றிரவே அயலூருக்கு நடந்தார்.

6. தாம்ஸன் தம் செலவைத் தொடங்கி ஐந்து மாதங்கள் ஆயின. ஆயினும் அவர் ***விக்டோரியா*** ஏரியைக் கண்டறியவில்லை. அவர் பட்ட இன்னல்களோ பல. உணவுப்பொருள்களும் துணிமணிகளும் களவுபோயின. ஆதலின், அவர் தம்முடன் வந்தவர்களை ஒரு கிராமத்தில் தங்கச்செய்து, மொம்பஸாவுக்குத் திருமபினர் ; பின்னர் அங்கிருந்து புதிய போர்வீரரையும் நம்பத்தக்க சுதேசிகளையும் தமக்குத் தேவையான பொருள்களையும் சேர்த்துக்கொண்டு வந்து, பழைய ஆட்களுடன் கலந்துகொண்டார். அவர் மொம்பஸாவுக்குப் போய் மீள ஐந்து மாதங்கள் ஆயின.

7. அவரது புதியசெலவு கி. பி. 1893 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தொடக்கமாயிற்று. அவர் வழியில் ஒரு காட்டில் தங்கியிருந்தபொழுது ***காண்டா மிருகங்கள்*** வந்து தாக்கின. அவை, அவருடன்வந்த கோவேறு கழுதைகளைக் கொன்றன ; பெருங் குழப்பத்தை உண்டாக்கிவிட்டன. தாம்ஸன் அவற்றின் தாக்குதலிலிருந்து தப்பியது அரிதாயிற்று. அவர் எஞ்சிய ஆட்களுடனும் கோவேறு கழுதைகளுடனும் வழி நடந்தபோது ***காட்டு எருமைகள்*** வந்து வளைத்துக்கொண்டன. அக்கொடிய விலங்குகள் தம் கொம்புகளால் கோவேறு கழுதைகளைத் தூக்கி வானத்தில் எறிந்தன ; சுதேசிகள் சிலரைக் குத்திக் கொன்றன ; தாம்ஸனும் ஆங்கில வீரரும் துப்பாக்கி வெடி தீர்த்துத்

தங்களைக் காத்துக்கொண்டனர். அவர்கள் இவ்வாறு பல துன்பங்களை அடைந்து காட்டைக் கடந்தனர்; பாலைவனத்தை அடைந்தனர்; அங்கு **ஒட்டைச்சிவிங்கிகளும், வரிக்குதிரைகளும்** கூட்டம் கூட்டமாக இருந்ததைக் கண்டனர்.

8. பாலைவனத்துக்கு அப்பால் சுதேசிகள் வாழ்ந்த ஊர்கள் இருந்தன. தாம்ஸன் ஓர் ஊரிற் சென்று தங்கினர். அவ்வூர் மக்கள் தாம்ஸன் முதலியோரை வளைத்துக்கொண்டனர். அவரவர் தத்தமக்குத் தேவையான பொருள்களைத் தாம்ஸனைக் கேளாமல் அவர் எதிரிலேயே எடுக்கலாயினர். அவர் எல்லாப் பெட்டிகளையும் பூட்டிக் காவலரை நியமித்து ஓய்வு கொண்டார். இரவு முழுமையும் கொடிய விலங்குகளின் ஓசை கேட்ட வண்ணம் இருந்தது. மறுநாள் தாம்ஸன் முதலியவர் புறப்பட்டு நடக்கலாயினர். அவர்கள் மசை நாட்டைக் கடந்து, வ-கிகுயூ என்னும் இனத்தவர் வாழ்ந்த நாட்டை அடைந்தனர். அந் நாட்டு மக்கள் போர் வீரர் அல்லராயினும் திருடுவதில் சமர்த்தர் எனப் பெயர் பெற்றவர்.

9. தாம்ஸன் முதலியோர் அச் சுதேசிகளின் ஊர் ஒன்றில் தங்கினர். அன்றிரவு அவர்களைச் **சிங்கங்கள்** தாக்கத் தொடங்கின. அவை சில கோவேறு கழுதைகளைக் கொன்றன. தப்பிப் பிழைத்த கோவேறு கழுதைகள் காட்டிற்கு ஓடிவிட்டன. ஆங்கில வீரரும் சுதேசிகளும் மரங்களில் ஏறிக்கொண்டனர். அவர்கள் இருட்டில் சிங்கங்கள் என்று கருதித் தம் கோவேறு கழுதைகளையே சுட்டுக் கொன்றனர். வெடியோசை கேட்டவுடன் சிங்கங்கள் மறைந்தன.

10. இவ்வாறு பல இன்னல்களுக்கு இடையில் பிரயாணம் செய்துகொண்டே தாம்ஸன் நாடோறும் தமது பிரயாணக் குறிப்பை எழுதி

வந்தார்; தாம் பிரயாணம்செய்த நிலப்பகுதியின் படத்தை வரைந்தார்; தாம் சென்ற பாதைக்கு அருகில் இருந்த மலைகளின்மீது ஏறிக் கண்ணுக் கெட்டியவரையில் தாம் கண்ட காட்சிகளைக் குறித்துவந்தார். அவர் இங்ஙனம் ஊக்கம் தளராது நடந்து நடந்து இறுதியில் **நைவஷா** என்னும் ஏரியைக் கண்டார்; அதனைச் சுற்றியுள்ள நிலப்பகுதியையும் பார்வையிட்டார்.

11. தாம்ஸன் மேலும் வழி நடந்து **பரிங்கோ** என்னும் அழகிய சிறிய ஏரியைக் கண்டார். அந்த ஏரிக்கும் விக்டோரியா ஏரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அஞ்சத்தக்கது என்று தாம்ஸனுடன் சென்ற சுதேசிகள் கூறினர். அஞ்சாமை மிகுந்த தாம்ஸன் ஆங்கில வீரருடன் அச்சமின்றி நடந்தார்; பல நாட்கள் நடந்தார். வழியில் ஒரு கெடுதியும் உண்டாகவில்லை. அவர் தமது செலவின் குறிக்கோளாகக் கொண்டிருந்த **விக்டோரியா** ஏரியை இறுதியிற் கண்டு மகிழ்ந்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் அல்லரோ?

12. தாம்ஸனது முயற்சிக்குப் பின்பு ஆங்கிலேயர் கிழக்கு ஆப்பிரிக்காவிற் புகுந்து காடுகளை அழித்து நகரங்களையும் கிராமங்களையும் அமைத்தனர்; வயல்களையும் தோட்டங்களையும் அமைத்துக்கொண்டனர். இன்று கிழக்கு ஆப்பிரிக்கா ஒரு குடியேற்ற நாடாக விளங்கிவருகிறது.

அருஞ்சொற்பொருள்

சான்ஸிபார் - ஒரு தீவு. மொம்பஸா - கரையோர நகரம். கொடுமுடி - சிகரம். வெப்பப்பகுதி - உஷ்ணப்பிரதேசம். பண்டமாற்று - நாணயம் தந்து பண்டங்களை வாங்காமல், பண்டங்களைக் கொடுத்து வேறு பண்டங்களை வாங்குதல். குறிக்கோள் - இலட்சியம், நோக்கம்.

கேள்விகள்

1. ஜோசப் தாம்ஸன் நல்லியல்புகள் யாவை?
2. தாம்ஸன் கி. பி. 1892இல் எதனைக் கண்டறிய அனுப்பப்பட்டார்?
3. பொட்டலைக் கடந்த தாம்ஸன் கண்டவை யாவை?
4. தாம்ஸன் வெப்பநிலப் பகுதியில் அடைந்த துன்பங்கள் எவை?
5. தாம்ஸன் ஏன் இடைவழியில் மொம்பஸாவுக்குத் திரும்பினார்?
6. தாம்ஸனுக்குக் காண்டாமிருகங்களும், காட்டு எருமைகளும் எவ்வாறு துன்பம் இழைத்தன?
7. வ-கிகுயூ என்னும் இனத்தவர் எப்படிப்பட்டவர்?
8. தாம்ஸன் கண்ட ஏரிகள் யாவை?
9. தாம்ஸன் தம் பிரயாணத்தின்போது தயாரித்தவை எவை?

பயிற்சி

1. தாம்ஸன் பிரயாணத்தின்போது பட்ட துன்பங்களைப்பற்றி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

2. தாம்ஸனுடைய பொறுமை, விடா முயற்சி, உழைப்பு என்பவற்றை விளக்கச் சான்றுகள் தருக.

3. டேவிட் லிவிங்ஸ்டன் அல்லது மங்கோபார்க் ஆப்பிரிக்காவில் செய்த ஆராய்ச்சிகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக. (தக்க நூலைப் படித்து இக்கட்டுரையை எழுதுக.)


4. சிங்கம், காண்டாமிருகம், ஒட்டைச்சிவிங்கி என்பவைபற்றிக் குறிப்பு வரைக. (நூல் நிலையத்திலுள்ள நூல்களைக்கொண்டு எழுதுக.)

9. கம்பரது கரந்துறை வாழ்க்கை

1. கம்பரைப் பற்றிக் கூறப்படும் கதைகள் பல. அவை உண்மை என்று உறுதியாகக் கூறு தற்குச் சான்றுகள் இல்லை. அக்கதைகளுள் அவர் சேரனிடம் அடைப்பைக்காரராக இருந்த வரலாறு ஒன்ருகும். கம்பர் சோழ மன்னனது அவைப் புலவராய் இருந்தவர்; சோழனிடம் மனம் வேறுபட்டவராய்ப் பல இடங்களில் அலைந்து திரிந்து முடிவில் சேரவேந்தனிடம் சென்ருர்; "நான் கம்பரிடம் அடைப்பைக்காரனுய் இருந்தவன். அவர் வெளிநாடுகட்குச் சென்றமையால் நான் பிழைப்புக் கருதித் தங்களிடம் வந்தேன்," என்று கூறினுர். கம்பர் அன்று முதல் சேரர்பெருமானிடமே அடைப்பைக்காரராய் இருந்துவரலானுர்.

2. சேரனது அவையில் தமிழ்ப்புலவர் பலர் இருந்தனர். அவர்கள் கம்பர் செய்த இராமாயண நூலை முறையாகப் படித்து அரசன் முன்னிலையில் பொருள் விரித்துவந்தனர். ஒரு செய்யுளுக்குப் புலவர்கள் பொருள் கூறியது சிறப்புறவில்லை. அதனுல் அரசன் பக்கத்தில் அடைப்பைக்காரராய் இருந்த கம்பர் முகம் சுளித்தார். காவலன் அதனைக் கவனித்து, அவரைப் பொருள் கூறுமாறு பணித்தான். அடைப்பைக்காரராய் இருந்த கம்பர் அழகாகப் பொருள்கூறி, 'இது கம்பர் கூறிய பொருள்' என்ருர். மன்னன் மிக்க மகிழ்ச்சி அடைந்து அவரை அன்று முதல் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடத்திவரலானுன்; அவருக்குத் தனி நாற்காலி ஒன்று தந்து தன் அருகில் அமரச் செய்தான்.

3. தமது நாட்டு அரசன் சோழநாட்டு அடைப்பைக்காரரிடம் அளவுகடந்த அன்பும் மரியாதையும் காட்டுவதைக் கண்டு அவைப் புலவர் அளவற்ற பொருமை கொண்டனர்; அவரை இழிந்தவர் எனக்காட்டி அரசனிட மிருந்து பிரிக்கச் சூழ்ச்சி செய்தனர். அப் பொருமையாளர் அரண்மனை நாவிதனை நெருங்கி, "அரசர் அடைப்பைக்காரனிடம் மிகுந்த அன்பு காட்டுகிருர்; எங்களை முன்போலக் கவனிப்ப



கம்பரும் நாவிதனும்

தில்லை. ஆதலால் நீ அடைப்பைக்காரனை எவ்வாருயினும் அரசரிடமிருந்து பிரிக்கவேண்டும். நாம் உனக்கு இரண்டாயிரம் வராகன் தரு வோம். நீ அரசர் எதிரில் அடைப்பைக்காரனை உன் அண்ணன் என்று கூறிக் கட்டித்தழுவு; அவன் உன் இனத்தவன் என்பதைப் பிறர் நம்பு மாறு செய். நாம் உனக்குத் தீங்கு வராமற் காப்

போம்,'' என்றனர். 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்பது பழமொழி. அதற்கு ஏற்ப நாவிதன் புலவர்களிடம் பணம்பெற்று, அடைப்பைக்காரனைத் தழுவ நேரம் பார்த்தான்.

4. ஒருநாள் அவையில் அனைவர் முன்னிலையிலும் அடைப்பைக்காரர் எழுந்து வெளியிற் செல்ல முயன்றார். அப்பொழுது அவை ஓரத்தில் நின்றிருந்த நாவிதன் ஓடிவந்து அடைப்பைக்காரரைத் தழுவிக்கொண்டு, "அண்ணா, நீ இது வரையில் எங்கே சென்றிருந்தாய் ?'' என்று கூறிக் கோவென்று கதறி அழுதான். நுண்ணறிவிற் சிறந்த கம்பர், நாவிதன் நாடகத்தின் காரணத்தை உடனே உணர்ந்துகொண்டார்; எனினும் அதனை வெளிக்காட்டாது, நாவிதனைக் கட்டிக்கொண்டு அழுதார். அரசனும் புலவரை ஒழிந்த பிறரும் அக்காட்சியைக் கண்டு வியப்பும் திகைப்பும் கொண்டனர்.

5. நாவிதன் அடைப்பைக்காரரைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்; தன் மனைவி மக்களை அவருக்குக் காட்டினான். அடைப்பைக்காரர் அவர்களை ஆசீர்வதித்தார். பின்னர் நாவிதன் அவரை உணவுண்ண அழைத்தான். அப்பொழுது அவர், "தம்பீ, உன்னிடம் நமது குடும்பச் செய்திகளைப் பேசி ஒரு முடிவுக்கு வந்த பின்பு உண்பதே முறை'' என்று கூறி, "நமது சொத்துப் பிரிவினை ஆகாதது அன்றோ? அதன் மதிப்பு என்ன இருக்கும்?'' என்று கேட்டார். நாவிதன், "நாலாயிரம் வராகன் இருக்கும். அதில் உனக்குப் பாதி சேர வேண்டுவது'' என்றான். அடைப்பைக்காரர், "அத்தொகையை முதலில் கொடுத்துவிடு'' என்றார். உடனே நாவிதன் தன்னிடம் புலவர் கொடுத்திருந்த இரண்டாயிரம் வராகனையும் கொண்டுவந்து கொடுத்தான். பின்பு அடைப்பைக்காரர், "அரு

மைத் தம்பீ, சென்ற இருபது ஆண்டுகளாக நீ நமது அரசர்க்கு ஊழியம் செய்தனை. உன் தமையனுன நான் உன்னைப்போல இருபது வருட காலம் அரசர்க்கு ஊழியம் செய்ய வேண்டுவது தானே முறை?'' என்று கேட்டார். நாவிதன் "ஆம்'' என்ருன். உடனே கணக்கனைக்கொண்டு பாகமும் ஊழிய முறையும் பத்திரத்தில் எழுதப் பட்டன. பின்னர் அடைப்பைக்காரர், "தம்பீ, நான் ஊழியம் செய்வதை நமது அரசர் ஏற்பரோ? மறுப்பரோ? அவரைக் கேட்டு அறிவோம், வா'' என்ருர். உடனே இருவரும் அவையை அடைந்தனர்.

6. அரசன் தம்மைப்பற்றிப் பலவாறு எண்ணி மனக் கலக்கம் கொண்டிருந்த சமயத்தில் அடைப் பைக்காரர் நாவிதனுடன் சென்று பணிந்தார்; பணிந்து, "பெருமானே, நாளை முதல் நானே தங்கட்கு நாவிதத் தொழில் புரிவேன். அதற்குத் தங்கள் இசைவு வேண்டும்,'' என்ருர். நாவிதன் அடைப்பைக்காரரைத் தழுவியது முதல் மனக்கலக்கம் கொண்டிருந்த மன்னவன், அடைப் பைக்காரர் பேச்சைக் கேட்டதும் உகிர்ச் சுற்றின் மீது உலக்கை விழுந்தாற்போல மிக்க மனக் கலக்கம் கொண்டான்; "ஆகட்டும், அப்படியே செய்'' என்று கூறி அவையை விட்டுச் சென்ருன். பொருமை கொண்ட அவைப் புலவர் தங்கள் சூழ்ச்சி வெற்றி பெற்றது என்று எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

7. அடுத்தநாட் காலையில் கம்பர் நீராடிப் பூசை முடித்து நாமகளை வழிபட்டு, "அம்மையே, நீயே என்னைக் காக்கவேண்டும். நினது காற் சிலம்பு ஒன்று தேவை,'' என்று வேண்டினுர். திருவருளால் அவர்கையில் நாமகளது காற்சிலம்பு ஒன்று வந்து சேர்ந்தது. அவர் அதனை மறைத்து எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்ருர்;

அரசனைப் பணிந்து, சிலம்பைக்காட்டி, "பெருமானே, இந்தச் சிலம்பு எங்கள் முன்னோருடையது. இது போன்ற மற்றொன்று என் தம்பியிடம் இருக்கின்றது. ஏழைமக்களாகிய எங்கட்கு இது தேவையில்லை. இஃது அரசமாதேவியார் காலில் அணியத்தக்கது. இதனைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்," என்றார். வேந்தன் அச் சிலம்பைக் கையில் எடுத்தான்; அதன் பேரொளியைக் கண்டு திகைத்தான்; அதன் உயரிய வேலைப்பாட்டைக் கண்டு வியந்தான்.

8. மன்னவன் உடனே தன் பழைய நாவிதனை வரவழைத்தான்; "உன் அண்ணன் இந்தச் சிலம்பைக் கொடுத்தான். இது போன்ற மற்றொரு சிலம்பு உன்னிடம் இருக்கின்றதாம். அதனைக் கொண்டுவா," என்றான். நாவிதன், "இதேது! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல வந்து விடிந்ததே!" என்று அலறிக் கைகால்கள் நடுங்க, வாய் குழற, "அரசே, என்னிடம் சிலம்பு இல்லை," என்றான். உடனே அடைப்பைக்காரர், "தம்பீ, அது நமக்கு உதவாது; அரசமாதேவியார்க்கு உதவும்; கொடுத்துவிடு" என்றார். நாவிதன் "இல்லை அண்ணே" என்றான். கம்பர், "அரசே, 'மயிலே, மயிலே, ஓர் இறகு கொடு' என்றாற் கொடுக்குமா? நயமாகப்பேசி இவனிடம் அதனை வாங்கமுடியாது. இவனைக் கேட்கிறபடி கேட்கவேண்டும்," என்றார்.

9. உடனே அரசன் ஏவலரைப் பார்த்தான். அவன் குறிப்புணர்ந்த ஏவலர் நாவிதனைத் தூணிற் கட்டி நையப் புடைத்தனர். நாவிதன் அடி பொறுக்க இயலாது அலறி அழுது, "கட்டை அவிழ்த்துவிடுங்கள்; உண்மையை உரைப்பேன்" என்றான். கட்டவிழ்த்து விடப்பட்ட அவன் அரசனைப் பணிந்து, "பெருமானே, இவர் என் தமையனார் அல்லர். இவரைப்பற்றி ஒன்றுமே

எனக்குத் தெரியாது. நம் அவைப்புலவர் தூண்டு தலால் நான் இவர் தம்பிபோல நடித்தேன்" என்று, அவைப்புலவர் சூழ்ச்சியைத் தெளிவாக எடுத்துரைத்தான். அரசன் உண்மையை உணர்ந்து அவைப்புலவர்மீது சினம் கொண் டான்; அவர்கட்குத் தண்டனை விதிக்க எண்ணி னான்; ஆயினும் அடைப்பைக்காரர் வேண்டுகோ ளுக்கு இணங்கி அவர்களை மன்னித்துவிட்டான்.

10. பின்னர்ச் சேரவேந்தன் அடைப்பைக் காரரைப் பார்த்து, "இச்சிலம்பு உமக்கு எவ்வாறு கிடைத்தது?" என்று கேட்டான். அடைப்பைக் காரர், "இச் சிலம்பை அணியும் பெருமகளைக் காட்டுவேன்" என்று கூறி, அரண்மனை மண்ட பத்தில் நாமகளுக்குப் பூசை இடுவித்துப் பாட லானார். அப்பொழுது நாமகள் திரைக்கு அப்பால் சிலம்போசையுடன்தோன்றி, "கம்பா, என்சிலம்பு எங்கே?" என்று கேட்டாள். கம்பர் உடனே தம்மிடம் இருந்த சிலம்பை மேலே தூக்க, அது மறைந்தது. நாமகளும் மறைந்தாள்.

11. 'கம்பா' என்று நாமகள் அழைத்ததைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். அவள் மறைந்த வுடன் அரசன் கம்பரை இறுகத்தழுவி, முக மலர்ச்சியுடன், "ஐயா, புலவர் பெருமானே, கவிச்சக்கரவர்த்தியாகிய நீர் அடைப்பைக்கார ராகவா இங்கு வரவேண்டும்! உண்மை அறியா மல் உம்மை அடைப்பைக்காரராக வைத்திருந்த மைக்கு மனவருத்தப்படுகிறேன்," என்றான். கம்பர், தாம் அங்ஙனம் மறைந்து வாழ்ந்தமைக் குக் காரணம் கூறி, அரசனை அமைதிப்படுத்தினார். அரசன் அன்றுமுதல் கம்பரிடம் பேரன்பு காட்டி, அவரை மிக்க சிறப்பாக நடத்திவந்தான்.

அருஞ்சொற்பொருள்

அடைப்பைக்காரர் - அரசன் அருகில் நின்று தாம்பூலம் கொடுப்பவர். அடைப்பை - வெற்றிலைப்பை. முறையாக -

முதலிலிருந்து ஒவ்வொரு செய்யுளாக. பணித்தான் - கட்டளையிட்டான். காவலன் - குடிகளைக் காப்பவன், அரசன். நாவிதன் - மயிர் வினைஞன், க்ஷவரத் தொழிலாளி. இசைவு - சம்மதம். உகிர் - நகம். நாமகள் - சரசுவதி. திகைப்பு - பிரமிப்பு.

கேள்விகள்

1. கம்பர் சோழனை விட்டு அகன்றமைக்குக் காரணம் யாது?
2. சேரனது அவைப்புலவர் அடைப்பைக்காரர்மீது ஏன் பொறாமை கொண்டனர்?
3. அவைப்புலவர் செய்த சூழ்ச்சி யாது?
4. கம்பர் சமயோசித அறிவுடையவர் என்பது எதனால் விளங்குகிறது?
5. புலவரது சூழ்ச்சி எவ்வாறு பொய்த்தது?
6. அடைப்பைக்காரர் 'கம்பர்' என்பதை அரசன் எவ்வாறு உணர்ந்தான்?
7. கம்பர் பெருந்தன்மை உடையவர் என்பதற்கு ஒரு சான்று தருக.

பயிற்சி

1. இப்பாடத்தில் உள்ள பழமொழிகளைக் கூறுக. அவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. கண்டு கண்டு, வந்து வந்து, பாம்பு பாம்பு என அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும். இவை பிரிந்தால் பொருள் தரும். ஆனால் கலகல, சலசல, மடமட என்பன இரட்டையாக இருப்பினும் பிரிக்கப்படா; பிரித்தால் பொருள் தரா. ஆதலால் இவை இரட்டைக் கிளவி எனப்படும். அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் நந்நான்கு உதாரணம் தருக.

3. சேரன் அவையில் கம்பர் - அவைப் புலவர் சூழ்ச்சி-கம்பர் சூழ்ச்சி-கம்பரது வெற்றி: இக்குறிப்புக்களைக் கொண்டு இப்பாடப் பொருளை ஒரு கட்டுரையாக வரைக.


10. நன்னனது மலைநாடு

மலைவழிப் பயணம்

1. சங்ககாலச் சிற்றரசருள் **நன்னன்** என்பவன் ஒருவன். அவன், வட ஆர்க்காட்டு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைகளையும் அவற்றைச் சூழ உள்ள நிலப்பகுதியையும் ஆண்டுவந்தான். அவனது தலைநகரம் **செங்கண்மா** என்பது. அது இன்று 'செங்கம்' எனத் திரிந்து வழங்குகிறது. சவ்வாது மலைகளைச் சுற்றிலும் சங்ககாலத்தில் அடர்ந்த காடுகள் இருந்தன. நன்னன் சிறந்த கொடையாளி. அதனால் அக்காலப் புலவர், பாணர், கூத்தர் என்பவர் அவனைச் சென்று காண்பது வழக்கம். அவனது தலைநகர் நிலத்தில் அமைந்திருந்தும், சேய்மையிலிருந்து வருபவர் சவ்வாது மலைகளின்மீது நடந்து சென்று அவனது நகரத்தை அடைவது வழக்கமாய் இருந்தது.

2. இங்ஙனம் பல மலைகளைக் கடந்து சென்று நன்னனைக் கண்டு, பரிசு பெற்ற **கூத்தர் தலைவன்** ஒருவன், தன் கூட்டத்தாருடன் மீண்டும் மலைகளைத் தாண்டிக் கீழிறங்கி வந்து, ஓர் இளங்காட்டில் இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப்பொழுது வேறொரு கூத்தன் தன் கூட்டத்தினருடன் அவ்விளங்காட்டிற்குச் சென்றான். அவனைக் கண்ட முன்னோன் அவனையும் அவன் கூட்டத்தினரையும் நன்னனைக் காணும்படி அறிவுறுத்தினான்; அவனது தலைநகருக்குச் செல்லும் வழியைத் தெளிவாகக் கீழ்வருமாறு விளக்கிக் கூறினான்:

3. "நீங்கள் இங்கிருந்து மலை அடிவாரத்தை நோக்கிச் செல்லுங்கள். வழியில் எள், தினை, அவரை, வரகுப் பயிர்கள் செழித்து வளர்ந்திருக்


நன்னனது மலை நாடு
மலைப் பகுதிகள்
மேட்டுப் பகுதிகள்
குடியாத்தம் வட்டம்
வேலூர்
வாலாஜா வட்டம்
கைலாசகிரி
ஆரணி வட்டம்
படைவீடு
ஆலங்காயம்
ஜவ்வாது மலைகள்
போளூர் வட்டம்
கோவிலூர்
போளூர்
ஆண்டியப்பனூர்
புங்கம்பட்டு
மட்டறப்பள்ளி
புதூர்
நெல்வாசல்
செங்கம்
மேல்செங்கம்
செங்கம் வட்டம்
திருவண்ணாமலை வட்டம்
திருவண்ணாமலை
வந்தவாசி வட்டம்
தென் ஆர்க்காடு

கும். மூங்கில் நெல் அவல் இடிக்கும் பருவத்தை அடைந்திருக்கும். வெண்சிறுகடுகு, இஞ்சி, மலை வாழை, வெண்ணெல், பெருமூங்கில்நெல், கரும்பு முதலியன பயிராயிருக்கும். நீங்கள் நாவற்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலிய பழ வகைகளைக் காணலாம். கானவர் காவடியிற் பன்றி இறைச்சியையும், மான் இறைச்சியையும் எடுத்துக் கொண்டு மலைப்பக்கத்துச் சிற்றூர்கட்கு வருவர். நீங்கள் அத்தகைய சிற்றூர்களில் தங்குக. சிற்றூரார் உங்களுக்குத் தினைச்சோறும் கறி வறுவலும் தருவர்.

4. "நீங்கள் பின்பு மலைமீது ஏறிச் செல்லுங்கள். மலைமீது அமைந்த பள்ளத்தாக்குக்களிலும் சமநிலங்களிலும் சீறூர்கள் காணப்படும். அங்கு உடும்புக்கறி, மான்கறி, பன்றிக்கறி, தேனால் செய்யப்பட்ட கள்தெளிவு, நெல்லாற் செய்யப்பட்ட கள் ஆகியவை உங்களுக்குக் கொடுக்கப்படும். பலாக்கொட்டை மாவையும் புளியையும் மோரில் அளவாகக் கலந்த கலவையை மூங்கிலரிசியோடு கலந்து சமைக்கப் பட்ட சோற்றைக் குறமகள் உங்களுக்குக் கொடுப்பாள். நீங்கள் அதனை உண்டு உங்கள் வழியில் செல்லுங்கள். தினைப்புனத்தை அழிக்கவரும் காட்டுப் பன்றிகளைப் பிடிக்க வழிகளில் கற்பொறிகள் பொருத்தப்பட்டிருக்கும். ஆதலால் அம்மலை வழியில் பகலில் செல்லுக.

5. "பலரும் போகாத வழிகளும் உண்டு. அவ்வழியில் நிலத்தில் பிளவுகள் இருக்கும். அப்பிளவுகளில் பாம்புகள் இருக்கும். நீங்கள் அவற்றைத் தொழுது வலப்பக்க வழியிற் செல்லுக. தினைப்புனக் காவலரான குறவர் கவண்கல் எறிந்து யானைகளை ஓட்டுவர்; அக்கல்வீச்சில் குரங்குகள் சிதறி ஓடும். அக்கற்கள் உங்கள்மீது படாமல் ஒதுங்கிச் செல்லுக. யானைகளை விழுங்

கும் முதலைகளைக்கொண்ட நீர்நிலைகள் வழியில் உண்டு. ஆழமான மடுக்களை உடைய காட்டாறு காணப்படும். சில இடங்களில் நீர் தேங்கி இருக்கும். அந்த நீர்த்தேக்கங்களுக்கு அருகில் மரங்களைச் சுற்றிக் கிடக்கும் கொடிகளைப் பிடித்துக் கொண்டு மிக்க விழிப்புடன் செல்லுக.

6. "அந்த மலை வழியில் உள்ள ஒரு மலை **நவிரமலை** எனப்படும். அங்கு நன்னனது மலைப் படை ஒன்று இருக்கும். அங்கு ஒரு கோட்டை உண்டு. அங்குக் காரியுண்டிக் கடவுள் கோவில் கொண்டுள்ளார். அந்த மலையில் எப்பொழுதும் மழை பெய்யும். அங்கு மயில்கள் ஆடும்; கடுவன்கள் பாயும்; தேன் இருல்கள் காணப் படும். நீங்கள் அவற்றை ஊன்றிப் பாராமல் வழி மேல் விழி வைத்துச் செல்லுக; இன்றேல் வழி தவறுவீர்கள்.

7. "கானவன் பரண்மீதிருந்து பன்றியின் மீது அம்பை எய்வான். அம்பு பட்ட பன்றி வழியில் விழுந்து கிடக்கும். நீங்கள் அதனை நெருப்பில் வதக்கி அதன் இறைச்சியை உண்ணுங்கள்; சுனைநீரைக் குடியுங்கள்; இரவில் மலைக்குகைகளில் தங்குங்கள்; காலையில் காட்டில் உள்ள நேரிய வழியிற் செல்லுக. பெரிய மரங்களைப்போன்ற மலைப்பாம்புகள் கிடக்கும் வழி விலகிச் செல்லுக. குறவரும் மருளும் குன்றத்து வழியில் செல்ல வேண்டா; உச்சி மலையில் காட்டைக் காவல் புரியும் காவலர் உண்டு. அவர்கள், உங்களிடம் ஓடிவந்து பழங்களைத் தருவர்; பூக்களை வழங்குவர்; இடையூறு மிக்க வழியைக் காட்டி முன் செல்வர். வழியில் குறியவும் நெடியவுமான குவடுகள் இருக்கும். நீங்கள் விழிப்போடு சென்று பூக்கள் பரந்து கிடக்கும் நிழலில் இளைப்பாறுங்கள்.

8. "நீங்கள் அங்குப் பலவகை ஓசைகளைக் கேட்பீர்கள். சூரரமகளிர் அருவியாடும் ஓசை கேட்கும்; தினைப்புனத்திற் புகுந்த யானையை வேடர் பிடிக்க முயலும்போது உண்டாகும் ஆரவாரம் கேட்கும்; முள்ளம்பன்றியால் தாக்கப் பட்ட கானவர் அழும் ஓசை கேட்கும்; தம் கணவர் மார்பில் புலி பாய்ந்ததால் உண்டான புண்ணை ஆற்றுவதற்குக் கொடிச்சியர் பாடும் பாடல் ஓசை கேட்கும்; வேங்கை மலரைப் பறிக்கக் கானவர் மகளிர் 'புலி—புலி' என்னும் ஓசையும், களிற்றின்மீது புலி பாயக் கண்ட பிடி அலறும் ஓசையும் கேட்கும்; தன் குட்டி எடுப்ப தற்கரிய மலைப் பிளவில் விழுந்ததால் பெண் குரங்கு அலறும் அச்சம் நிறைந்த ஓசை கேட்கும்; கானவர் கண் ஏணியின் வழியாகச் சென்று தேன் எடுக்கும் ஓசையும் கேட்கும்.

9. "உச்சி மலையில் கள் குடித்த குறவர், தம் பெண்டிருடன் கூடிச் சிறுபறை ஒலி செய்யக் குரவைக் கூத்தாடும் ஓசை கேட்கும்; ஆறுகள் மலைப் பிளவுகளில் விழுவதால் உண்டாகும் ஓசையும், யானையைப் பிடித்துப் பழக்கும் பாகரது ஓசையும், தினைப்புன மகளிர் கிளிகளை ஓட்டும் ஓசையும் கேட்கும்; ஆண் எருமைகள் தம்மில் முட்டுகின்ற ஓசையும், பலாக்கொட்டைகளின்மீது கடாவிடும் பிள்ளைகள் ஓசையும், கரும்பு ஆலைகள் ஓசையும் கேட்கும்; தினையைக் குற்றும் மகளிரது உலக்கைப் பாட்டின் ஒலியும், சேம்பும் மஞ்சளும் வளர்ந்த கொல்லையில் பன்றியை விரட்டும் பறை ஓசையும் கேட்கும்.

10. "நீங்கள் செல்லும் வழியில் போரில் இறந்த போர்வீரர்களின் பெயர்கள் பொறிக்கப் பெற்ற **நடுகற்கள்** இருக்கும். அங்கு நின்று யாழ் வாசித்து அவற்றை வழிபடுங்கள். வழியில் கோவலர் வாழும் சிற்றூர்கள் இருக்கும். அவர்கள்

உங்களுக்குப் பசுவின்பாலைத் தருவர்; பாற் சோறும் தருவர். அவர்கள் ஆட்டுத்தோல்களைத் தைத்துப் படுக்கையாகப் போடுவர். நீங்கள் அப் படுக்கையிற் படுத்து உறங்குங்கள். காலையில் எழுந்து செல்லும்போது வழியில் நாடு காக்கும் வேடர் கூட்டம் எதிர்ப்படும். நீங்கள் நன்னனைப் பார்க்கப் போவதை அவர்களிடம் கூறுங்கள். அவர்கள் இறைச்சியையும் கிழங்குகளையும் உண் ணக் கொடுப்பர்; உண்ட பின்பு அவர்கள் காட்டும் வழியிற் செல்லுக.

11. "வழியில் உள்ள சிற்றூர்களில் வெள் ளாட்டுக்கறியுடன் நெய்யிட்டு ஆக்கின சோறும் நுண்ணிய தினை மாவும் உங்களுக்குத் தரப்படும். வழியில் மருத நில ஊர்கள் காணப்படும். அங்கு வாளை மீனின் இறைச்சியும் வரால் மீனின் இறைச்சியும் முள்ளம்பன்றியின் இறைச்சி கலந்த வெண்சோறும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் இங்ஙனம் நடந்தும் உண்டும் பல சிற்றூர்களைக் கடந்து செல்லின், வழியில் *சேயாறு* காணப் படும்; அதன் ஒரு கரையை வழியாகக்கொண்டு செல்லுக.

12. "நன்னது தலைநகர் வண்டுகள் ஒலிக்கும் நீண்ட பொழில்களால் சூழப்பட்டது. அந்நகரத் தைச் சுற்றி மதில் அமைந்துள்ளது. அக்கோ நகரம் அங்காடித் தெருவையும் அகன்ற தெருக் களையும் குறுந்தெருக்களையும் உடையது. வாளேந்திய மறவர் கோட்டை வாயிலில் காவல் காப்பர். கோட்டையுள் உள்ள மன்றத்தில் நன்னனைக் காணவந்த இரவலர் காத்திருப்பர். அவர்கள் உங்களை வரவேற்று உபசரிப்பர். உங்கள் விறலியர் முதலில் கடவுளை வாழ்த்தின பின்பு, நீங்கள் நன்னனைப் பற்றிய பாடல்களைப் பாடுக. அப்பெருமகன் உங்களை அன்போடு உபசரித்து வேண்டும் நலன்களைச் செய்வான்."

அருஞ்சொற்பொருள்

புலவர் - அறிஞர், புலமை உடையவர். புலமை - அறிவு. பாணர் - இசைவல்லார். கூத்தர் - நடிகர். இளங்காடு × முதுகாடு. இளமை × முதுமை. முன்னோன் × பின்னோன். கானவர் - கான் + அ + அர் - காட்டில் வாழும் வேடர். சீறூர் - சிற்றூர். மடு - நீர் நிறைந்த பள்ளம். காரியுண்டிக் கடவுள் - விடம் உண்ட சிவபெருமான். காரி - விடம். கடுவன்-ஆண் குரங்கு. மந்தி-பெண் குரங்கு. தேன் இறால்- தேன் அடை. மருளும் - ஏற மயங்கும். குறிய × நெடிய. குவடு - உச்சி, சிகரம். விழிப்போடு - கவனத்தோடு. சூரர மகளிர்-சூர் + அரமகளிர்; சூர்-அச்சம்; அரமகளிர்-தெய்வ மகளிர். கொடிச்சியர் - மலைநாட்டுப் பெண்கள். களிறு - ஆண் யானை. பிடி - பெண் யானை. குரவை - முல்லை அல்லது குறிஞ்சி நிலமகளிர் தம்முள் கைகோத்து ஆடும் கூத்து வகை. பெண்களுடன் ஆடவர் கலந்து ஆடுவதும் உண்டு. உலக்கைப் பாட்டு - உலக்கைகொண்டு குற்றும்போது பெண்கள் பாடும் பாட்டு. சேயாறு - இஃது இப்பொழுது 'செய்யாறு' என்று வழங்கப்படுகிறது. பொழில் - சோலை. மறம் - வீரம். மறவர் - வீரர். விறலி - உள்ளக் குறிப்புப் புறத்தில் புலப்பட நடிக்கும் நடன மகள். அங்காடித்தெரு - கடைத்தெரு. மன்றம் - பலர் கூடும் பொது இடம்.

கேள்விகள்

1. கூத்தர் தலைவன் மலை அடிவாரத்தைப்பற்றிக் கூறிய விவரங்கள் யாவை?
2. கூத்தர் தலைவன் நவிர மலையைப்பற்றி யாது கூறினான்?
3. மலைமீது கேட்கப்பட்ட பலவகை ஓசைகள் யாவை?
4. மலைமீது இருந்த ஊர்களில் உண்ணக் கிடைத்த பொருள்கள் யாவை?
5. நீ நன்னனது தலைநகரைப்பற்றி யாது அறிவாய்?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—செழித்து, வலப்பக்கம், வழிமேல் விழி, வழியாக, நுண்ணிய.

2. கீழ்வருவனவற்றை உச்சரித்துப் பொருள் கூறுக:—மலை - மழை, தலை - தளை - தழை, திணை - திணா, கரி - கறி, விளி - விழி, பரந்து - பறந்து.

3. எதிர்ச்சொல் கூறுக:—இறங்கி, முன்னோன், பெருமூங்கில், சிற்றூர், இரவு, குறிய, இளங்காடு.

4. கூத்தர் தலைவன் கூறிய மலைப்பாதையை விளக்கி நாற்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

11. உயிரினங்களின் தோற்றம்

1. நாம் வாழும் இந்த உலகத்தில் பலவகை உயிரினங்களைக் காண்கின்றோம். அவற்றில் சில நத்தை, புழு, பாம்பு முதலியனபோல நிலத்தில் ஊர்ந்து வாழ்கின்றன. மீன், இருல் போன்ற உயிரினங்கள் நீரில் வாழ்கின்றன. யானை, புலி, எருது, நாய், கரடி போன்ற விலங்குகள் நிலத்தில் நடந்தும் ஓடியும் இயங்குகின்றன. பறவைகள் பறக்கின்றன. சில உயிர்கள் நம் கண்ணுக்குத் தெரியாமல் காற்றில் இயங்குகின்றன. செடி, கொடி, புல், பூண்டு, மரம் முதலிய தாவர உயிர்களும் இவ்வுலகில் தோன்றி வளர்ந்து அழிகின்றன.

2. பாம்புகளில் மட்டும் நூற்றுக்கணக்கான வகைகள் உள்ளன. இவ்வாறே விலங்குகளிலும் பலவகை உண்டு; பறவைகளிலும் பலதிறப் பட்டவை உண்டு; புழுக்களிலும் பலவிதப் பட்டவை உண்டு. செடிகளிலும் பலவகை; கொடிகளிலும் பலவகை; மரங்களிலும் பலவகை உண்டு.

3. தரையில் நெளிந்து செல்லும் புழுவிற்கும் வானில் பறந்து செல்லும் பறவைக்கும் காட்டில் வாழும் யானைக்கும் உறுப்புக்களிலும் செயல்களி லும் பண்புகளிலும் வேறுபாடுகள் இருத்தலை நாம் காண்கின்றோம். தாவரம் என்னும் ஒரே இனத்தைச் சேர்ந்த புல் முதல் மரம் ஈருக உள்ள தாவரவகை அனைத்தும் உருவத்திலும் தோற்றத் திலும் ஒன்றையொன்று ஒத்திராமல் பலவகை களில் வேறுபட்டே உள்ளன.

ஆயிரக்கணக்கான தாவர இனங்களும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும், பறப்பனவும், நடப்

பனவும் ஒரே காலத்தில் தோன்றினவா? உலகம் தோன்றிய காலத்தில் இவை அனைத்தும் இருந்தனவா? நம் உள்ளத்தில் இக்கேள்விகள் எழுவது இயல்பேயன்றோ? இவ்வினாக்கள் பண்டைக் கால மக்கள் மனத்திலும் தோன்றின. அவர்கள், 'உயிர்வகைகள் அனைத்தும் தொடக்கத்தில் தனித் தனியாகப் படைக்கப்பட்டன. அவை அன்று முதல் இன்றுவரையில் மாறுபாடு அடையாமல் இருந்து வருகின்றன,' என்று கருதினர். அக்கருத்துத் தவறானது என்பது சென்ற நூற்றாண்டில் தோன்றிய உயிர் நூற் புலவர்களால் நிறுவப்பெற்றது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புகழ் பெற்ற அறிவியல் அறிஞர்களும் உயிர் நூற்புலவர்களும் மேலே கூறப்பெற்ற 'தனிப்படைப்புக் கொள்கை'யை ஏற்கவில்லை. அவர்கள், "மனித இனம் உள்ளிட்ட உயிரினங்கள் அனைத்தும் பொதுவாகக் கண்ணிற்குத் தெரியாத ஓர் உயிரணுவிலிருந்து வந்தவையாகும். அந்த உயிரணு நாளடைவில் மாறுபாடு அடைந்து, புதிய உறுப்புக்களை அமைத்துக்கொண்டு வெவ்வேறு உயிரினங்களாகப் பெருகியது. அங்ஙனம் பெருகிய வெவ்வேறு உயிரினங்களிலிருந்து மேலும் பல வகை வேறுபாடுகளையுடைய உயிர்கள் தோன்றின. அவை மேலும் மேலும் வேறுபாடு அடைந்துகொண்டே வந்து காலப்போக்கில் இன்றுள்ள நிலைக்கு வந்துள்ளன," என்னும் ஒரு புதிய கொள்கையை நிறுவினார்கள். சுருங்கக் கூறின், 'உயிரினங்களும் அந்த இனவகைகளும் படிப்படியாக வளர்ச்சியடைந்தே தொகை வளமும் வகை வளமும் வளர்ச்சி மாறுபாடுகளும் உயர்வும் பெற்றன"[1] என்பது அவர்களது கொள்கையாகும். இக்கொள்கை '*உள்ளது சிறத்தல்*'[2] எனப் பெயர் பெறும்.

---

[1] English-Tamil Dictionary, Vol. 1. p. 359. [2] Evolution

4. 'உள்ளது சிறத்தல்' என்னும் கொள்கையை விளக்கிய அறிஞருள் தலைசிறந்தவர் சார்லஸ் இராபர்ட் டார்வின் என்னும் உயிர்நூல் அறிஞரேயாவர். அவர் இங்கிலாந்தில் சிரூஸ்பரி[1] என்னும் ஊரில் கி. பி. 1809 இல் பிறந்தார். அவர் தந்தையார் மருத்துவ அறிஞராய் விளங்கினார். பாட்டனார் ஓர் அறிவியல் மேதையாய்த் திகழ்ந்தார். டார்வின் முதலில் தமது ஊர்ப் பள்ளியிலும் பின்பு எடின்பரோ, கேம்பிரிட்சு[2] பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயின்றார். விலங்கியலும் தாவரயியலுமே அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.



சார்லஸ் இராபர்ட் டார்வின்

5. பீகிள்[3] என்னும் அரசாங்கக் கப்பல் கி.பி. 1831ஆம் ஆண்டில் தென் அமெரிக்காவுக்கும் பசுபிக் பெருங்கடலுக்கும் ஆராய்ச்சியின் பொருட்டுச் சென்றது. அக்கப்பலில் அறிவியல் அறிஞர் பலர் இருந்தனர். டார்வின், இயற்கை அறிவியல் புலவராக[4] நியமனம் பெற்று அக்கப்பலில் சென்றார்.

1 Shrewsbury 2 Cambridge
3 H. M. S. Beagle. 4 Naturalist

6. டார்வின் தென் அமெரிக்காவுக்குத் தொள்ளாயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பாலுள்ள கலபகாஸ்[1] என்னும் தீவுகளுக்குச் சென்ருர்; அங்கிருந்த உயிரினங்களைப்பற்றி நன்கு ஆராய்ந்தார்; தொடக்கத்தில் தனித்திருந்த ஓர் இனமே சூழ்நிலையின் மாறுதலுக்குத் தக்கபடி வெவ்வேறு வகைகளாக மாறுபட்டது என்பதைச் சான்றுகளுடன் ஆராய்ந்து அறிந்தார். அப்பெரியார் தாம்செய்த ஆராய்ச்சிப் பயணத்திற் கண்ட பலவகைச் சோதனைகளைப்பற்றி இரண்டு நூல்கள் எழுதினுர். அவை, *உயிரினங்களின் தோற்றம்*,[2] *மனிதனது பரம்பரை*[3] என்னும் பெயர்களைக் கொண்டவை. அவர் தமது முதல் நூலை கி.பி. 1859இல் வெளியிட்டார்; இரண்டாம் நூலை கி.பி. 1871இல் வெளியிட்டார்.

டார்வினது முதல் நூலே உயிரினங்களின் தோற்றத்தை எடுத்துக் கூறுவது. அவர் அந் நூலில் 'உள்ளது சிறத்தல்' என்னும் கொள்கையை உறுதியாக நிலைநாட்டியுள்ளார். அக் கொள்கை **டார்வின் கொள்கை** என்று பெயர் பெறும். அப்பெரியார் தாம் நிறுவிய புதிய கொள்கையால் உலகப் புகழ் பெற்ருர்; கி.பி. 1882இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். ஆங்கிலப் பேரறிஞர்களின் உடலங்களைப் புதைக்கும் வெஸ்ட்மின்ஸ்ட்டர் அபேயில் அவரது உடல் மிக்க சிறப்புடன் அடக்கம் செய்யப்பெற்றது.

7. 'பிள்ளை, பெற்ருேரைப் போலன்ருே இருக்கும்? அப்பிள்ளை பெற்ருேரிலிருந்து எங்ஙனம் வேறுபட்டிருத்தல் இயலும்? பரம்பரைத் தொடர்பு என்பது உண்மையன்ருே? உண்மை இங்ஙனம் இருப்ப, இன்றுள்ள பல்வேறு உயிரினங்கள் அனைத்தும் தொடக்க காலத்தில் இருந்த ஓர்

---

[1] Galapagos [2] Origin of Species
[3] The Descent of Man


உயிரணுவிலிருந்து எவ்வாறு தோன்றியிருத்தல் கூடும்? அங்ஙனம் தோன்றிய அவை எங்ஙனம் மாறுபாடு அடைந்து பல இனங்களாக மாறின?'—என்பன போன்ற ஐயங்கள் மக்கள் மனத்தில் எழுவது இயல்பேயாகும்.

அறிஞர் டார்வின் என்னும் பெரியார் இவ்வையங்களைப் போக்கும் முறையில் கூறும் விடை இதுவாகும்:

8. "உயிரினங்கள் தேவைக்கு மேற்பட்ட உயிர்களை உண்டாக்குகின்றன. அங்ஙனம் உண்டாக்கப்பெற்ற அவற்றினிடையே வாழ்க்கைப் போராட்டம் நடைபெறுகின்றது. அப்போராட்டத்தில், ஆற்றல் படைத்ததும் தாயைவிடச் சிறப்புப் பண்பு பெற்றதுமே வெற்றிபெற்று வாழும்; மற்றவை அழியும். உயிரினங்கள் சில, சூழ்நிலை மாறமாற, அதற்கு ஏற்பப் புதிய அமைப்புக்களையும் புதிய வடிவங்களையும் புதிய பண்புகளையும் பெறும். இங்ஙனம் புதியவற்றைப் பெற்ற உயிரினங்கள் மட்டுமே சூழ்நிலைக்குப் பொருந்தியனவாய் நின்று உயிர்வாழும்; சூழ்நிலைக்குப் பொருந்தாதவை அழியும். இவ்வாறு புதிய பண்புகளையும் மாறுபாடுகளையும் அடைந்த உயிரினங்களின் மரபில் வந்த உயிர்களுக்கும் புதியனவாய்ப் பெற்ற பண்புகள் இருக்கும்.

9. "சூழ்நிலைக்குத் தக்கபடி அமைந்த வேறுபாடுகள் பிறவிச் செல்வமாய்ப் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும். உயிரினங்கள் வேறு பல காரணங்களாலும் அமைப்பிலும் பண்பிலும் பெற்றோரை ஒத்திராமல் மாறுபடும். இவ்வுயிரினங்கள் புதியனவாய்ப்பெற்ற அமைப்புக்களும் பண்புகளும் இவற்றிற்குப் பிறக்கும் உயிர்களுக்கும் வரும். அஃதாவது, இம்மாறுபாடுகள் தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டேயிருக்கும். நாளடைவில் இம்மாறுபாடுகள் பெருகிக்கொண்டே வரும்.

அங்ஙனம் மாறுபாடுகள் பெருகப்பெருக, புதிய இனங்கள் உலகத்தில் தோன்றிக்கொண்டேயிருக்கும்.



பரிணமம் : புதிய உயிரினங்கள் படிப்படியாகத் தோன்றிய முறை

10. "உலகத்தின் தொடக்கத்தில் ஓர் உயிரணுவைக்கொண்ட உயிர்கள் மட்டுமே காணப்

பட்டன. அவை நீரில் வாழ்ந்துவந்தன. அவை காலப் போக்கில் மாறுபாடு அடைந்து முதுகெலும் பில்லாத உயிரினங்களாகத் தோன்றின. பின்பு அவற்றிலிருந்து மீனினம் தோன்றியது. பின்னர் அவ்வினத்திலிருந்து நீரிலும் நிலத்திலும் வாழ்வன தோன்றின. அவற்றின் பின்னர்ப் பறவைகளும் ஊர்வனவும் பாலூட்டிகளும் தோன்றின. பின்பு குரங்கும் மனிதக்குரங்கும் தோன்றின. இறுதியில் மனிதன் தோன்றினுன்.''

அருஞ்சொற்பொருள்

பண்பு – குணம். சென்ற நூற்ருண்டு - பத்தொன்பதாம் நூற்ருண்டு. உள்ளது சிறத்தல் - முன்பே உள்ள ஒன்று படிப்படியாக வளர்ச்சியடைந்து சிறப்பது. மேதை - அறிஞர். திகழ்ந்தார் - விளங்கினுர். பல்கலைக் கழகம் - இலக்கியம் கணிதம் உளவியல் தாவர இயல் முதலிய பல்கலைகளைக் கற்பிக்கவும் ஆராய்ச்சி நிகழ்த்தவும் பயன்படும் பெரிய கலைநிறுவனம். பயின்ருர் - கற்ருர். சோதனை - ஆய்வு. நிறுவிய - நிலைநிறுத்திய. பரிணுமம்-ஒன்று பிறிதொன்ருக மாறுதல்.

கேள்விகள்

1. பண்டைக்கால மக்கள் உயிரினங்களைப்பற்றி யாது கருதினர்?
2. 'உள்ளது சிறத்தல்' என்பது யாது?
3. டார்வின் உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கூறுவன யாவை?

பயிற்சி

1. கீழ் வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—நெளிந்து, வேறுபட்டு, கொள்கை, படிப்படியாக, நாளடைவில், உள்ளிட்ட, நன்கு, உறுதியாக, எவ்வாறு, சூழ்நிலை, மாறுபாடு.

2. பிரித்துக் காட்டுக:—பண்டைக்காலம், நிலத்தில், வானத்தில், இவ்வுலகு, இவ்வாறு, காலப்போக்கு, உயிரினம், உயிர்நூற்புலவர், ஊர்ப்பள்ளி, அரசாங்கக்கப்பல்.

3. 'உள்ளது சிறத்தல்' என்னும் டார்வின் கொள்கையை நன்கு விளக்கி வரைக.

12. வானொலி

1. மக்கள் தம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சித் துறையில் இறங்கிய நாள்தொட்டு உலகத்தில் புதிய புதிய வியத்தகு ஆராய்ச்சி முடிபுகள் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. ஆராய்ச்சியாளர் நம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களின் தன்மைகளை ஆராய்கின்றனர்; அவற்றில் அமைந்துள்ள இயற்கை ஆற்றல்களின் இயல்புகளைக் கண்டறிகின்றனர். அவ்வாற்றல்களின் துணையைக் கொண்டு புதிய புதிய அரும்பொருள்களைத் தோற்றுவிக்கின்றனர். இங்ஙனம் ஒவ்வோர் அரும்பொருள் வெளிப்படும் பொழுதும் உலகமக்கள் வியப்புறுகின்றனர்; அதன் பயனைப் பார்த்த பின்பு மகிழ்ச்சியுற்று, அதனைத் தோற்றுவித்த ஆராய்ச்சி அறிஞரைப் பாராட்டுகின்றனர்.

2. இவ்வாறு ஆராய்ச்சி அறிஞரால் தோற்றுவிக்கப்படும் அரும்பொருள்கள் பலவற்றுக்கும் முதற்காரணமாக இருப்பது **மின்சாரம்** என்பது. அதுவே அறிஞரால் முதன் முதல் கண்டறியப்பட்ட இயற்கை ஆற்றல் ஆகும். மின்சாரத்தின் இயல்புகளையும் பயன்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்து அறிஞர் அதனைப் பல துறைகளிலும் பயன்படுத்தலாயினர்; அங்ஙனம் பயன்படுத்திப் பல அரிய புதுமைப் பொருள்களை அமைத்துக் கொள்ள முயன்றனர். அம்முயற்சியில் வெற்றியும் பெற்றனர்; இன்றும் மேற்கொண்டு பல சோதனைகளை நடத்திவருகின்றனர். மின்சார ஆற்றல் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரும்பொருள்களுள் தலைசிறந்தது **வானொலி** ஆகும்.


3. வானொலி என்பது புதுமையும் முதன்மையும் வாய்ந்தது. இஃது ஒரே நாளில் திடீரெனத் தோன்றியதன்று. ஓர் இடத்தில் நிகழும் பேச்சையோ பாட்டையோ மற்ற இடங்களில் கேட்குமாறு செய்யத்தக்க அமைப்புக்கள் இக் கருவியில் நெடுநாள்வரையில் அமைக்கப்படாமல் இருந்தன. ஆராய்ச்சியாளர் மேன்மேலும் முயன்று தேவையான அமைப்புக்களை ஒவ்வொன்ருக அமைத்துவந்தனர். ஏறத்தாழச் சென்ற நாற்பது ஆண்டுகட்கு முன்னர் இது முற்றுப்பெற்றதாக இல்லை. அக்காலத்தில், இங்கிலாந்தில் உள்ள ரக்பி என்னும் இடத்தில் வானொலிக் கருவி ஒன்று அமைக்கப்பட்டது. ஆயின், அக்கருவி தன்மேல் தாக்கும் ஒலி அலைகளைச் சிறிது தொலைவே பரப்பக்கூடியதாக இருந்தது. பின்னர் அறிஞர் பலவாறு முயன்று, நெடுந்தொலைவில் உள்ளவர்க்கும் பேசுவது நன்கு கேட்குமாறு ஏற்பாடு செய்தனர். அதன் பயனுக, நடுக்கடலில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்றில் இருந்த மக்கள் தங்கட்கு ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ரக்பியிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியைத் தெளிவாகக் கேட்டனர். அதன் பின்னரே வானொலி உலகிற் சிறப்புறத் தொடங்கியது.

4. வானொலியின் அமைப்பும் அஃது இயங்கும் முறையும் பற்றி மேற்போக்காகச் சில விவரங்களை அறிந்திருத்தல் நல்லது. ஒரு குளத்தில் கல் ஒன்றைப் போட்டால், கல் விழுந்த இடத்திலிருந்து சிற்றலைகள் உண்டாகி வட்டமாக அகன்று நெடுந்தொலை பரவிச் செல்லுகின்றன; அவ்விடங்களில் மிதக்கும் இலை முதலிய இலேசான பொருள்கள் அவ்வலைகளால் தள்ளப்பட்டுச் சேய்மையிற் சேர்க்கப்படுகின்றன. குளத்தில் நீர் பரவியிருத்தல் போலவே எல்லா இடங்

களிலும் நமது கண்ணுக்குப் புலனுகாத நுண்ணிய காற்று நிறைந்துள்ளது. கல்லால் தாக்கப்பட்ட நீரில் அலைகள் உண்டாதல் போல, ஒலிகளால் தாக்குண்ட அக்காற்றில் மின்சார அலைகள் உண்டாகின்றன. அந்த அலைகள் தம்மைத் தாக்கிய ஒலிகளைத் தாங்கிக்கொண்டு மிக்க விரைவுடன் நெடுந்தூரம் பரவிச் செல்கின்றன. அப்பொழுது அவை 'ஒலி அலைகள்' எனப் பெயர் பெறும். ஒலி அலைகள் ஒலியைப் பிரித்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த ஒருவகைக் கருவிமேல் தாக்குமாயின், அக்கருவி ஒலியைக் கவர்ந்துகொண்டு வெளிப்படுத்தும். ஆதலால் அவ்வொலி அலைகட்குக் காரணமாக முன்பு நிகழ்ந்த ஒலிகள் அங்கு மீண்டும் அவ்வாறே நிகழும். நுண்ணிய அவ்வொலிகளை நாம் நேராகக் கேட்க இயலாது. ஆதலின் நுண்ணிய ஒலிகளைக் கவர்ந்து பல மடங்கு பெருக்கி நாம் கேட்பதற்கு ஏற்ற வகையில் வெளியிட மற்ருெரு கருவி அமைக்கப்பட்டுள்ளது.

5. மேற்கூறியவற்ருல் வானொலி மூவகைக் கருவிகளைக் கொண்டது என்பதை அறியலாம். அவற்றுள் பேசுவோர் அல்லது பாடுவோரது ஒலியை ஏற்றுக் காற்றில் செலுத்தும் கருவி ஒன்று. அஃது **ஒலி செலுத்தி** எனப் பெயர் பெறும். காற்றில் மின்சார அலைகளால் தள்ளப்பட்டு வரும் அவ்வொலிகளைக் கவர்ந்துகொள்ளும் கருவி மற்ருென்று. அஃது **ஒலி கொள்ளி** எனப் பெயர் பெறும். ஒலிகொள்ளி பெற்றுக்கொண்ட நுட்ப ஒலியை வாங்கிப் பல மடங்கு பெருக்கி வெளியிடும் கருவி மூன்ருவதாகும். அஃது **ஒலி பெருக்கி** எனப்படும்.

6. இம்மூன்று கருவிகளிலும் முதற்கருவி ஒரே இடத்தில் நிலையாக அமைந்திருப்பது. அக்கருவி ஒரு தனி அறையில் வைக்கப்பட்டிருக்



வானொலி

கும். அவ்வறை எவ்வித வெளி ஒலியும் உட் செல்ல முடியாதவாறு அமைக்கப்பட்டதாகும். பேசுபவர் அதற்கு எதிரில் இருந்து பேசுவர்; பாடுபவரும் அவ்வாறே எதிரில் இருந்து பாடுவர். ஒலி செலுத்தி என்னும் அக்கருவி அவ்வொலிகளை வாங்கிக் காற்றிற் செலுத்தும். அவ்வொலிகள் காற்றில் தாக்கி மின்சார அலைகளை உண்டாக்கும். மின்சார அலைகள் ஒலிகளை இழுத்துக்கொண்டு நெடுந்தூரம் பரவிச் செல்லும்; ஒலிகொள்ளி அவ்வொலிகளைக் கவர்ந்து வெளிப்படுத்தும். ஒலி பெருக்கி என்னும் கருவி ஒலிகொள்ளியுடன் இணைக்கப்பட்டிருக்கும். அஃது ஒலிகொள்ளியால் ஈர்க்கப்பட்ட ஒலிகளைப் பலமடங்கு பெருக்கி நாம் கேட்கும்படி வெளிப்படுத்தும்.

7. நமது இந்திய நாட்டில் இன்று வானொலி இல்லாத நகரமே இல்லை என்னலாம். அரசினர் சென்னை, திருச்சி முதலிய பல இடங்களிலும் அகில இந்திய வானொலி நிலையங்களை அமைத்துள்ளனர். எல்லா நகரங்களிலும் ஊர்களிலும் உள்ள செல்வர் இல்லங்களிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவு விடுதிகளிலும் பூங்காக்களிலும் ஒலிகொள்ளியும் ஒலிபரப்பியும் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் மேற்சொல்லப்பட்ட இடங்களில் இருந்தபடியே அகில இந்திய வானொலியிற் பரப்பப்படும் பாடல்களையும் பேச்சுக்களையும் அன்றாடச் செய்திகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். சென்ற 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ஆம் நாள் இரவு இந்தியா உரிமை பெற்றதைக் குறித்துப் பண்டித ஜவாகர்லால் நேரு முதலிய தலைவர்கள் பேசிய உருக்கம் மிகுந்த பேச்சுக்களை நாம் கேட்டு மகிழக் காரணமாக இருந்தது வானொலியே அன்றோ?

8. வானொலியால் உண்டாகிவரும் நலன்கள் மேலும் பலவாகும். வானொலியின் வாயிலாக ஒரு

நாட்டிலிருந்து பிறநாடுகட்குச் செய்திகளை மிக்க விரைவில் அறிவிக்கலாம்; ஒரு நாட்டில் ஒரே சமயத்தில் விரைவாக ஒரு செய்தியைப் பரப்பலாம்; ஓரிடத்தில் நடைபெறும் சொற்பொழிவுகள், இன்னிசைப் பாடல்கள், அறிவுரைகள், அரசியற் பிரசாரங்கள், நாடோறும் நடைபெறும் உலக நிகழ்ச்சிகள், உலக வாணிக நிலவரங்கள், கல்வித் தொடர்பான பேச்சுக்கள், உரையாடல்கள், இன்ன பிறவும் அதே சமயத்தில் எல்லா மக்களும் கேட்டுப் பயன்பெறலாம். வானவூர்திகளிற் செல்பவரும் அகன்ற கடலிற் கப்பற் பிரயாணம் செய்பவரும் இருந்த இடத்திலேயே மேற்சொன்னவற்றைக் கேட்டறியலாம். வானவூர்தியிற் செல்பவரும் கப்பலிற் செல்பவரும் தமக்குத் தீங்குநேரும் அறிகுறி தோன்றியவுடன் வானொலி வாயிலாகத் தம் நாடுகட்குச் செய்தி சொல்லி உதவி பெறலாம்.

அருஞ்சொற்பொருள்

வியத்தகு - ஆச்சரியப்படத்தகும். தலைசிறந்தது - முக்கியமானது. புலனாகாத - தெரியாத. ஈர்க்கப்பட்ட - இழுக்கப்பட்ட. வாயிலாக - மூலமாக. வாணிக நிலவரங்கள் - பொன், வெள்ளி முதலிய உலோகங்களின் விலைகள், பருத்தி முதலிய பொருள்களின் விலைகள் முதலியன. இவை செய்தித்தாள்களிலும் வெளிவருகின்றன. வானவூர்தி - ஆகாய விமானம்.

கேள்விகள்

1. ஆராய்ச்சியாளர் எவ்வாறு அரும்பொருள்களைத் தோற்றுவிக்கின்றனர்?
2. புதிய அரும்பொருள்கள் தோன்றுவதற்கு முதற் காரணமாக இருப்பது எது?
3. வானொலி எவ்வாறு தோன்றி முழுநிலையை அடைந்தது?
4. ஒலி அலைகள் என்பன யாவை?

5. வானொலியில் அமைக்கப்பட்டுள்ள மூவகைக் கருவிகள் எவை? அவற்றின் வேலைகள் யாவை?

6. வானொலியால் உண்டாகும் நலன்கள் யாவை?


பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—புலனாகாத, பயன்பெற, அறிகுறி, பகுத்தறிவு, காரணமாக, அறிவுரை.

2. எதிர்ச்சொல் கூறுக:—அறிஞர், மகிழ்ச்சி, தக்க, நெடுநாள், தெளிவாக.

3. இப்பாடத்தில் உள்ள அடுக்குத் தொடர்களைக் கூறுக.

4. மின்சார ஆராய்ச்சி, வானொலி அமைப்பு, அதன் பயன்கள் - இக்குறிப்புக்களைக்கொண்டு 'வானொலி' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.



13. டாக்டர் ஆல்பெர்ட்டு சுவெட்சர்

1. மக்களுக்காக உழைப்பதில் பேரார்வம் கொண்ட மேன்மக்கள் இன்றும் உலகில் உள்ளனர் ; உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்றனர். அத்தகையோருள் **டாக்டர் ஆல்பெர்ட்டு சுவெட்சரும்** ஒருவர். இவரது வாழ்க்கை வரலாறு மாணவர்கள் படித்து அறிய வேண்டும் ஒன்றாகும்.

2. ஆல்பெர்ட்டு சுவெட்சர் கி.பி. 1875ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14ஆம் நாளன்று பிறந்தார். இவர் செருமானியர். இவர் தந்தையார் இவர் பிறந்த சில வாரங்களில் கன்ஸ்பாகு (Gunsbach) என்னும் ஊருக்குச் சென்றார்; அங்குப் பாதிரியாராக வேலை பார்த்தார். சுவெட்சர் அவ்வூரில் தம் இளமைப் பருவத்தைக் கழித்தார். இவருக்கு ஐந்தாம் வயது தொடங்கியதும் இவர் தந்தையார் இவருக்குப் பியானோ சங்கீதம் கற்றுக்

கொடுத்தார் ; ஏழாம் வயதில் இவர் பியானேவை இசைப்பதில் திறமை பெற்று விளங்கினர். இவர் 'ஆர்கன்' என்னும் இசைக் கருவியைத் தமது எட்டாம் வயதில் வாசிக்கத் தொடங்கினர். இவருடைய முன்னேர் இசையில் சிறந்து விளங்கினர். அவர்கள் வழியில் வந்த இவரும் இசைப் புலமையில் சிறந்து விளங்கினர்.

3. இவர் இளமையிலேயே மக்களையும் பிற வுயிர்களையும் துன்புறுத்தலை வெறுத்தார் ; பறவை விலங்கு முதலிய உயிரினங்களை வருத்தும் மற்றவர்களைத் தம் வழிக்குத் திருப்ப முயன்ருர் ; ஒருநாள் இவருடைய நண்பன் பறவைகளை வேட்டையாட இவரை அழைத்தான். இவர் அவனுடன் சென்ருர் ; ஆயின், அங்குச் சென்றவுடன் பறவைகள்மேல் இரக்கம் கொண்டு, அவற்றின்மீது அம்பெய்யாமலிருக்கும் வண்ணம் நண்பனது வில்லைப் பிடித்துக்கொண்டார். அந்நேரத்தில் மாதா கோவில் மணி அடித்தது. இவர் உள்ளம் மேலும் உறுதிப்பட்டது. இவர் பறவைகளை நண்பன் வில்லிற்கு இலக்காகாதபடி வெருட்டிவிட்டு வீட்டிற்குச் சென்ருர். இந்நிகழ்ச்சி இவரது உள்ளத்தின் தன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது அன்ருே ?

4. சுவெட்சர், கன்ஸ்பாகு பள்ளியில் கி.பி. 1884ஆம் ஆண்டு வரையில் பயின்ருர் ; பின்னர் ஓராண்டு மன்ஸ்டர் பள்ளியில் பயின்றபோது இலத்தீன் மொழியைத் தனியாகக் கற்ருர் ; கி.பி. 1885இல் முல்ஹாசன் என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியிற் சேர்ந்தார். இவர் அங்குத் தம் பாட்டனரின் உதவிபெற்றுப் படித்துவந்தார். கி.பி. 1893இல் இவரது பள்ளிப்படிப்பு முடிந்துவிடவே, மீண்டும் கன்ஸ்பாகு சென்ருர். இவ்வாண்டில்தான் இவர் முதன்முதல் பாரிஸ் நகரம் சென்ருர். அங்கு இவர் சிறந்த இசைப் புலவரான

சார்லஸ் விடார் என்பவருடன் தொடர்பு கொண்டார்.

5. இவர் தம் மேற்படிப்புக்காகக் கி.பி. 1893 ஆம் ஆண்டு அக்டோபரில் ஸ்ட்ராஸ்பர்க்கும் (Strassburg) பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்; எபிரேய மொழியைக் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றுர்; பின்னர் ஓராண்டு கட்டாய இராணுவப் பயிற்சியில் சேர்ந்து தொண்டாற்றினுர். இவர் தம் பாடங்களைச் செவ்வனே படித்துவந்தார்; இவற்றுடன் இசைப் பயிற்சியையும் தொடர்ந்து மேற்கொண்டார்; பல விழாக்களில் இசைக் கருவிகளை இசைத்தார். சிறந்த இசைப்புலவர்கள் இவரது இசைப் புலமையைப் பாராட்டினர். இவர் கி.பி. 1900ஆம் ஆண்டில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுர்; தாம் கற்ற பல்கலைக் கழகத்தில் சமய இயல் ஆசிரியராகப் பதவி ஏற்றுர்.

6. இவ்வாறு தேர்வுகளில் வெற்றி பெற்று ஒரு பணியில் அமர்ந்த பின்னரும், இவர் தம் இசைப்பயிற்சியை விடவில்லை; அடிக்கடி பாரிஸ் சென்றுர்; பல இசை அரங்குகளில் இசைக்கருவிகளை மீட்டினுர். கி.பி. 1905இல் 'பாக்' என்னும் இசைக் கலைஞரைப்பற்றி இவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய நூல் வெளிவந்தது. இவ்வாறு பல்வேறு திசைகளில் தம் கருத்தைச் செலுத்திவந்த இவர், தமது முப்பதாம் வயதிற்குப் பின்பு மக்களுக்காகத் தொண்டாற்றுவதில் தம் வாழ்நாளைக் கழிக்கவேண்டும் என்று உறுதிகொண்டார். இந்த உறுதி செயலாகும் வாய்ப்பு இவர்க்குக் கிடைத்தது.

7. இவர் ஒருநாள் பாரிஸ் கிறித்துவப் பிரசார சங்கத்தின் செய்தித்தாள் ஒன்றைப் படித்தார்; அதனில் இருந்த "காங்கோ மிஷன் சங்கத்தின் தேவைகள்" என்ற தலைப்பில் அமைந்த

கட்டுரையைப் படித்தார். அதனில் காங்கோ குடியேற்றத்தின் வடபகுதியில் பணிபுரிய ஊழியர்கள் தேவை என்ற குறிப்புக் காணப்பட்டது. உடனே இவர் தாம் தொண்டு செய்வதற்கேற்பட்ட இடம் அதுவேயெனக் கொண்டார்; அங்குச் சென்று தாம் செய்ய வேண்டும் பணி 'பிணி தீர்க்கும் பணியே' என்பதை மனத்தில் கொண்டார்; கி.பி. 1905ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13ஆம் நாள் பாரிஸிலிருந்து தம் பெற்ரோர்க்கும் நண்பர்க்கும் இது குறித்துக் கடிதங்கள் வரைந்தார்.

8. இவர் கொண்ட முடிவினைக் கேட்ட நண்பர்களும் உறவினரும் நகைத்தனர்; பொருந்தாத கருத்து எனக் கூறினர். இருப்பினும், இவர் மனந்தளராமல், மற்றவர் கூற்றினையும் பொருட்படுத்தாமல், கி.பி. 1905ஆம் ஆண்டு மருத்துவ மாணவராகச் சேர்ந்தார்; கி.பி. 1911இல் மருத்துவத் தேர்வு எழுதி வெற்றி பெற்ருர்; அடுத்த ஆண்டு மருத்துவ மனையில் பணி புரிந்து கொண்டே மருத்துவப் பட்டத்துக்கான ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி முடித்தார்; பின்னர் ஆப்பிரிக்காவிற்குச் செல்ல உறுதி கொண்டார்.

9. இவர் கி.பி. 1912ஆம் ஆண்டு சூன் திங்கள் தம்மை நன்கு அறிந்திருந்த ஹெலன் பிரஸ்லோ என்னும் நங்கையாரை மணந்தார். அவர் தாதிக்குரிய பயிற்சி பெற்றிருந்தார். அவர் தம் கணவருடைய பணிகளில் பங்கேற்றுச் சிறந்த துணைவியாராக விளங்கினுர். சுவெட்சர் அதே ஆண்டில் பாரிஸ் நகரம் சென்று வெப்ப நாடுகளுக்கேற்ற மருத்துவமுறை பயின்ருர்; மருந்துகள் முதலியவற்றை வாங்கிச் சேர்த்துக்கொண்டார்.

10. இவரையும் இவர் மனைவியாரையும் ஏற்றிச் சென்ற 'ஐரோப்பா' என்ற கப்பல்

பிரான்ஸிலிருந்து ஆப்பிரிக்காவிற்குக் கி.பி. 1913 ஆம் ஆண்டு மார்ச்சு 20ஆம் நாள் புறப்பட்டது. இவர் லாம்பரீனி என்னும் இடத்தில் முதன் முதலில் இறங்கினர். அங்குள்ள கிறித்துவ சங்க நிலயம் இவரை வரவேற்றது. அங்கு இவர் நாலரை ஆண்டுகள் பணியாற்றினர். இவர் தமக்கு அளிக்கப்பட்டிருந்த இடத்தில், முன்பு குடியிருந்த சமய போதகர் கோழிக்கூடாகப் பயன்படுத்திய அறையை மருத்துவம் செய்வதற் கெனப் பயன்படுத்திக்கொண்டார்.

11. இவர் நாள்தோறும் காலை எட்டரை மணிக்கே நோயாளிகளைப் பார்க்கத் தொடங்கு வார். நோயாளிகள் இவர் வீட்டு நிழலில் காத்தி ருப்பர். இவருடைய உதவி ஆட்களுள் ஒருவன் மருத்துவர் கட்டளைகளை அவர்களுக்குப் படித்துக் காட்டுவான். அவர்களும் அவற்றைக் கேட்டுக் கொள்வர். இவர் நடுப்பகல் வரையில் தொடர்ந்து மருத்துவம் பார்ப்பார்; பின்னர் உணவருந்தச் செல்வார். நோயாளிகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த உணவை உண்பர். பின்னர் மறுபடி யும் இரண்டு மணி முதல் ஆறுமணிவரையிற் பரிசோதனை நடக்கும். அப்படியும் பாராமல் விடப் பட்ட நோயாளிகள் மறுநாள் கவனிக்கப்படுவர். இவ்வாறு இவர் தமது பணியைச் செய்துவந்தார்.

12. லாம்பரீனியில் உள்ள நீகிரோவர் கொடிய நோயால் துன்பப்பட்டனர். மருத்துவர், வயிற்றுக்கடுப்பு, தூங்குநோய் முதலிய பிணி யுடையவர்களைத் தனித்தனியே தங்கவைப்பதற் காகவும், பிற நோயாளிகளைத் தனியாக வைப்பதற் காகவும் கட்டடம் கட்ட விரும்பினர்; அவ்வாறே கட்டியும் முடித்தார். இவருக்கு உதவியாக இவர் மனைவியாரும் ஜோசபு என்பவனும் இருந்தனர். நோயாளிகள் பல இடங்களிலிருந்து வந்து மருந்து பெற்றுச் சென்றனர். சிலர் தாம் பெற்ற மருந்துக்

குப் பதிலாகத் தங்களுக்குக் கிடைத்த பணத்தையும் பொருள்களையும் அளித்தனர்.

13. ஐரோப்பாவிலிருந்து கி.பி. 1913ஆம் ஆண்டின் இறுதியில் மருந்துகள் வந்து சேர்ந்தன. அவைகளைக்கொண்டு மேலும் பலர்க்கு மருத்துவம் செய்ய வாய்ப்பு உண்டானது. இவரால் நோய் தீர்க்கப்பெற்ற சிலர் இவர் கட்டடம் கட்டும் பணியில் பங்குகொண்டனர். அக்கட்டடங்களில் பிணியாளர்கள் தங்க வசதி ஏற்பட்டது. இவர் பைத்தியம் பிடித்தவர்களையும் நலமாக்கினுர்.

14. இரண்டு உலகப் போர்கள் நடந்த காலத்தும் இம்மருத்துவ மனைக்குக் கெடுதல் ஏற்படவில்லை. இவர் அடிக்கடி பாரிஸ், அமெரிக்கா போன்ற பல இடங்களுக்கும் சென்று இசைக் கருவிகளை இசைத்தும், சொற்பொழிவுகள் செய்தும் மிகுதியாகப் பொருள் திரட்டினுர். இவர் நண்பர்களும் இவரது பெயரில் சங்கமொன்று அமைத்து, அதன்மூலம் பணம் திரட்டி, இவர்க்கு உதவினர். இவர் இவ்வாறு பலவகையிலும் வந்த பணத்தை மருந்துகள் வாங்கவும், நோயாளிகள் வசதியாகத் தங்குவதற்குரிய மனைகள் கட்டவும், படுக்கைகள் தயாரிக்கவும் செலவிட்டார்; நீகிரோவர்க்கு மருத்துவம் மட்டுமன்றிச் சமய போதனையும் செய்தார்.

15. இங்ஙனம் கல்வியறிவற்ற நீகிரோ மக்களுக்குப் பலவகையிலும் நன்மை செய்த டாக்டர் ஆல்பெர்ட்டு சுவெட்சரைப் பல நாடுகள் பாராட்டின; பரிசுகளும் சிறப்புக்களும் நல்கின. இவர் கி.பி. 1953இல் **நோபெல் பரிசு** பெற்ருர். கி.பி. 1955இல் பிரிட்டிஷ் அரசியார் இவருக்குப் பட்டம் அளித்துப் பாராட்டினுர். இவர் தாம் பெற்ற பரிசுகளையெல்லாம் மருத்துவமனைகளின் வளர்ச்சிக்கே பயன்படுத்தினுர்; தம் இடையருத வேலைகளுக்கு இடையில் பல அரிய நூல்களையும் எழுதி வெளியிட்டார். “***என் கடன் பணி செய்து***

கிடப்பதே" என்பதுவே இவரது வாழ்க்கையின் குறிக்கோள். இப்பெரியாரைப் போல மக்களுக்குத் தொண்டு செய்பவரே, 'உலகப் பெரியார்' என்று மதிக்கப்பெறுவர்.

அருஞ்சொற்பொருள்

பேரார்வம் - பெருமை + ஆர்வம்; ஆர்வம் - ஆவல். பியானே - மேல்நாட்டு இசைக் கருவிகளுள் ஒன்று. வெருட்டிவிட்டு - துரத்திவிட்டு. பாரிஸ் நகரம் - பிரான்ஸ் என்னும் நாட்டின் தலைநகரம். வாய்ப்பு - சந்தர்ப்பம். காங்கோ - ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. பணிபுரிய - தொண்டு செய்ய. நங்கை - பெண்களில் சிறந்தவள்; இங்கு இச்சொல் ஒரு பெண்மணியைக் குறிக்கிறது. தாதி - மருத்துவமனையில் நோயாளிகளுக்கு உதவி புரியும் பெண்மணி (Nurse). நீகிரோவர் - ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழும் ஓர் இனத்தவர். இடையருத - ஓய்வில்லாத. பணி - தொண்டு.

கேள்விகள்

1. ஆல்பெர்ட்டு சுவெட்சரிடம் இளமையில் காணப்பட்ட இரக்கப் பண்பை எதனுல் அறியலாம்?
2. சுவெட்சரின் மனைவியார் எத்தகையவர்?
3. சுவெட்சர் நீகிரோவருக்கு எங்ஙனம் தொண்டு செய்தார்?
4. சுவெட்சரை 'உலகப் பெரியார்' என்று அழைப்பது எவ்வாறு பொருந்தும்?

பயிற்சி

1. சுவெட்சரின் 'கல்விப் பருவம்' என்னும் தலைப்பில் இருபத்தைந்து வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

2. சேர்த்துக் கூறுக:—இசை + புலமை, வில்லை + பிடித்து, பிடித்து + கொண்டார், இளமை + பருவம், தனியாக + கற்ருர், இராணுவம் + பயிற்சி, இசை + கலைஞர்.

3. பிரித்துக் காட்டுக:—வடபகுதி, மனந்தளராமல், பொருட்படுத்து, மருத்துவப்பட்டம், சமயபோதகர், உணவருந்த, நடுப்பகல்.

4. 'சுவெட்சர் ஆப்பிரிக்காவில் செய்த தொண்டு' என்னும் தலைப்பில் முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

14. இந்திய ஒருமைப்பாடு

1. நமது உடலில் தலை, கழுத்து, மார்பு, வயிறு, தொடை, கை, கால் முதலிய உறுப்புக்கள் பல உள்ளன. இவை அனைத்தும் சேர்ந்த ஒன்றே உடல் என்பது. இதுபோலவே கிழக்குப் பஞ்சாபு, இமயமலைப் பகுதி, உத்தரப் பகுதி, பீகார், வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, ஆந்திரம், இராசஸ்தானம், தமிழகம், கேரளம், கருநாடகம் எனப் பல மாநிலங்கள் சேர்ந்த நிலப்பகுதிக்கே **இந்தியா** என்பது பெயராகும்.

2. தலை, கை, கால் முதலிய உறுப்புக்களில் ஏதேனும் ஒன்று நலம் குறைந்து இருப்பின், உடலின் நலம் குறையும். அதுபோலவே ஏதேனும் ஒரு மாநிலத்தில் குழப்பங்களோ பூசல்களோ ஏற்படுமாயின், நாட்டில் அமைதி குறையும். ஏதேனும் ஒரு மாநிலம் கல்வியில் குறைந்தோ வறுமையில் வாடியோ இருக்குமாயின், இந்திய நாட்டின் சிறப்புக் குறையும்; அமைதியும் குறையும். உடலில் உள்ள எல்லா உறுப்புக்களும் நன்னிலையில் இருந்தால்தான் உடல் நலம் செம்மையாக இருக்கும். அது போலவே இந்திய நாட்டின் எல்லா மாநிலங்களிலும் மக்கள் கவலையின்றி வாழ வசதியிருந்தால் தான் நாடு நன்னிலையில் இருக்கும்.

3. இந்திய நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில அரசாங்கம் இருந்துவருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக **நடு அரசாங்கம்** என்பது ஒன்று உண்டு. அது தில்லியிலிருந்து நாடு முழுமையும் ஆட்சி புரிகிறது. அந்நடு அரசாங்கம் ஒவ்வொரு மாநில முன்னேற்றத்திலும் கருத்தைச் செலுத்திவருகிறது.

4. மாநில அரசாங்கம் தன் மாநிலத்தில் நீர்ப்பாசன வசதியை உண்டாக்குகிறது; பாதைகளைச் செப்பனிடுகிறது; பள்ளிகளைத் திறக்கிறது; வாணிகத்திற்கு உதவி புரிகிறது; இங்ஙனம் மாநிலத்திற்குச் சிறப்பாக வேண்டுவனவற்றையெல்லாம் செய்கிறது. நடு அரசாங்கம் நாடு முழுமையிலும் உள்ள இரயில் பாதைகளைப் பாதுகாக்கிறது; புதுப்பிக்கிறது; ஏற்றுமதி இறக்குமதி வேலைகளைக் கவனிக்கிறது; நாட்டைக் காக்கப் படையை வைத்திருக்கிறது. இவ்வாறு மாநில அரசாங்கமும் நடு அரசாங்கமும் ஒத்துழைத்து நமது நாட்டைக் காத்துவருகின்றன.

5. நமது இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஏறத்தாழ ஒவ்வொரு மொழியினைப் பேசும் மக்களே ஒவ்வொரு மாநிலத்திலும் மிக்குள்ளனர். சான்ருக, வங்க மாநிலத்தில் வங்க மொழி பேசும் மக்களே மிகுந்துள்ளனர்; தமிழகத்தில் தமிழரே மிக்குள்ளனர். ஆயினும் ஒவ்வொரு மாநிலத்திலும் வேற்று மொழிகளைப் பேசும் மக்களும், அஃதாவது, பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்களும் சிலர் உள்ளனர். அவர்கள் அரசாங்க அலுவல் காரணமாகவும், வாணிகம் காரணமாகவும், பல்வேறு தொழில்கள் காரணமாகவும் தங்கியுள்ளவராவர்.

6. நமது தமிழகத்தில் வடநாட்டு முஸ்லிம்கள் இரும்புக் கடைகளையும், ஆடைக் கடைகளையும் வைத்துள்ளனர்; மார்வாரிகள் வட்டிக் கடை வைத்துள்ளனர்; குசராத்திகள் வாணிகம் செய்கின்றனர். ஆந்திரர், கன்னடர், மலையாளிகள் முதலியோர் வாணிகத்திலும் அரசாங்க அலுவல்களிலும் ஈடுபட்டுள்ளனர். தமிழர்க்கும் இப்பிற மாநிலத்தார்க்கும் மொழியில் வேறுபாடு உண்டு; உடை உணவுகளிலும் சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. ஒரே உடம்பில் உள்ள கைக்கும் காலுக்

கும் வேறுபாடு இருப்பதுபோலவே இவ்வேறு பாடுகளையும் நாம் கொள்ளவேண்டும்.

7. தலைக்கும் வயிற்றுக்கும் வேறுபாடு இருப்பினும், அவை ஒருடலின் உறுப்புக்கள். அது போலவே ஒவ்வொரு மாநிலத்தாரிடமும் சிற்சில வேறுபாடுகள் காணப்படினும், அவர் அனைவரும் இந்திய நாட்டினர்—இந்திய மாநில மக்கள் என்பதை நாம் மறத்தல் ஆகாது. இந்த நினைவு இருக்குமாயின், ஒரு மாநிலத்தவர் மற்றொரு மாநிலத்தவரிடம் களங்கமின்றிப் பழகுவர்; ஒருவரை ஒருவர் விரும்புவர்; ஒற்றுமையாக வாழ்வர்.

8. ஒரு மாநிலத்திற்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அந்த மாநிலத்திலேயே உண்டாவதில்லை; அவை பல்வேறு மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. சான்றாகக் **கோதுமை** நமது தமிழகத்தில் விளைவதில்லை. அது பஞ்சாபு முதலிய மாநிலங்களில் விளைகின்றது; அங்கிருந்து தமிழகத்திற்கு வருகிறது. நாம் அதனை விரும்பி வாங்குகிறோம்; அதைக்கொண்டு பல உணவுப்பொருள்களைச் செய்து உண்கிறோம். நமக்குத் தேவைப்படும் கோதுமை வேறு மாநிலத்தது என்னும் காரணத்தால் நாம் அதனை வெறுப்பதில்லை.

9. துவரம்பருப்பும் கடலைப்பருப்பும் பஞ்சாபு, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மிகுதியாகப் பயிராகின்றன. நம் தமிழ் வணிகர் அங்கு அவற்றை வாங்கி நமது மாநிலத்திற்கு அனுப்புகின்றனர். நமது மாநிலத்துக் கோவில்பட்டியிலும் சிவகாசியிலும் செய்யப்படும் தீப்பெட்டிகள் இந்தியா முழுமையும் பரவுகின்றன. நம் தமிழ் வணிகர் வட இந்தியப் பெருநகரங்களில் குடியேறி வாணிகம் செய்கின்றனர். வட இந்திய வணிகர் தென்னிந்தியாவில் குடியேறி வாணிகம் செய்கின்றனர். சென்னை நகரத்

தில் சிந்தியர், பஞ்சாபியர், குசராத்தியர், மார்வாரிகள், ஆந்திரர், கன்னடர், மலையாளிகள் எனப் பல மாநிலத்து மக்கள் அலுவல் துறையிலும் வாணிகத் துறையிலும் மருத்துவத் துறையிலும் உள்ளனர். இவர் அனைவரும் இந்திய நாட்டினர் என்னும் உணர்ச்சியோடு தத்தம் வேலைகளில் ஈடுபட்டு ஒற்றுமையோடு உழைக்கின்றனர்.

10. பாரதமும் இராமாயணமும் இந்திய நாடு முழுமையையும் பிணைத்துள்ள பெருங்கதைகள் ஆகும். வட இந்தியர் காசியிலிருந்து இராமேசுவரம் வரையில் யாத்திரை செய்கின்றனர். இவ்வாறே தென்னிந்தியர் இராமேசுவரம் முதல் காசி வரையிலும் அதற்கு அப்பாலும் யாத்திரை செய்கின்றனர். இப்பழக்கம், இன்று நேற்று ஏற்பட்டதன்று; பல நூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே இருந்துவரும் சமயப் பழக்கம் ஆகும். வட இந்தியாவில் தோன்றிய வைதிக சமயமும், சமண சமயமும், பௌத்த சமயமும் இந்தியா முழுமையும் பரவின. இவ்வாறு பண்டுதொட்டே இந்தியா ஒரே நாடு என்னும் உணர்ச்சி இந்நாட்டுமக்களிடம் இருந்துவந்தது உண்மையாகும்.

11. இந்திய நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு மொழி பேசுவோருக்கும் பிறிதொரு மொழி பேசுவோருக்கும் மொழியிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபாடுகள் காணப்படலாம். ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சி இந்த அனைவரையும் அரசியலாலும் ஆங்கில மொழியாலும் பிணைத்தது. இன்று இந்தியக் குடியரசு நாடு முழுமையையும் பிணைத்திருக்கின்றது.

12. சங்க காலத் தமிழர் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் உயர்ந்த கொள்கையுடையவர்; அதனால் பல நாடுகளுக்குச் சென்றனர்; அந்தந்த நாட்டு மக்களுடன் மனம் கலந்து பழகினர்; வாணிகம் செய்தனர்; பெரும்பொருள்

ஈட்டினர். அவர்கள் வழிவந்த நாமும் அக் கொள்கையினை உடையவராய் வாழவேண்டும். 'இந்தியா ஒரு நாடு. இதனில் பல்வேறு மொழியினர்-பல சமயத்தினர் வாழ்கின்றனர். ஆயினும் அவர் அனைவரும் இந்தியத் தாயின் இனிய பிள்ளைகள். நாம் அனைவருடனும் இனிமையாகப் பழகவேண்டும்; அனைவருடனும் ஒற்றுமையாக வாழவேண்டும். ஒற்றுமையே நமது நாட்டை முன்னேற்ற வல்லது,' என்னும் உயரிய கொள்கையைச் செயலில் காட்டுதல் வேண்டும்.

அருஞ்சொற்பொருள்

உத்தரம் - வடக்கு. இயங்கி - நடந்து. புரிகிறது - செய்கிறது. சான்றாக - உதாரணமாக. களங்கம் - அழுக்கு. கேளிர் - உறவினர். ஈட்டினர் - சம்பாதித்தனர்.

கேள்விகள்

1. இந்திய நாடு நமது உடலைப் போன்றது என்பது எவ்வாறு பொருந்தும்?
2. மாநில அரசாங்கம் செய்யும் கடமைகள் யாவை?
3. நடு அரசாங்கம் எக்கடமைகளை ஆற்றுகிறது?
4. தமிழகத்தில் வேறு மாநிலத்தவர் ஏன் இருக்கின்றனர்?
5. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' — இதன் பொருள் யாது?
6. உயரிய கொள்கை யாது?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—அனைத்தும், அமைதி, முன்னேற்றம், முழுமை, அலுவல், வேறுபாடு, குடியேறி, கொள்கை.


2. இப்பாடப் பொருளைச் சுருக்கி முப்பது வரிகளுள் ஒரு கட்டுரை வரைக.

3. இந்திய நாட்டு ஒவ்வொரு மாநிலமும் இந்நாட்டுப் பிற மாநிலங்களுக்கு எவ்வெத் துறைகளில் கடமைப்பட்டுள்ளது என்பதை, நூல் நிலையத்திலுள்ள நூல்களின் உதவி கொண்டு புலப்படுத்துக.

4. மாணவர் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எங்ஙனம் உதவுதல் கூடும் என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

15. இளைஞர் இயக்கங்கள்

1. ஒரு சமயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுகூடிப் பழகவும் பொழுதுபோக்கவும் கல்வி கற்கவும் இளைஞர் இயக்கம் முதலில் தோன்றியது. அங்ஙனம் தோன்றிய முதல் கழகம் **கிறித்துவ இளைஞர் கழகம்** ஆகும். அது **ஜார்ஜ் வில்லியம்** என்ற இளைஞரால் கி. பி. 1844 இல் இலண்டன் மாநகரில் நிறுவப் பட்டது. கிறித்துவ சமயத்தின் அடிப்படையில் தொடங்கப்பெற்ற இக் கழகம், இன்று எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. காலப் போக்கில் இக்கழகம் பிற சமயங்களைச் சேர்ந்த இளைஞர்களையும் கூட்டு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டது.



கிறித்துவ இளைஞர் கழகக் கட்டடம்
(Y. M. C. A., Madras.)

2. கிறித்துவர் மிக்குள்ள ஒவ்வொரு பெரிய நகரத்திலும் இக்கழகம் இருக்கின்றது. இக்கழகம் கல்வி, சமயப்பணி, சமூக முன்னேற்றம் ஆகிய

மூன்று துறைகளிலும் இளைஞர்களைப் பழக்குகிறது; அவர்களுக்குத் தேவையான உடற்பயிற்சி விளையாட்டுக்களிலும் அவர்களை ஊக்குவிக்கிறது. இக் கழகக் கட்டடத்தில் நூல்நிலையம், படிப்பகம், சொற்பொழிவு மன்றம், உடற்பயிற்சிக் கூடம், உணவு விடுதி, விளையாட்டுக்குரிய இடங்கள் என்பன அமைந்துள்ளன. சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள கழகக் கட்டடத்தில் இளைஞர்கள் நிலையாகத் தங்கியிருக்கவும், சில நாள் தங்கியிருக்கவும் பல அறைகள் உண்டு.

3. சென்னையில் உள்ள கிறித்துவ இளைஞர் கழகக் கட்டடம் சட்டக் கல்லூரிக்கு எதிரில் நான்கு அடுக்குக்களுடன் திகழ்கிறது. முதல் அடுக்கில் உணவகமும் விளையாடும் வெளியும் சிறப்பாக அமைந்துள்ளன. இரண்டாம் அடுக்கில் சொற்பொழிவு மன்றம் மிகப் பெரிய அளவில் விளங்குகின்றது. அவ்வடுக்கிலேயே நூலகமும் படிப்பகமும் இருக்கின்றன. மூன்றும் அடுக்கிலும் நான்காம் அடுக்கிலும் உறுப்பினரும் பிற ஊர்களிலிருந்து வருவோரும் தங்கத்தகும் அறைகள் உள்ளன. இளைஞர் காலை மாலைகளில் உடற்பயிற்சி செய்கின்றனர்; படிப்பகத்தில் வரும் பலவகைச் செய்தித் தாள்களைப் படிக்கின்றனர். நூலகத்திலிருந்து நூல்களைப் படிக்கின்றனர்.

4. பல நாடுகளிலிருந்து சென்னைக்கு வரும் அரசியல் தலைவர்கள், விஞ்ஞான மேதைகள் முதலிய பலதுறை அறிஞர்களும், அவ்வப்போது சொற்பொழிவு மன்றத்தில் சொற்பொழிவு ஆற்றுகின்றனர். அச்சொற்பொழிவுகள் இளைஞர்க்கேயன்றி முதியவர்க்கும் அறிவு வளர்ச்சியை உண்டாக்குகின்றன. பலதுறை அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதனால் இளைஞர்கள் பல துறை அறிவைப் பெறுகின்றனர். இங்ஙனம் அறிவு வளமும் மன வளமும் உடல் வளமும் பெறக்

கிறித்துவ இளைஞர் கழகம் பெருந்துணை புரிகின்றது என்று கூறலாம். இங்ஙனமே **இந்திய இளைஞர் கழகம்** என்பதும் ஓரளவு பணி புரிகின்றது.

5. ***கிறித்துவப் பெண்கள் கழகம்*** என்பதும் கிறித்துவ இளைஞர் கழகத்தைப் போலவே எல்லா நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளது. அது பிற சமயத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் பயன்படுகிறது. அது சென்னையில் பூந்தமல்லிப் பெருவழியில் அமைந்துள்ளது. அக்கட்டடத்திற்கு முன்பு மிகப் பரந்த வெளி இருக்கிறது. கழக உறுப்பினராய் உள்ள பெண்கள் காலையிலும் மாலையிலும் அவ்வெளியில் பூப்பந்தாட்டம் முதலிய ஆட்டங்களை ஆடுகின்றனர்; அடிக்கடி அறிஞர்களை வரவழைத்துச் சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயன் பெறுகின்றனர்; ஓய்வு நேரங்களில் கிறித்துவ இளைஞர்களைப்போலவே சமூகப் பணியிலும் ஈடுபடுகின்றனர்; விடுமுறை நாட்களில் இன்பச் செலவை மேற்கொள்கின்றனர்.

6. ***செஞ்சிலுவைச் சங்கம்*** என்பது இளைஞர் இயக்கங்களுள் ஒன்றாகும். இச்சங்கம்



செஞ்சிலுவைச் சங்கத்தார் தொண்டு

போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு மருந்து முதலியவற்றை உதவுவதற்காகவே முதலில்


தோற்றுவிக்கப்பட்டது. இதனைத் தோற்றுவித்த பெரியார் ஹென்றி டுனண்டு* என்பவர். அவர் சுவிட்சர்லாந்து செல்வநிலைய முதலாளி. அவர் கி.பி. 1859இல் இத்தாலியில் நடைபெற்ற கடும் போரைக் கண்ணுற்றவர்; அப்போரில் புண்பட்ட வீரரைக் கண்டு துடித்தவர்; அவர்களுக்கு நீர் கொடுத்தும் புண்களுக்கு மருந்திட்டுக் கட்டியும் உதவி செய்தவர்.

7. ஹென்றி டுனண்டு தமது செல்வநிலைய வேலையை விட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தார்; அவரது இடைவிடா உழைப்பால் பல நாடுகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் தோன்றலாயிற்று. செஞ்சிலுவைச் சங்கம் அருளை அடிப்படையாகக் கொண்டது. அது போர்புரியும் இரு திறத்தாருக்கும் உதவி செய்கிறது; போர்க் களத்தில் புண்படுவோர்க்கும் சிறைப்படும் வீரர்க்கும் மருத்துவ வசதி அளிக்கிறது. அச்சங்கம் போர் இல்லாத காலங்களில் நாட்டு மக்களது சுகாதாரத்தைப் பேணுதல், கொடிய நோய்களைத் தடுத்தல், எதிர்பாராத விபத்துக்களால் துன்புறும் மக்களது துயரைப் போக்குதல் என்னும் மூன்று துறைகளிலும் அமைதியாகப் பணியாற்றிவருகிறது.

8. இச்சங்கத்தில் சேர்ந்துள்ள இளைஞர்கள் சாதி, சமய வேறுபாடுகளை மறந்துவிடுவர்; எந்நாட்டவர்க்கும் உதவுவதற்கு முந்துவர்; 'எல்லோரும் இறைவன் மக்கள், மக்கள் தொண்டே இறைவன் தொண்டு' என்னும் உண்மையை உணர்வர்; எல்லோரிடத்திலும் இனிய முகத்துடன் பேசிப் பழகுவர்; பிறர்க்குத் தொண்டு செய்வதிலேயே பேரின்பத்தைக் காண்பர்; உள்ளத் தூய்மையுடன் உடல் தூய்மையையும்

*Henry Dunant

கவனிப்பர். அந்நன்மக்கள் தாம் நடந்து செல்லும் பாதையில் கிடக்கும் ஆணி, இலாடம், கண்ணாடித் துண்டுகள் முதலியவற்றை அகற்றுவர்.



திருவிழாவில் சாரணர் உதவி

9. இளைஞர் இயக்கங்களுள் *சாரணர் இயக்கமும்* ஒன்றாகும். சிறுவர்களை எதிர்காலத்தில் பொறுப்புள்ள குடிமக்களாக்கவே சாரணர் இயக்கம் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர் *பேடன் பவல் பிரபு** என்பவர். அவர் ஒரு படை வீரராய் இருந்து ஓய்வு பெற்றவர். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பது முதுமொழி; ஆதலால் இளைஞர் உள்ளங்களில் நற்பண்புகளை ஊட்டினால், அவை அவர்கள்

---

*Lord Baden Powell

உள்ளங்களில் வேரூன்றித் தழைத்து, அவர்தம் வாழ்நாள் முழுமையும் அவர்களை நல்லவராகவே விளங்கச் செய்யும். இந்த உண்மையை அடிப் படையாகக் கொண்டே இந்த இயக்கம் உண் டாக்கப்பட்டது.

10. சாரணர் கடவுளிடமும் அறத்திடமும் மதிப்புடையவர் ; பொறுப்புள்ள குடிமக்களாக விளங்குபவர் ; எதனையும் கூர்ந்து நோக்கும் பயிற்சி உடையவர்; தந்நம்பிக்கை பெற்று விளங்கு பவர் ; பிறர் நலத்தைப் பேணுபவர் ; சாதி சமய வேறுபாடுகள் அற்று நாடு நலம்பெற அனைவ ருடனும் சேர்ந்து தொண்டு புரிபவர் ; தேவை உண்டாயின் பிறர் நலத்துக்காகத் தந்நலத்தை விட்டுக் கொடுப்பவர்.

'எம்கடன் பணி செய்து கிடப்பதே'

என்பதுவே அவர்தம் கொள்கை.

அருஞ்சொற்பொருள்

சமயம் - மதம். கிறித்துவ இளைஞர் கழகம் - Young Men's Christian Association, (Y. M. C. A.). கிறித்துவப் பெண்கள் கழகம் - Young Women's Christian Association, (Y. W. C. A.). இந்திய இளைஞர் கழகம் - Young Men's Indian Association, (Y. M. I. A.). நிறுவப்பெற்றது - அமைக் கப்பட்டது. உணவகம் - உண்டிச்சாலை, உணவு விடுதி. மேதை - அறிஞன். செல்வநிலையம் - பாங்கு (Bank). கண் ணுற்றார் - பார்த்தார். பேணுதல் - பாதுகாத்தல். பெருவழி - நெடுஞ்சாலை (High road). பணி - தொண்டு.

கேள்விகள்

1. கிறித்துவ இளைஞர் கழகம் செய்யும் தொண்டுகள் யாவை ?
2. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணம் என்ன?

3. செஞ்சிலுவைச் சங்கம் செய்யும் பணிகள் யாவை?
4. சாரணர் இயக்கம் தோன்றக் காரணம் யாது?
5. சாரணர் எப்படி நாட்டுக்குகந்த நன்மக்களாகின்றனர்?
6. இளைஞர் இயக்கங்களால் உண்டாகும் நலன்கள் யாவை?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—தேவை, சொற்பொழிவு, நூலகம், படிப்பகம், அடிப்படை, அமைதி, வேறுபாடு, நற்பண்புகள்.

2. எதிர்ச்சொல் கூறுக:—இளைஞர், பெரிய, காலை, பகல், பலவகை, பெருவழி, செல்வம், வேறுபாடு, முந்துவர், இன்பம்.

3. உங்கள் ஊரில் உள்ள கிறித்துவ இளைஞர் கழகப் பணிகள் பற்றி அல்லது வேறு இளைஞர் கழகப் பணிகள்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

4. சாரணர் இயக்கம்பற்றி ஒரு கட்டுரை வரைக.

16. நள்ளியின் கொடைத்தன்மை

(நாடகக் காட்சி)

முதற் காட்சி

[வன்பரணர் என்பவர் சங்ககாலப் புலவர். அவர், அவர் மனைவி, பிள்ளைகள் ஆகியோர் பழுமரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப்போல் பரிசில் அளிக்கும் வள்ளலை நாடி வழி நடந்தனர். வானுற ஓங்கிய மலையொன்று சேய்மையில் காணப்பட்டது. அதனை அடுத்துப் பெருங் காடொன்று அமைந்திருந்தது. புலவரும் அவர் குடும்பத்தினரும் அம் மலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

மூத்த மகன் : அப்பா, அம்மலைச்சரிவில் தண்ணீர் விழுவதுபோல் தெரிகிறதே! அஃது என்ன?

வன்பரணர் : அஃது அருவி எனப்படும். அது மலையிலிருந்து கீழ்நோக்கி விழுகிறது. அங்ஙனம் கீழே விழுந்தவுடன் அது சிற்றாருகவோ பேரியாருகவோ நிலத்தில் பாயும்.

இரண்டாம் மகன் : அப்பா, மலையடிவாரத்தில் சில குடில்கள் இருக்கின்றனவே, அவற்றில் யார் வாழ்கின்றனர்?

வன்பரணர் : அந்தக் குடில்களில் மலையையும் மலையை அடுத்துள்ள காட்டையும் காவல் புரியும் வேட்டுவர் வாழ்கின்றனர் என்று நினைக்கிறேன்.

மூத்த மகன் : அப்பா, மலைக்கும் காட்டுக்கும் காவல் தேவையா?

வன்பரணர் : ஆம், ஆம். காவல் தேவைதான். காவல் இல்லையாயின், மலையிலும் காட்டிலும் உள்ள மரங்களைச் சிலர் வெட்டி எடுத்துச்

செல்வர். மலையில் இருக்கும் தேன்கூடுகள் மக்களால் சிதைக்கப்படும். மலையில் விளையும் பழங்கள் முதலியவற்றையும் சிலர் கவர்ந்து செல்வர்.

மனைவி: அருகில் ஊர் இருப்பதாகத் தெரிய வில்லையே! எந்த வள்ளல் நமது வறுமையைத் தீர்ப்பானோ, தெரியவில்லை!

வன்பரணர்: துயரப்படாதே, கடவுள் காப்பார்.

மூத்த மகன்: அப்பா, இக்காட்டில் வெயிலின் வெப்பமே தெரியவில்லையே!

வன்பரணர்: ஆம். இங்கு மரங்கள் நெருக்கமாக வளர்ந்துள்ளன. அதனால் மரங்களின் நிழல் மிகுதியாக இருக்கிறது. இத்தகைய காடு, மரங்கள் அடர்ந்த காடு எனப்படும்.

மூன்றும் மகன்: அம்மா, பசி வயிற்றைக் கிள்ளுகிறது. (அழுதல்.)

தாயார்: பசியைப்பற்றி அப்பாவிடம் சொல்.

வன்பரணர்: அவன் சொன்னது காதில் விழுந்தது. (பையனைப் பார்த்து) தம்பி, எங்களுடன் நடந்து வா. விரைவில் உன் பசி தீரும்; எங்கள் பசியும் தீரும். (மேலும் வழி நடத்தல்.)

மனைவி: அங்குப் பாருங்கள், எவனோ ஒரு மனிதன் வருகிறான்.

(அந்த அம்மையார் காட்டிய திசையை எல்லோரும் பார்த்தல்.)

வன்பரணர்: ஆம். ஒருவன் வருகிறான். அவன் கையில் வில்லும் அம்பும் இருக்கின்றன. அவனது தோற்றமும் உடையும் அவன் வேட்டுவன் என்பதை உணர்த்துகின்றன.

அவன் இந்த மலைநாட்டினனோ, அல்லது எந்நாட்டினனோ தெரியவில்லை. அவன் நம் பசியைப் போக்கக் கடவுளால் அனுப்பப் பட்டவன் என்று நினைக்கிறேன்.

மனைவி : உங்கள் எண்ணப்படியே நடக்கட்டும்.

இரண்டாம் காட்சி

[வில்லும் அம்பும் ஏந்தி வந்தவன் அம்மலைநாட்டுத் தலைவனான நள்ளி என்பவன். அவன் தோட்டிமலை நாட்டுத் தலைவன். அவன் புலவரையும் அவர் குடும்பத்தினரையும் கண்டு முகமலர்ச்சியோடு நெருங்குதல்.]

நள்ளி : ஐயா, நீங்கள் யார்? எங்குச் செல் கின்றீர்?



புலவர் : ஐயா, யான் ஒரு புலவன், இவள் என் மனைவி. இவர்கள் எம் மக்கள். நாங்கள் எங்கள் வறுமையைத் தொலைக்கும் வள்ளலை நாடிச் செல்கின்றோம்.

நள்ளி : (முக மலர்ச்சியுடன்) நீங்கள் புலவரா? மிக்க மகிழ்ச்சி. எல்லோரும் இம்மரத்தடியில் இருங்கள்; பசியாறிச் செல்லலாம்.

[புலவர் குடும்பத்தினர் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். நள்ளி எங்கோ சென்ருன்; மான் இறைச்சியைக் கொண்டு வந்தான்; தீக்கடைகோலால் தீயை உண்டாக்கினுன்; மான் இறைச்சியைத் தீயில் பதப்படுத்தினுன்; பதப்படுத்தப்பட்ட இறைச்சியைப் பலா இலையின்மீது வைத்துப் புலவர் குடும்பத்தாரை உண்ணும்படி வேண்டினுன். அவன் தன்னிடமிருந்த பழங்களையும் உண்ணக் கொடுத்தான். புலவர் குடும்பத்தினர் இறைச்சியையும் பழங்களையும் உண்டனர்; அருகிலிருந்த அருவிநீரைப் பருகினர். அவர்தம் முகங்கள் அன்று அலர்ந்த தாமரையெனப் பொலிவுற்றன.]

வன்பரணர் : ஐயா, நீங்கள் எமது பசியைப் போக்கக் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதை, உங்களைச் சேய்மையில் கண்டவுடனே, இவர்களிடம் கூறினேன். என் கூற்று உண்மையாயிற்று. உங்களுக்கு எங்கள் நன்றியை எவ்வாறு தெரிவிப்போம்!

நள்ளி : புலவரே, நாம் இப்போது காட்டில் இருக்கிறோம். ஆதலால் உங்களுக்குச் சிறந்த உணவு கொடுக்க என்றால் இயலாது. யான் தமிழ்ப் புலவர்களை மகிழ்விப்பதில் மகிழ்ச்சி காண்பவன். உங்களுக்குப் பெருஞ்செல்வத்தையும் விலையுயர்ந்த அணிகலன்களையும் கொடுக்க விரும்புகிறேன். ஆயின் அவை என்னிடம் இல்லை. யான் காட்டு நாட்டில் வாழ்பவன்; ஆதலால் என் முத்து வடங்களையும் கடகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

(நள்ளி கொடுத்தவற்றைப் புலவர் பெற்றுக்கொள்ளுதல்)

வன்பரணர் : அண்ணலே, உங்களது நாடு எது?

(நள்ளி பதில் கூறுதிருத்தல்)

வன்பரணர்: உங்கள் பெயர் யாது?

(நள்ளி பதில் உரையாதிருத்தல்)

வன்பரணர்: நீங்கள் என் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லையே?

[நள்ளி முகமலர்ச்சியோடு புலவரை நோக்கிக் கை குவித்து வணங்கிவிட்டுக் காட்டில் மறைந்துவிடுதல்]

மனைவி: இந்த மனிதர் மிகவும் நல்லவர். ஆயினும் தாம் இன்னவர்-இன்ன நாட்டினர் என்றும் சொல்லாமல் சென்றுவிட்டனரே!

வன்பரணர்: பண்புகளால் உயர்ந்தவர் தம் பெயரையும் நாட்டையும் பறை சாற்ருர்.

முதல் மகன்: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இவர் ஒரு பெரிய மனிதர் என்றே கூறவேண்டும்போல் இருக்கிறதே!

வன்பரணர்: இவர் உண்மையில் பெரியவரே.

மூன்ரும் காட்சி

(வழியில் ஒரு வேடன் வருதல்)

வன்பரணர்: (வேடனைப் பார்த்து) அப்பா, வில்லையும் அம்பையும் உடைய ஒரு தனி மனிதனைச் சற்றுமுன் வழியில் கண்டாயா?

வேடன்: ஆம். கண்டேன்.

வன்பரணர்: அப்பெருமகன் யாவன்?

வேடன்: ஐயா, அவர்தாம் இக்காட்டு நாட்டுத் தலைவர். இந்தத் தோட்டி மலையும் அவருடையதே.

வன்பரணர்: (வியப்புடன்) அப்படியா! அவர் பெயர் யாது?

வேடன்: அவர் பெயர் **கண்டீரக்கோப் பெரு நள்ளி** என்பது. அப்பெயர் **நள்ளி** என்று சுருக்கமாகவும் வழங்கப்பெறும்.

மனைவி: அப்படியா! அவர் மிகவும் நல்லவர்.

வேடன்: அம்மா, அவர் தாய்மொழிப் பற்று மிகுந்தவர்; தமிழ்ப் புலவர்களைத் தம் உயிர் போல் பாதுகாப்பவர்; அவர்களுக்கு எதையும் வழங்குபவர்; அறநெறி தவறுதவர்; ஆண்மையில் சிறந்தவர்; குடிமக்களாகிய நாங்கள் அவரை எங்கள் கண்கண்ட கடவுளாகக் கருதி வழிபடுகிறோம்.

வன்பரணர்: (வேடனைப் பார்த்து) அப்பா, கடவுள் நம்போன்ற ஏழை மக்களைக் காக்கவே இத்தகைய நல்லவர்களைப் படைத்துள்ளார். நள்ளி என்னும் இப்பெருமகனர் புகழ் தமிழ் மொழி உள்ளளவும் வாழும். இப்பெரியவர் எனக்குச் செய்த நன்மையைப் பாராட்டிப் பாடுவேன். என் பாடல்கள் இவருடைய பெயரையும் புகழையும் நிலைநிறுத்தும்.

வேடன்: ஐயா, அப்படியே செய்யுங்கள். எங்கள் தலைவர் பெயர் நிலைத்திருப்பதுபோலவே உங்கள் பாடலால் உங்கள் பெயரும் நிலைத்திருக்கும் அன்றோ?

[வேடன் வணங்கிச் செல்லல். புலவரும் அவர் குடும்பத்தினரும் வழி நடத்தல்.]

காட்சி முற்றிற்று.

அருஞ்சொற்பொருள்

குடில் - குடிசை. கவர்ந்து - அபகரித்து. வள்ளல் - கொடையாளி. அணிகலன் - நகை. அண்ணல் - பெருமைக்குணமுடையவன். பண்பு - குணம். பறைசாற்றுர் -

பலரறிய வெளிப்படுத்தார். சற்று முன் - சிறிது நேரத்திற்கு முன். வன்பரணர் நள்ளியைப்பற்றிப் பாடிய பாடல்கள் புறநானூறு என்னும் சங்க நூலில் இருக்கின்றன.

கேள்விகள்

1. நள்ளி எந்த மலைநாட்டுத் தலைவன்?
2. நள்ளி புலவர் குடும்பத்தினரை எவ்வாறு உண்பித்தான்?
3. நள்ளி புலவர்க்கு ஈந்தவை யாவை?
4. புலவர் நள்ளியின் பெயரையும் புகழையும் எங்ஙனம் நிலைநிறுத்தினர்?

பயிற்சி

1. சேர்த்துக் கூறுக:—மலை + சரிவு, எடுத்து + செல்வர், வயிறு + ஐ, எ + நாடு, மலைக்கு + தலைவன், இறைச்சியை + கொண்டு, உண்ண + கொடுத்தான்.

2. பிரித்துக் காட்டுக:—நாட்டுத்தலைவர், தமிழ்ப்புலவர், முகமலர்ச்சி, மலையடிவாரம், நெருக்கமாக, இத்தகைய, உண்மையாயிற்று.

3. வன்பரணர் இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

4. நள்ளி இப்பாடச் செய்தியைச் சொல்லுவதுபோலச் சொல்லுக.

5. வன்பரணர், நள்ளி—இவர்களைப்பற்றிய உன் கருத்தைத் தனித்தனியே பதினைந்து வரிகளுள் எழுதுக.

செய்யுள்

I. வாழ்த்து

1. தேவாரம்

தேவாரம் - தே + ஆரம் = தேவனுக்குரிய பாமாலை. 'கோடி தீர்த்தம்' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் திருநாவுக்கரசர். இவர் காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டு.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்கும்.

2. திருவாசகம்

மணிவாசகர் சைவ சமய குரவருள் ஒருவர்; பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். இவர் காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டு. இவர் பாடிய திருவாசகம் உள்ளத்தை உருக்குவதாகும்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார் பன்னிருவர் திருமால் பற்றிப் பாடிய நாலாயிரம் பாக்கள் கொண்ட நூல் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனப் பெயர் பெற்றது. இங்குள்ள பாடல் பொய்கையாழ்வார் பாடியது. இவர் காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டு என்னலாம்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகரும்
—நான்கிடத்தும்
நின்றா னிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமா மிடர்.

4. திருமதீனக் கலம்பகம்

மதீனம் — அரேபியாவில் உள்ள மதீன நகரம். முகமது நபி நாயகம் மக்கா, மதீன முதலிய நகரங்களில் சமய அறிவுரைகள் ஆற்றினர். ஆதலால் இந்நகரங்கள் முஸ்லிம்களால் சிறந்த நகரங்களாகக் கருதப்படுகின்றன. கலம்பகம் - பலவகைப் பாடல்கள் நூறு கொண்ட சிறு நூல். இதனைப் பாடியவர் திரிசிரபுரம் ஆ. க. பிச்சை இபுராகிம் புலவர் என்பவர். இவர் காலம் கி. பி. 20ஆம் நூற்றுண்டு.

மாக்கட் கறிவளித்த மாக்கருணைத் தாய்போல்வாய்
ஆக்கத் துடைமதினத் தண்ணல்பால்—ஏக்கற்று
வேண்டும் பயன்கிடைப்பான் வேண்டற் கருள்
யாண்டுந் தயையோ டருள். [வாக்கை

5. தேம்பாவணி

தேம்பா + அணி - வாடாத பாமாலை. இது இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையாரான சூசையப்பரது வரலாற்றைக் கூறும் பெரிய நூல். இதனைப் பாடியவர் வீரமாமுனிவர் என்னும் மேனுட்டுப் பாதிரியார். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றுண்டின் இறுதியும் 18ஆம் நூற்றுண்டின் முற்பாதியும் ஆகும். இங்குள்ள பாடல், சூசையப்பர் இறைவனை நோக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது.

தந்தை நோக வுணர்வின்றித்
    தவறு நின்ற பிள்ளைகள்தம்
சிந்தை நோகப் பணிந்தடுத்தாற்
    சினந்த தாதை யகற்றுவனே
நிந்தை யாகப் பிழைத்தெனினும்
    நினக்கோர் பிள்ளை யாயவெமக்
கெந்தை யாக நீயென்றும்
    இரங்கா முனிவ தாங்கொல்லோ.

அருஞ்சொற்பொருள்

1. தீர்த்தம் - புண்ணிய ஆறுகளும், குளங்களும், கடல்களும். அரன் – சிவபெருமான். அட்டி - அடைத்து. மூர்க்கன் - அறிவிலி.

2. வளி - காற்று. ஊன் - தசை, தசையாலாகிய உடம்பு. கோன் - தலைவன். வாழ்த்துவன் - தன்மை ஒருமை வினைமுற்று.

3. வேங்கடம் - திருப்பதி. விண்ணகர் - வைகுந்தம். வெஃகா - காஞ்சியில் உள்ள திருவெஃகா என்னும் பெருமாள் கோவில். அஃகாத - குறையாத. கிடங்கில் - அகழி. திருக்கோவல் பொன்னகர் - திருக்கோவலூரில் உள்ள திருமால் கோவில். திருமால் திருப்பதி மலைமீது நின்ருன்; வைகுந்தத்தில் இருந்தான்; திருவெஃகாவில் கிடந்தான்; கோவல் பொன்னகரில் நடந்தான். இவை திருமாலுக்குரிய நான்கு திருக்கோலங்கள். கிடந்தான் - படுத்தான். இடர் - துன்பம்.

4. மாக்கள் - ஐயறிவின; ஆறும் அறிவைப் பயன்படுத்தாத மக்கள் எனினும் பொருந்தும். மா - சிறந்த. கருணை - இரக்கம். போல்வாய் - போன்றவனே. ஆக்கம் - செல்வம், வளர்ச்சி. அண்ணல் - முகமது நபி. ஏக்கற்று - ஆசையால் தாழ்ந்து. கிடைப்பான் - கிடைப்பதற்கு.

5. உணர்வு இன்றி - உணர்ச்சி இல்லாமல். தவறு நின்ற - பிழை செய்த. அடுத்தால் - தந்தை அடியில் வீழ்ந்தால். அகற்றுவனே - தள்ளுவானே. நிந்தையாக - உன்னை நிந்தித்து. பிழைத்து - குற்றம் செய்து. முனிவது - கோபப்படுவது.

கேள்விகள்

1. திருநாவுக்கரசர் தமது பாடலில் மூர்க்கனைப்பற்றி ஏன் குறிப்பிடுகிருர்?
2. மணிவாசகர், கடவுள் எவ்வெவ்வாறு அமைந்திருப்பதாகக் கூறுகிருர்?

3. பொய்கையாழ்வார் நமது இடர் கெடுவதற்குக் கூறும் அறிவுரை யாது ?

4. பிச்சை இபுராகிம் புலவர் இறைவனை வேண்டுவது யாது ?

5. சூசையப்பர் இறைவனை நோக்கி யாது கூறுகிறார்?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக :—குளித்தவை, அன்பில்லை, குடத்தட்டி, நான்கிடத்தும், அறிவளித்த, உணர்வின்றி, நினக்கோர்.

2. சேர்த்துக் கூறுக:—விண் + நகர், பூ + கிடங்கில், மதீனம் + கலம்பகம், மா + கருணை, மதீனத்து + அண்ணல், வேண்டற்கு + அருள், வைத்து + இட்ட, மூர்க்கனோடு + ஒக்கும், பொன் + நகர்.

3. திருவேங்கடம் அல்லது திருக்கோவலூர் பற்றி (நூல்களைப் படித்தோ, ஆசிரியரைக் கேட்டோ, விவரம் அறிந்து) ஒரு கட்டுரை வரைக.

4. மதீனத்தண்ணல் வரலாற்றை ஒரு கட்டுரையாக எழுதுக.

II. அறவுரை

1. திருக்குறள்

திருக்குறள் - அழகிய குறட்பாக்களால் ஆன நூல். குறள் - குட்டை. திருக்குறள் 1330 பாக்களையுடையது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் காலம் கி. மு. முதல் நூற்றுண்டு என்னலாம். மனித வாழ்க்கைக்குத் தேவைப் படும் அறிவுரைகள் திருக்குறளில் அடங்கியுள்ளன. ஆதலால் இந்நூல் பல நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது; உலகப் பொது மறையாக விளங்குகின்றது.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. இங்குள்ள பாடல்கள் முதல் இரண்டு பால்களைச் சேர்ந்தவை.

(அறத்துப்பால்)

கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின். (2)

நீத்தார் பெருமை

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (3)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (4)

அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ வுயிர்க்கு. (5)

மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (6)

இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (7)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். (8)

வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (9)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (10)

புதல்வரைப் பெறுதல்

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். (11)

மகன்றந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். (12)

அன்புடைமை

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (13)

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. (14)

விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (15)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (16)

இனியவை கூறல்

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
கணியல்ல மற்றுப் பிற. (17)

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (18)

செய்ந்நன்றியறிதல்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (19)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (20)

(பொருட்பால்)

இறைமாட்சி

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். . (21)

கல்வி

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (22)

கல்லாமை

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். (23)

கேள்வி

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். (24)

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாம் துணை. (25)

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். (26)

அறிவுடைமை

அறிவற்றங் காங்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா அரண். (27)

குற்றங்கடிதல்

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. (28)

சிற்றினஞ் சேராமை

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (29)

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும். (30)

தெரிந்து செயல்வகை

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். (31)

வலியறிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (32)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (33)

காலமறிதல்

ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். (34)

இடனறிதல்

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடு
நாவாயும் ஓடா நிலத்து. (35)

அருஞ்சொற்பொருள்

1. அகரம் - அ என்ற எழுத்து. ஆதிபகவன் - கடவுள்

2. என் - யாது. வாலறிவன் - மெய்யுணர்வினை யுடையவன், கடவுள்.

3. செயற்கரிய - பிறரால் செய்வதற்கரிய செயல்கள். பெரியர் × சிறியர்.

4. நிறைமொழி - அறிவு நிறைந்த மொழி. நிறைமொழி மாந்தர் - உண்மைத் துறவிகள். மறைமொழி - மந்திரங்கள்.

5. அறன் வலியுறுத்தல் - அறத்தின் சிறப்பை வற்புறுத்தல். சிறப்பு - வீட்டின்பம். ஊங்கு - மிக்க. ஆக்கம் - மேலும் மேலும் உயர்தல்.

6. அனைத்து - அவ்வளவே. பிற - சொல்லும் வேடமும். ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மையன.

7. அன்பு - மனைவிமேல் வைக்கும் அன்பு. அறன் - பிறர்க்குப் பகுத்து உண்ணுதலாகிய அறம். அது - அவ்வுடைமை. அன்பு - பண்பாகும். அறன் - பயனாகும்.

8. வையம் - நிலவுலகம். வாழ்வாங்கு - வாழவேண்டும் முறைப்படி. உறையும் - வாழும். தெய்வம் - தேவர். வைக்கப்படும் - ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்.

9. வாழ்க்கைத்துணை - ஒருவனது வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவி. நலம் - மனைவியினது நன்மை. மனைத் தக்க - மனை அறத்திற்குத் தகுந்த. மாண்பு - நற்குண நற்செயல்கள். கொண்டான் - மனைவியாகக் கொண்டவன். வளத்தக்காள் - வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவள்.

10. மங்கலம் - நன்மை. மனைமாட்சி - மனைவியின் நற்குண நற்செயல்கள். நன்கலம் - நல்ல நகைகள். பேறு - பெறுதல்.

11. நன்று - நன்மை. அவை - கற்றவர் அவை. முந்தி - அவரினும் கல்வியில் மிகுந்து. இருப்ப - இருக்கும்படி. செயல் - செய்வது.

12. என்னோற்றான் - இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தான்.

13. எல்லாம் - எல்லாப் பொருள்களும். என்பும் - பொருள்களாலே அன்றித் தம் உடம்பாலும்.

14. அஃது - அன்பு.

15. இல் இருந்து - மனைவியோடு இல்லத்தில் இருந்து. ஓம்பி - பொருள்களைப் பாதுகாத்து. வேளாண்மை - உபகாரம், உதவி.

16. விருந்து-விருந்தினர். புறத்ததா-வெளியில் இருக்க. சாவா மருந்து - அமிர்தம். வேண்டற்பாற்று - விரும்பத் தக்கது.

17. அணி - அழகு. பணிவு - தாழ்ச்சி. இன்சொலன் - எல்லோரிடத்தும் இனிய சொற்களைப் பேசுபவன். பிற-உடம்பில் அணியப்படும் நகைகள்.

18. இனிய - நன்மை பயக்கும் இனிய சொற்கள். இன்னாத - துன்பம் தரும் சொற்கள். கவர்ந்தற்று - நுகர்ந்த தனோடு ஒப்பாகும். இனிய × இன்னாத. கனி × காய்.

19. நன்றி - உதவி. நன்றல்லது - ஒருவன் செய்த தீமை. அன்றே - செய்த பொழுதே.

20. எந்நன்றி - எத்தகைய பெரிய அறங்கள். உய்வு - பாவத்திலிருந்து நீங்கும் வழி. செய்ந்நன்றி - ஒருவன் செய்த உதவி.

21. முறை - அற நூலும் நீதி நூலும் சொல்லும் நெறி. இறை - கடவுள்.

22. இன்புறுவது - இன்புறுதற்கு ஏதுவாகிய கல்வி. காமுறுவர் - விரும்புவர்.

23. நனி - மிகவும் ; உரிச்சொல்.

24. செவிக்கு உணவு - கேள்வி.

25. ஒற்கம் - தளர்ச்சி. ஊற்று - பற்றுக்கோடு.

26. செவியில் - செவியால் நுகரப்படும். அவியினும் - சாவினும்.

27. அற்றம் - முடிவு. செறுவார் - பகைவர். ஆகா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

28. இவறன்மை - கருமித்தனத்தின் தன்மை.

29. தூவா - பற்றுக்கோடாக.

30. மனநலம் - மனத்தது நன்மை. இனநலம் - இனத்தது நன்மை.

31. செய்தக்க அல்ல - செய்யத் தகாதவை.

32. பீலி - மயிற்பீலி. சாகாடு - சகடம். இறும் - முறியும்.

33. அளவு - தனக்கு உள்ள பொருளின் எல்லை.

34. காலம் கருதி - ஏற்ற காலத்தை ஆராய்ந்து. இடத்தால் - இடத்தோடு பொருந்த.

35. வல் - வலிய. நாவாய் - கப்பல்.

கேள்விகள்

1. திருவள்ளுவர் 'கடவுள் வாழ்த்து' என்னும் தலைப்பில் கூறுவது யாது?
2. வள்ளுவர் நீத்தார் பெருமையை எப்படி விளக்குகிறார்?
3. அறம் என்பது யாது? அதன் பயன் என்ன?
4. இல்வாழ்க்கை எங்ஙனம் அமைதல் வேண்டும்?
5. எவள் சிறந்த இல்வாழ்க்கைத் துணைவி யாவாள்?
6. தந்தை, மகன் - இவர்தம் கடமை என்ன?
7. வள்ளுவர் அன்புடைமையை எவ்வாறு வற்புறுத்துகிறார்?
8. இனியவை கூறலின் சிறப்பு யாது?
9. செய்ந்நன்றியறிதல் எங்ஙனம் வற்புறுத்தப்படுகிறது?
10. கேள்வி அறிவு தேவை என்பது எப்படி வற்புறுத்தப்படுகிறது?
11. 'சிற்றினம் சேராமை' என்னும் தலைப்பில் வள்ளுவர் கூறுவது யாது?
12. 'வலியறிதல்' என்னும் தலைப்பில் கூறப்பெறும் செய்தி யாது?

பயிற்சி

1. கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், வலியறிதல் என்னும் தலைப்புக்களில் வந்துள்ள பாக்களின் கருத்தைக் கூறுக.

2. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல், சிற்றினம் சேராமை என்னும் தலைப்புக்களில் வள்ளுவர் கூறுவனவற்றைத் தனித்தனியே எழுதுக.

3. அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், கேள்வி என்னும் தலைப்புக்களில் வந்துள்ள பாடல்களின் கருத்தினைப் புலப்படுத்துக.

2. பழமொழி நானூறு

பழமொழி நானூறு :—இது நானூறு பாக்களைக் கொண்ட நூல். ஒவ்வொரு பாவிலும் ஒரு பழமொழி இடம் பெற்றுள்ளது. அப்பழமொழியை நிலைநாட்ட அச்செய்யுளில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார் என்பவர். காலம் கி. பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்னலாம்.

கல்வி

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார். (1)

ஒழுக்கம்

கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கோர்
வடுவல்ல செய்தலே வேண்டும்—நெடுவரை
முற்றுநீர் ஆழி வரையகத் தீண்டிய
கற்றேயும் தேயாது சொல். (2)

இன்னா செய்யாமை

தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் [நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்றார் எனவலியார் ஆட்டியக்கால்
ஆற்று தவரழுத கண்ணீர் அவையவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும். (3)

சான்றோர் இயல்பு

கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாணமிக நல்லரால்

பொற்ப உரைப்பான் புகவேண்டா கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல். (4)

தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு. (5)

அருஞ்சொற்பொருள்

1. ஆற்றும் - கல்வியைக் கற்பதற்குரிய. கற்கலான் - கல்லாதவன். மூப்பு - முதுமை. போற்றும் - கற்பான். புணருமோ - சொல்லுதல் கூடுமோ. ஆற்ற - மிகவும். சுரம் - வழி. போக்கி - கடக்கவிட்டு. உல்கு - சுங்கம், தீர்வைப் பொருள். மரம் - ஓடம். போக்கி - செலுத்தி நிறுத்திய பின்.

2. கெடுவல் - யான் கெடுவேன்; தன்மை ஒருமை வினைமுற்று. கண் - இடம். வடு - குற்றம். வரை - மலை. முற்றும் - சூழப்பட்ட. ஆழி - கடல். வரையகம் - வரையறுக்கப்பட்ட நிலத்தில். ஈண்டிய கல் - நெருங்கிய கல்.

3. தோற்றம் - குடியிருப்பு. பொல்லார் - தீய செயல்களைச் செய்பவர். நல்கூர்ந்தார் - வறுமையுடையார். மாற்றம் - சொல். செற்ருர் - பகைவரை ஒத்தவர். என - என்று நினைத்து. வலியார் - உயர்ந்த குடிப்பிறப்பு, துணை, செல்வம் முதலிய வலிமையுடையவர்.

4. ஒன்று - கல்வி. மாண - நற்குணங்களில் மாட்சிமைப்பட. பொற்ப - அழகுபட. உரைப்பான் - எடுத்துக் கூற. கொல் - கொல்லர். சேரி - வாழ்விடம். துன் ஊசி - தையல் ஊசி. துன் - தை.

5. தெற்ற - தெளிவாக அறியப்பட்ட. கண்ணோடுவர் - இரக்கம் காட்டுவர். நவை - குற்றம், துயரம்.

கேள்விகள்

1. இளமையில் கல்வி கற்பதே முறை என்பதை விளக்கும் பழமொழிகள் எவை?

2. "கல் தேயும் தேயாது சொல்" என்னும் பழமொழி எதனை விளக்க வந்தது?

3. "தோற்றத்தால்" என்று தொடங்கும் செய்யுளின் கருத்து யாது? அதில் அமைந்துள்ள பழமொழி யாது?

4. "கொற்சேரித் துன்னூசி விற்பவர்"—இப் பழமொழியின் பொருள் யாது? இஃது ஏன் கூறப் பெற்றது?

5. மேன்மக்களின் இயல்பு யாது?

பயிற்சி

1. பொருள் கூறுக:—உல்கு, அறம், வடு, ஆழி, ஈண்டிய, செற்றார், கூற்றம், குடிப்பிறந்தார், கொற்சேரி, துன்னூசி, சான்றோர்.

2. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—இளமைக்கண், நெடுவரை, நல்கூர்ந்தார், குடிப்பிறந்தார், இடர்ப்பாடு, மேன்மக்கள், சான்றோர்.

3. இவ்வைந்து பாடல்களிலுமுள்ள பழமொழிகளைக் கூறுக.

4. இவ்வைந்து செய்யுட்களின் திரண்ட பொருளினை எழுதிக் காட்டுக.

3. *நாலடியார்*

நாலடியார் - நான்கு அடிகளைக் கொண்ட நானூறு பாக்களை உடைய நூல். இது சிறந்த நீதி நூலாதலால் மரியாதைக்குரிய 'ஆர்' விகுதி கொடுக்கப்பட்டது. இந்நூல் சமண முனிவரால் பாடப்பட்டது. இதன் காலம் கி. பி. 6 அல்லது 7ஆம் நூற்றாண்டு என்னலாம்.

பொறையுடைமை

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல். (1)

தீவினையச்சம்

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. (2)

கல்வியின் சிறப்பு

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (3)

குடிப்பிறப்பு

இனநன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை யெல்லாம்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள. (4)

நல்லினம் சேர்தல்

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். (5)

அருஞ்சொற்பொருள்

1. நட்டக்கால் - நேசித்தால். நள் - பகுதி. தேற்றா ஒழுக்கம் - தெளியப்படாத தவறான ஒழுக்கம். ஆற்றும் துணை - பொறுக்கும் அளவு. தூரவிடல் - அவனது நட்பை நெடுந்தொலைவில் விட்டுவிடுக.

2. கேண்மை - நட்பு. நந்தும் - வளரும். பெரியவர் - கல்வி கேள்விகளில் சிறந்தவர். வைகலும் - ஒவ்வொரு நாளும். வானூர் மதியம்-வானத்தில் திகழும் முழுத்திங்கள். தொடர்பு - நட்பு.

3. இம்மை - இம்மைப்பயன். இம்மை - இப்பிறப்பு. இன்று - இல்லை; இஃது ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று. தம்மை விளக்கும் - படித்தவரை அறிவாலும் புகழாலும் விளங்கச் செய்யும். காணேம் - தன்மைப் பன்மை வினை முற்று. மம்மர் - மயக்கம், அறியாமை.

4. இனநன்மை - நல்லவர் கூட்டுறவு. மன நன்மை- மனத்தூய்மை. கனமணி - சிறப்புடைய மாணிக்கம் முதலிய மணிகள். உவரி - கடல். தண் - குளிர்ச்சியான. சேர்ப்ப - துறைவனே. இல் - நற்குடி. கண்ணே-இடமே, ஏழாம் வேற்றுமை உருபு. உள - அமைந்திருக்கின்றன.

5. அறிமின் - அறிந்து ஒழுகுங்கள், முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று. கூற்றம் - யமன். போற்றுமின் - காத்துக்கொள்ளுங்கள். எஞ்ஞான்றும் - எக்காலத்திலும்.

கேள்விகள்

1. நண்பரிடம் தேற்ரு ஒழுக்கம் காணப்படின் நாம் என்ன செய்ய வேண்டும்?
2. பெரியவர் கேண்மைக்கும் சிறியார் தொடர்புக்கும் கூறப்பட்டுள்ள உவமைகள் யாவை?
3. கல்வியின் சிறப்பு எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?
4. நற்குடியில் பிறந்தவரிடம் இருப்பவை யாவை?
5. 'நல்லினம் சேர்தல்' என்னும் தலைப்பின்கீழ் வந்துள்ள செய்யுளில் கூறப்பட்டுள்ள அறிவுரை யாது?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக:—கலந்திருவர், பொருளுயின், குறைவின்ருல், கேடின்று, இன்சொல், முழங்குவரி, இற்பிறந் தார், கடுஞ்சொல்.

2. வரிசை வரிசை - அடுக்குத் தொடர். இதுபோன்ற அடுக்குத் தொடர்கள் ஆறினைக் கூறுக.

3. செய்யுட்களிலுள்ள வினைமுற்றுக்களைக் கூறுக.

4. இவ்வைந்து செய்யுட்களின் திரண்ட பொருள்களை எழுதுக.

4. சிறுபஞ்சமூலம்

சிறுமை+பஞ்சம்=சிறுபஞ்சம். பஞ்சம்+மூலம்=பஞ்ச மூலம். மருந்தாகப் பயன்படும் ஐந்து சிறிய வேர்கள் என்பது பொருள். சிறுவழுதுணைவேர், நெருஞ்சிவேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரிவேர் என்னும் ஐந்தும் சிறுபஞ்சமூலம் எனப்படுவன. இவை ஐந்தும் உடல் நோயைப் போக்கப் பயன்படுதல் போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பட்டுள்ள ஐந்தைந்து கருத் துக்களும் மனநோயைப் போக்கி அறிவு நலம் தருவன. இக்காரணம் பற்றியே இந்நூல் சிறுபஞ்சமூலம் என்னும் பெயரைப் பெற்றது. இந்நூலில் 97 செய்யுட்கள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர் காரியாசான் என்பவர். அவர் சைன சமயத்தினர்; கி. பி. 750க்கு முற்பட்டவர் என அறிஞர் கருதுகின்றனர்.

அருளுடையவனும் பொருளுடையவனும்

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்
[—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து. (1)

கண் முதலியவற்றுக்கு அழகைத் தருவன

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச்
[செல்லாமை
எண்வனப் பித்துணையாம் என்றுரைத்தல்—
[பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னுடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு. (2)

அறிவுடைச் செயல்கள்

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றிமா மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. (3)

உள்ளநோய் உண்டாக்குவோர்

அரம்போற் கிளையடங்காப் பெண்ணவியாத் [தொண்டு
மரம்போல் மகன்மாருய் நின்று—கரம்போலக்
கள்ளநோய் காணும் அயலைந்தும் ஆகுமேல்
உள்ளநோய் வேண்டா உயிர்க்கு. (4)

கற்றவர் களைய வேண்டுவன

வழிப்படர் வாய்ப்ப வருந்தாமை வாயல்
குழிப்படல் தீச்சொற்க ளோடு—மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துய்யக் கற்றவர்
ஆய்ந்து விடுதல் அறம். (5)

அருஞ்சொற்பொருள்

1. போகம் - இன்பம். அறன் - அறவினை. புறமொழி - புறங்கூறுதல். உய்த்து - செலுத்தி. செய்வான் - எதிர் மறை வினைமுற்று.

2. கண்வனப்பு - கண்ணுக்கு அழகு. கண்ணோட்டம்- கண்ணோடுதல் ; கருணைபுரிதல். செல்லாமை-இரத்தற்காகச் செல்லாதிருத்தல். வாட்டான் - கொடுங்கோன்மையால் வருத்தமாட்டான். என்றல் - உரைத்தல், தொழிற் பெயர். செல்லாமை - எதிர்மறைத் தொழிற் பெயர். கேட்டார் - வினையாலணையும் பெயர்.

3. நல்ல - பிறர் செய்த நன்மைகள். தீய-பிறர் செய்த தீமைகள். நல்ல, தீய - பலவின்பாற் பெயர்கள். ஒல்லை - விரைவு. உயிர்க்கு - துன்பமுற்ற பிற உயிர்கட்கு. ஊற்றங் கோல் - ஊன்றுகோல். மாயம் - வஞ்சனை. மானத்தான் ஆயின் - மானங்காத்தற் பொருட்டாயின். அழிதல் - உயிர் விடுதல், தொழிற் பெயர். அறிவு - தொழிற் பெயர்.

4. அரம்போற்கிளை - அரம் போலத் தேய்த்துத் தன்னை அழிக்கும் சுற்றம். அவியாத் தொண்டு - அடங்காத வேலையாள். மரம் போல் மகன் - அறிவில்லாத மகன். கள்ள நோய்காணும் அயல் - வஞ்சனையோடு கூடிய உட்

பகைவராகிய அயலார். உள்ள நோய் வேண்டா - மன நோய் வேறு வேண்டா. அடங்கா, அவியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். (வேண்டும்) வேண்டா - எதிர்மறை வினைமுற்று.

5. வழிப்படர் – பிறர் வழியே செல்லுதல். வாய்ப்ப வருந்தாமை - முடியுங் காரியங்களை முயன்று செய்யாமல் இருத்தல். வாய் அல் குழிப் படல் - மெய்ம்மையல்லாத நெறியில் செல்லுதல். மொழிப்பட்ட - பெரியோரால் மொழியப்பட்ட நன்மொழிகள். வருந்தாமை - எதிர்மறைத் தொழிற் பெயர். குழிப்படல், விடுதல் - தொழிற் பெயர். கற்றவர் - வினையாலணையும் பெயர்.

கேள்விகள்

1. அருளுடையான் எவற்றைச் செய்யமாட்டான்?
2. கண், கால், பண், நாடு—இவற்றிற்கு வனப்புத் தருவன எவை?
3. அறிவுடைய செயல்கள் என்று எவற்றைக் கூறுதல் வேண்டும்?
4. ஒருவனுக்கு எவை இருக்குமாயின் மனநோய் வேறு வேண்டா?
5. கற்றவர் எவற்றை ஆராய்ந்து நீக்கிவிடுதல் அறச் செயலாகும்?

பயிற்சி

1. சேர்த்துக் கூறுக:—செவிக்கு+உய்த்து, பொருள் +உடையான், என்று+உரைத்தல், தன்+நாடு, உயிர்+ கூற்றம்.

2. பிரித்து எழுதுக:—பெண்ணவியா, கிளையடங்கா, களைந்துய்ய, கண்ணோட்டம், நன்றென்றல், புறமொழி.

3. இவ்வைந்து பாக்களின் திரண்ட பொருளைத் தொகுத்து எழுதுக.

5. ஏலாதி

ஏலம்+ஆதி=ஏலாதி. ஏலம் முதலான ஆறு பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட மருந்து உடலுக்கு நன்மை தருவது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் அவ்வாறு கருத்துக்களும் உள்ளத்திற்கு நன்மை தருவன. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறுமே ஏலாதி எனப்படுவன. இந்நூலின் செய்யுட்கள் 80. ஆசிரியர்-கணிமேதையார்; சைன சமயத்தினர்; காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்பது அறிஞர் கருத்து.

நூல்துணைக்கு அப்பாற்பட்டவன்

பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியார் இனஞ்சேரான்—வையான்
கயலியலுண் கண்ணுய் கருதுங்கால் என்றும்
அயல அயலவா நூல். (1)

விண்ணேரால் விரும்பப்படுபவன்

சிதையுரையான் செற்றம் உரையான்சீ றில்லான்
இயல்புரையான்ஈனம்உரையான்-நசையவர்க்குக்
கூடுவ தீவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து. (2)

தூதர்க்கு வேண்டுவன

மாண்டமைந்தாராய்ந்தமதிவனப்பேவன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—
[பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு
ஞால மறிந்த புகழ். (3)

கல்வி அழகே அழகு

இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு. (4)

விண்ணோர்க்கு வேந்தன்

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான்— [எய்யுரையான்
கூந்தன்மயிலன்னாய்குழீஇயவான்விண்ணோர்க்கு
வேந்தனும் இவ்வுலகம் விட்டு. (5)

அருஞ்சொற்பொருள்

1. கயல் இயல்-கயல் மீனின் தன்மை. அயல அயல - வேண்டுவன அல்ல; அடுக்குத் தொடர். வையான் - பிறரை நிந்தித்துப் பேசாதவன். கயல் இயல் உண்கண்ணாய் - மகடூஉ முன்னிலை.

2. சிதை - கீழ்மை. செற்றம் - பகைமை. சீறு-சினம். இயல்பு உரையான் - தன்னைப் புகழாதவன். ஈனம் - பிறருடைய இழிவு. நசையவர் - தன்னை விரும்பி வந்தவர். நாடுவர் - விரும்புவர். சீறு (சீறுதல்) - முதனிலைத் தொழிற் பெயர். கொவ்வைபோல் செவ்வாயாய் - மகடூஉ முன்னிலை.

3. மாண்டு - ஒழுக்கத்தில் மாட்சிமைப்பட்டு. மதி - அறிவு. வனப்பு - தோற்றப் பொலிவு. வன்கண்மை - பகைவருக்கு அஞ்சாமை. ஆண்டு அமைந்த - பயின்று நிரம்பிய. பூண்டு அமைந்த - தகுதி பொருந்திய. ஞாலம் - இடப் பெயர்; இங்கு மக்களுக்கு ஆகிவந்தது, இடவாகு பெயர்.

4. ஈடின் வனப்பு - செல்வத்தின் அழகு. புடைசால் - பக்கங்கள் பருத்த. எண் - கணிதம். எழுத்து - இலக்கணம்.

5. மெய் உரையான் - (பிறர்க்கு வந்த துன்பத்தை நீக்குவதற்காக) உண்மை பேசான். உள்ளன - தன்னிடம் உள்ள பொருள்கள். விட்டு - வெளிப்படுத்தி. எய் உரையான் - தன் வறுமையை நண்பரிடத்தும் சொல்லான். வான் குழீஇய விண்ணோர் - வானுலகத்திற் கூடியுள்ள தேவர். குழீஇய - குழுமிய, (சொல்லிசை) அளபெடை.

கேள்விகள்

1. எத்தன்மைகளையுடையவனுக்கு நூல்கள் வேண்டப்படுவனவல்ல?

2. தேவர்களும் யாரை விரும்பி வரவேற்பர் ?

3. தூதர்க்கு வேண்டுவன எவை ?

4. எவை எவை வனப்பு அல்ல? எவை வனப்புத் தருவன ஆகும் ?

5. விண்ணோர்க்கும் வேந்தனுக்கும் பெருமையுடைய வன் யாவன் ?

பயிற்சி

1. பொய்ப்பான் - செயல் உண்மையை உணர்த்தும் வினைமுற்று; உடன்பாட்டு வினைமுற்று. பொய்யான் - செயல் இன்மையை உணர்த்தும் வினைமுற்று; எதிர்மறை வினைமுற்று. இவ்விருவகை வினைமுற்றுக்களையும் இவ்வைந்து பாடல்களிலிருந்து எடுத்து எழுதுக.

2. இங்குத் தரப்பெற்றுள்ள ஐந்து செய்யுட்களின் திரண்ட கருத்துக்களை 20 வரிகளில் எழுதுக.

6. நீதிநெறி விளக்கம்

நீதிநெறி விளக்கம் என்னும் சிறு நூல் 102 செய்யுட்களைக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளும் உயர்ந்த நீதியைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் குமர குருபர அடிகள் என்பவர். அவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டு.

கல்வியின் சிறப்பு

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (1)

சொல் வன்மையின் சிறப்பு

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்
துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. (2)

இருந்தும் பயனில்லாதவை

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. (3)

சிறந்த அறிவுரை

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (4)

அரசனுக்குக் கேடு தருபவை

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (5)

அருஞ்சொற்பொருள்

1. பயக்கும் - தரும். புறங்கடை - கடைப்புறம் - வாயிற்புறத்தில். இசை - புகழ். உறுங்கவல் - பொருந்திய கவலை. உற்றுழியும் - வந்த விடத்தும். கைகொடுக்கும் - துணை செய்யும். ஊங்கு - மிகுதி.

2. எத்துணைய - எத்துணை வகைகள் (பலவகைப் பட்ட கல்வி). இடம்-நூல்களில் நுட்பமும் பொருள் ஆழமும் உடைய இடங்கள். உய்த்துணர்வு - உய்த்து + உணர்வு - அறிவு நுட்பத்தால் ஆராய்ந்து அறிதல். அஃது - சொல் வன்மை. நாற்றம் - நறுமணம்.

3. அவை - கற்றவர் சபை. விதிர்ப்பார் - நடுங்கு பவர், வினையாலணையும் பெயர். அஞ்சா - அஞ்சாத - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஆகுலச் சொல் - பொரு ளற்ற ஆரவாரச் சொற்கள். நவை - குற்றம்; செய்யத் தக்கவற்றைச் செய்யாமையாகிய குற்றம். ஈத்து - பிறருக் குக் கொடுத்து. நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர். இன்

னலம் - இல் + நலம் - இல்வாழ்க்கையின் நலம். பூத்தல் - உண்டாதல் × பூவாமை - உண்டாகாமை. பூத்தலில் - 'இல்' ஐந்தாம் வேற்றுமை உருபு.

4. பெருஞ் சுட்டு - பெருமதிப்பு. வேண்டுவான் - விரும்புபவன், வினையாலணையும் பெயர். நோற்பது - விடாமல் செய்யத் தகுவது. சீர் - சிறப்பு. தூற்றி - பலர் அறியச் சொல்லி. சிறுமை - குறைகள். புறங்காத்து - வெளியிடாமல் அடக்கி. தாழ்ச்சி - பணிவைத் தெரிவிக்கும் சொற்கள். பிறர் பிறர் - அடுக்குத் தொடர்.

5. நட்பு - நண்பர். பகை - பகைவர். நட்டல் - நண்பராக்கிக்கொள்ளுதல். ஒற்று - ஒற்றர். நெடுமொழி - நெடுங் காலத்திற்குப் பயன்படும் அறிவுரைகள். கோறல் - அவமதித்தல். பிறிதாதல் - வேறுபடுதல். பிரித்தல், நட்டல், இகழ்தல், ஐயுறுதல், கோறல், ஆதல் - தொழிற் பெயர்கள்.

கேள்விகள்

1. நமது உயிர்க்குக் கல்வியே உற்றதுணை என்பது எவ்வாறு பொருந்தும்?
2. ஆசிரியர் சொல் வன்மையின் சிறப்பை எவ்வாறு விளக்குகிறார்?
3. எவை பூத்தலிற் பூவாமை நன்று?
4. 'பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான்' செய்ய வேண்டுவன யாவை?
5. அரசனுக்குக் கேடு தருவன யாவை?

பயிற்சி

1. முதல் மூன்று பாடல்களின் கருத்தினை எழுதுக.

2. அரசனுக்குக் கேடு தருவனவற்றை விளக்கி வரைக.

3. பிரித்துக் காட்டுக :—நல்லிசை, ஊங்கில்லை, சிற்றுயிர், உய்த்துணர்வு, ஆகுலச் சொல், இன்னலம், பெருஞ்சுட்டு, ஒற்றிகழ்தல், நெடுமொழி.

4. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

நல்லிசை, உற்ற, சொல்வன்மை, பொன்மலர், பூத்தல், பெருஞ்சுட்டு, தாழ்ச்சி, நெடுமொழி.

III. கதை

1. பெரிய புராணம்

கண்ணப்ப நாயனர் புராணம்

பெரிய புராணம் – செயற்கரிய செய்த சைவப் பெரியார்களைப்பற்றிய பழைய வரலாறு. இதனைப் பாடியவர் சேக்கிழார். அவர் காலம் கி. பி. 12ஆம் நூற்ருண்டின் முற்பகுதி.

[கடப்பை மாவட்டத்தில் உடுப்பூர் என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் வேடர்கள் வாழ்ந்துவந்தனர். நாகன் என்பவன் அவர்களுக்குத் தலைவன். அவனுக்குப் பிறந்த மைந்தரே திண்ணனர் என்பவர். அவருக்குத் தலைமைப் பட்டம் கட்டப்பெற்றது. அவர் ஒருநாள், நாணன், காடன் என்ற இருவருடன் வேட்டையாடச் சென்ருர்; காட்டில் ஒரு பன்றியை விரட்டிக்கொண்டு காளத்தி மலைவரையில் சென்ருர்; அங்கு அப்பன்றியைக் கொன்ருர்; காடன் அப்பன்றி இறைச்சியைப் பக்குவப்படுத்திக்கொண்டிருந்தான். திண்ணனர் காளத்தி மலைமீது ஏறினர். நாணனும் பின் தொடர்ந்தான்.

திண்ணனர், மலைமீது கோவில் கொண்டிருந்த சிவபெருமானை (சிவலிங்கத்தை)க் கண்டு தம்மை மறந்தார்; தாயைத் தழுவும் சேயைப்போல இலிங்கத்தைத் தழுவினர்; பொன் முகரி ஆற்றுக்குச் சென்று தம் வாயால் நீரை நிரப்பிக் கொண்டார். மலர்களைத் தம் தலைமுடியிற் செருகிக்கொண்டார்; பதப்படுத்தப்பட்ட இறைச்சியைக் கையில் எடுத்துக் கொண்டார்; தம் வாய் நீரால் இலிங்கத்தை நீராட்டினர்; மலர்களைத் தூவினர்; இறைச்சியைப் படைத்தார்; "உண்ணும், உண்ணும்" என்று ஊட்டினர்; இலிங்கத்திற்கு மக்களாலும் விலங்குகளாலும் தீங்கு நேராதபடி இரவும் பகலும் அருகில் நின்று காவல் காத்தார். அவரை அழைத்துச் செல்லவந்த பெற்ருேர் வருத்தத்துடன் மீண்டனர்.

சிவகோசரியார் என்பவர் ஒரு முனிவர். அவர் ஒவ்வொரு நாளும் காலையில் வந்து சிவலிங்கத்தை நீராட்டிப் பூசிப்பது வழக்கம். திண்ணனுர் வேட்டைக்குச் சென்றபோது முனிவர் வந்தார். இறைவன் திரு முன்பு இறைச்சித் துண்டு களும் எலும்புகளும் இருப்பதைக் கண்டு வருந்தினுர் ; சிவ பெருமானிடம் முறையிட்டார்.

இறைவன் அவரது கனவில் தோன்றித் திண்ணனுரது இறைப் பற்றினை விளக்கினுர் ; அவரது உண்மை அன்பினை மறுநாள் வந்து மறைந்திருந்து பார்க்குமாறு கூறினுர். சிவகோசரியார் மறுநாள் காலையில் வழக்கம்போல் பூசை செய்தார் ; பின்பு ஓரிடத்தில் மறைந்திருந்து நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனிக்கலானுர். சிவபெருமான் திண்ண னுரது அன்பை முனிவருக்குக் காட்ட விரும்பித் தம் கண்களுள் ஒன்றிலிருந்து குருதி வடியுமாறு செய்தார்.]

திண்ணனுர் ஓடிவருதல்

அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனுர் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேஅவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார். (1)

திண்ணனுர் பதைப்பு

வந்தவர் குருதி கண்டார்
மயங்கினுர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம்
குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார். (2)

விழுந்தவர் எழுந்து சென்று
துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணார் செய்வ
தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி
யாரிது செய்தார் என்று
எழுந்தனர் திசைகள் எங்கும்
பார்த்தனர் எடுத்தார் வில்லும். (3)

வேடரைக் காணார் தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார் மீண்டும்
நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினார் கண்ணீர் வார. (4)

மருத்துவம் செய்தல்

நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்கள் எங்கும்
சினத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம்
மருந்துகள் பிசைந்து வார்த்தார். (5)

மற்றவர் பிசைந்து வார்த்த
மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர்
குறைபடா திழியக் கண்டும்
இற்றையிந் நிலைமைக் கென்னே
இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக்
கூனெனும் உரைமுன் கண்டார். (6)

கண்ணை அப்புதல்

இதற்கினி என்கண் அம்பால்
 இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
 நிற்கவும் அடுக்கும் என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
 மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சரம் எடுத்து வாங்கி
 முதல்வர்தங் கண்ணில் அப்ப (7)

நின்றசெங் குருதி கண்டார்
 நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
 கொட்டினர் கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த
 மதியென நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
 உன்மத்தர் போல மிக்கார். (8)

வலத்திருக் கண்ணில் தங்கண்
 அப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட
 நாயனர் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக்
 கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து
 கொள்கையின் உம்பர் மேலார். (9)

கண்டபின் கெட்டேன் எங்கள்
 காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க
 மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்
 மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்அக் கண்ணை
 இடந்தப்பி ஒழிப்பேன் என்று (10)

கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பின் காணும் நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னேடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனர் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர். (11)

செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனர் தம்மை யாண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத்
தடுக்கமுன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க என்ற. (12)

பேறு பெறுதல்

கானவர் பெருமா ளுர்தங்
கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப. (13)

பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை

ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக்கொண் டென்வ லத்தில்
மாறிலாய் நிற்க என்று
மன்னுபே ரருள்பு ரிந்தார். (14)

அருஞ்சொற்பொருள்

1. அண்ணலார் - பெருமை பொருந்தியவர், சிவ பெருமான். முனிவனுர் - சிவகோசரியார். பரிவு - அன்பு. நயனம் - கண். துண்ணென - திடீரென்று. வண்ணம் - அழகு. வெஞ்சிலே - வெம்மை + சிலே, கொடிய வில். வல்விரைந்து - மிகவும் விரைந்து.

2. நன்னீர் - நன்மை + நீர். ஊன் - இறைச்சி. கொந்து - கொத்து. அலர் - மலர்கின்ற. பள்ளித்தாமம் - பூக்களும் இலேகளும். குஞ்சி - ஆண்களின் தலேமுடி. பைந்தழை - பசுமை + தழை=பசிய தழைகள். அலங்கல் - மாலே.

3. உயிர்த்து - பெருமூச்சு விட்டு. அழிந்து - செய்வது அறியாது வருந்தி. இது - குருதி வருதல்.

4. நாயனுர் - சிவபெருமான். மலர்ப்பாதம் - மலர் போன்ற பாதம். மாடு உற - பக்கம் பொருந்த. வார - பெருக.

5. வேறு வேறு - அடுக்குத் தொடர். வெருக் கொண்டு - வெருண்டு, மருட்சியடைந்து. வெருவுதல் - அஞ்சுதல். ஏறு - எருது. பூதநாயகன் - பூதங்களுக்குத் தலேவன், சிவபெருமான். பிசைந்து வார்த்தார் - மருந்து இலேகளேப் பிழிந்து சிவபெருமான் கண்ணில் வார்த்தனர்.

6. கொற்றவர் - வெற்றியை உடையவர், சிவபெரு மான். இழிய - வடிய. 'ஊனுக்கு ஊன்' என்பது பழமொழி.

7. இடந்து - பெயர்த்து. எந்தையார் - எம் அப்பனுர், சிவபெருமான். மதர்த்து - களித்து. சரம் - அம்பு.

8. செங்குருதி - செம்மை + குருதி. மதி - யோசனே. ஒன்றிய - பொருந்திய. உன்மத்தர் - மதம் மிக்கவர்.

9. வள்ளலார் - கண்ணப்ப நாயனுர்; கண்ணே வழங் கியதால் வள்ளல் எனப்பட்டார். நலத்தினே - நல்ல தன்

மையை. உலப்பு இல் - இடைவிடாது. கொள்கை - கொள்ளப்பட்டது; இங்கு அன்பு குறித்தது. உம்பர் - தேவர்.

10. காளத்தியார் - திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். இதனுக்கு - இங்ஙனம் நிற்காமல் குருதி வருவதற்கு.

11. கண்ணுதல் - நெற்றியில் கண்ணை உடைய சிவ பெருமான். நேர்பாடு - கண்ணுக்குக் கண் நேர்ப்பட்டு அமையும் பொருத்தம். தம்பிரான் - தம் + பிரான் - தங்கள் பிரான், சிவபெருமான். பிரான் × பிராட்டி. உள் நிறை - மனத்தில் நிறைந்த. ஒரு - ஒப்பற்ற. பகழி - அம்பு. தரித்திலர் - பொறுத்திலர். தேவதேவர் - சிவபெருமான்.

12. செங்கண் - செம்மை + கண். விடை - எருது. அங்கணர் - அருள் உடையவர். என்ற - என்றன.

13. கானவர் - வேடர். கான் - காடு. ஐயர் - சிவ பெருமான். உற்று - பொருந்தி. ஞானமாமுனிவர் - சிவ கோசரியார். மறைகள் - வேதங்கள்.

14. பேறு - பயன். ஊறு - குருதி ஊற்று. ஏறு உயர்த்தவர் - எருதுக்கொடியை உயர்த்தியவர், சிவபெருமான். மாறு இலாய் - ஒப்பு, உயர்வு அற்றவனே. வலத்தில் - வலப்பக்கத்தில். நிற்க - நிற்பாயாக! பேரருள் - பெரிய திருவருள்.

கேள்விகள்

1. சிவபெருமான் ஏன் தன் கண்களுள் ஒன்றிலிருந்து குருதி சோரும்படி செய்தார்?
2. சிவபெருமான் கண்ணிலிருந்து குருதி வெளிப்படுவதைக் கண்ட திண்ணனார் யாது செய்தார்?
3. திண்ணனார் குருதியை நிறுத்த மேற்கொண்ட முதல் முயற்சி யாது?
4. திண்ணனார் குருதியை எவ்வாறு நிறுத்தினார்?
5. திண்ணனார் சிவபெருமானது இரண்டாம் கண்ணிலிருந்து வெளிப்பட்ட குருதியைக் கண்டு என்ன சொன்னார்? என்ன செய்தார்?

6. "கண்ணப்ப நிற்க"—இது யார் கூற்று? இங்ஙனம் கூறக் காரணம் யாது?

பயிற்சி

1. இப்பாடப் பகுதியில் வந்துள்ள சிவபெருமானைக் குறிக்கும் சொற்களையும் தொடர்களையும் சொல்லுக.

2. இப்பாடப் பகுதியில் திண்ணனுரைக் குறிக்க வந்துள்ள சொற்களையும் தொடர்களையும் கூறுக.

3. இப்பாடப் பொருளைச் சுருக்கி 30 வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. திண்ணனுரே இப்பாடச் செய்தியை மொழிவது போல மொழிக.

2. கம்பராமாயணம்

கம்பராமாயணம் - கம்பரால் பாடப்பெற்ற இராமாயணம். கம்பர் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவர்.

இராமன் நகர் நீங்குதல்

[தசரதன் அயோத்தி நாட்டுக்கு அரசன். அவனுக்கு மனைவியர் மூவர். கோசலை, சுமித்திரை, கைகேயி என்பன அவர்தம் பெயர்கள். கோசலைக்கு இராமனும், கைகேயிக்குப் பரதனும், சுமித்திரைக்கு இலக்குவனும் சத்துருக்கனனும் பிள்ளைகள். தசரதன் தன் மூத்த மகன் இராமனுக்குப் பட்டம் கட்ட விரும்பினுன். கைகேயி தன் மகன் பரதனுக்கே பட்டம் கட்ட வேண்டும், இராமன் பதினுன்கு ஆண்டுகள் காடுசெல்ல வேண்டும் என்று வற்புறுத்தினுள். அவற்றைக் கேட்ட தசரதன் மயங்கி விழுந்தான். அப்பொழுது கைகேயி இராமனை அழைத்துப் பரதன் நாடாள வேண்டும் என்பதும் இராமன் பதினுன்கு ஆண்டுகள் காடேக வேண்டும் என்பதும் அரசனது விருப்பம் என்றுள். அதுகேட்டு மகிழ்ந்த இராமன்,]

இராமன் கூற்று

மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதின் உறுதி அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன். (1)

[இராமன் தலையில் முடியில்லாததைக் கண்ட கோசலை, "முடிபுனைதற்கு இடையூறு உண்டோ !" என்று கேட்டாள்.]

இராமன் கோசலையிடம் கூறுதல்

மங்கை யம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான். (2)

கோசலையின் கூற்று

முறைமை யன்றென்ப தொன்றுண்ட தல்லது
நிறைகு ணத்தவன் நின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினாள் நால்வர்க்கு
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள். (3)

இராமன் காடுசெல்வதை அறிந்த மக்களும் பிறவுயிர்களும் வருந்துதல்

கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த
மாற்றத்தால். (4)

இலக்குவன் சீற்றம்

சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் கடுங்குட் டியையூட்ட விரும்பி னாளே

நங்கைக் கறிவின்றிறம் நன்றிது நன்றி தென்னுக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து
நக்கான். (5)

விண்ணுட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர்
மற்றும்
எண்ணுட்டவர் யாவரும் நிற்கவொர் மூவ ராகி
மண்ணுட்டுநர் காட்டுநர் வீட்டுநர் வந்தபோதும்
பெண்ணுட்டம் ஒட்டேன் இனிப்பேருல கத்துள்
என்றுன்.* (6)

இராமன் இலக்குவனை அமைதிப்படுத்துதல்

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ இதற்கென்னை வெகுண்ட
தென்றுன். (7)

[இலக்குவன் இராமனுடன் காடுசெல்லத் துணிந்தான். பின்பு இருவரும் சுமித்திரையைக் கண்டனர்.]

சுமித்திரை இலக்குவனுக்கு அறிவுரை கூறுதல்

ஆகாத தன்றுலுனக் கவ்வன மிவ்வ யோத்தி
மாகாதல் இராமனம் மன்னவன் வையம் ஈந்தும்
போகா வுயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதை யென்றே
யேகாய் இனியிவ்வயின் நிற்றலும் ஏதம் என்றுள்.

பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின்செல் தம்பி
யென்னும் படியன் றடியாரினில் ஏவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென்றனள் வார்விழி சோர நின்றுள்.

[இராமன் நிகழ்ந்ததைச் சீதையினிடம் கூறித் தான் காடு செல்வதாகவும் அவன் தன்னுடன் வரவேண்டா என்றும் கூறினுன். அப்பொழுது,]

---

* இடையில் பல பாக்கள் விடப்பட்டமை கருதி, ‘என்னு’ என்பது ‘என்றுன்’ என்று மாற்றப்பெற்றது.

அன்ன தன்மையன் ஐயனும் அன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை என்னை இருத்திஎன் றுய்எனு
உன்ன உன்ன வுயிருமி ழாநின்றாள். (10)

பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை ஊழி யருக்கனும்
எரியும் என்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள். (11)

[சீதை தன்னைவிட்டுப் பிரிந்திராள் என்பதையறிந்த இராமன் அவளை அழைத்துக்கொண்டு இலக்குவனுடன் காடு சென்றான்.]

அருஞ்சொற்பொருள்

1. பணி - கட்டளை. பின்னவன் - தம்பி, பரதன். இதின் - இதனினும் மேலான. உறுதி - நன்மை. அப்பால் - பின்பு. மின்னொளிர் - மின்னல்போன்ற வெயில் விளங்குகின்ற.

2. மங்கை-கோசலை. மானவன் - மநு மரபில் பிறந்தவன்; இராமன். செங்கை - செம்மை + கை. காதல் - அன்பிற்குரிய. பங்கம் - குற்றம். எம்பி - எம் பின்னவன், தம்பி. துங்க - தூய, உயர்வாகிய.

3. முறைமையன்று - மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் அரசநீதியன்று. அது - முறைமையன்று என்பது. மறு - குற்றம். கோசலை நான்கு பிள்ளைகளிடத்திலும் ஒத்த அன்புடையவள்.

4. கிள்ளை - கிளி. பூவை - நாகணவாய்ப்பறவை. கிளர் - விளங்குகின்ற. மாடம் - இல்லம். உறையும் - வாழும். பூசை - பூனை. வள்ளல் - இராமன்.

5. குருளை - குட்டி. தீஞ்சுவை - தீம் + சுவை = இனிய சுவை. நங்கை - பெண்களிற் சிறந்தவள்; கைகேயி. நம்பி - ஆண்களிற் சிறந்தவன். நன்றிது நன்றிது - அடுக்குத்தொடர். என்னு - என்று. கங்கைக்கு இறைவன் - இலக்குவன். புடைத்து - கொட்டி. நக்கான் - சிரித்தான்; நகு - பகுதி.

6. விண்ணுட்டவர் - தேவர். விஞ்சையர் - வித்தியா தரர். நாகர் - பாதாள உலகத்தவர். எண்நாட்டவர் - எண்ணத்தக்க பல நாட்டவர். மண்நாட்டுநர் - நிலத்தைப் படைப்பவர், பிரமன். காட்டுநர் - காப்பவர், திருமால். வீட்டுநர் - அழிப்பவர், சிவன். ஒர்மூவர் - ஒப்பற்ற மும் மூர்த்திகள். ஆகி - ஒன்ருகி. பெண் நாட்டம் - பெண் களின் நோக்கத்திற்கு. ஒட்டேன் - இடம் கொடேன்.

7. நறும்புனல் - நல்லநீர். பதி - தந்தை, தசரதன். பயந்து - பெற்று. புரந்தாள் - பாதுகாத்தவள், கைகேயி. மதி - அறிவு. மகன் - பரதன். மைந்த - இளையவனே. என்னே - என்.

8. ஆகாதது - செல்லத் தகாதது. வையம் ஈந்தும் - இராமன் நாட்டைப் பரதனுக்குக் கொடுத்துக் காட்டிற்குச் சென்ற பின்பும். தாயர் - தாய். ஏகாய் - இராமனுடன் செல்வாயாக. ஏதம் - குற்றம்.

9. பகர்வாள் - சொல்லுவாள். முன்னம் முடி - (ஏதே னும் கேடு வருமென்று தெரியின்) இராமனுக்கு முன்பே உயிரை விட்டுவிடு. வார் - நீண்ட.

10. அன்ன தன்மையள் - (திருமால் இராமனுக வந்த போது அவனை விட்டுப் பிரிய மனமில்லாது திருமகள் சீதை யாகப் பிறந்தாள்.) அத்தன்மையுடைய சீதை. ஐயன் - தந்தை. என்னே - எக்காரணத்தால். இருத்தி - இருப்பா யாக. எனு - என்று கூறி. உன்ன உன்ன - (இராமன் கூறியதை) நினைக்க நினைக்க, அடுக்குத் தொடர். உயிர் உமிழா நின்ருள் - பெருமூச்சு விடலானுள்.

11. பரிவு - இரக்கம். இகந்த - நீங்கிய. பற்று - விருப்பம். ஒருவுகின்றனே - (என்னை விட்டு) நீங்குகின்ருய். ஊழி அருக்கன் - உலகம் அழியும் காலத்துப் பகலவன். யாண்டையது - (உனது பிரிவுத் துயரால் உண்டாகும் வெப்பத்திற்கு முன்) எத்தன்மையது.

கேள்விகள்

1. கைகேயி இராமனை நோக்கிக் கூறியது யாது?
2. கைகேயி கூறியதைக் கேட்ட இராமன் யாது கூறினுன்?

3. இராமன் கோசலையிடம் கூறியது யாது?

4. பரதன் முடிசூடுகிறுன் என்று இராமன் கூறக் கேட்ட கோசலை யாது கூறினுள்?

5. இராமன் காடு செல்வதை அறிந்து வருந்திய உயிர்கள் யாவை?

6. இலக்குவன் சீற்றம் கொண்டு கூறியவை யாவை?

7. இராமன் இலக்குவனை எப்படி அமைதிப்படுத்தினுன்?

8. சுமித்திரை இலக்குவனுக்குக் கூறிய அறிவுரை யாது?

9. தன்னைக் காட்டிற்கு வரவேண்டா என்று கூறிய இராமனை நோக்கிச் சீதை வருந்திக் கூறியது யாது?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக:— மின்னெளிர், இப்பணி, செங்கை, காதற்றிருமகன், உள்ளுறையும், பின்னவன், அன்றலர்ந்த, விண்ணுட்டவர், பிழையன்று.

2. சேர்த்துக் கூறுக:—மேல்+கொண்டு, அ+மொழி, அன்று+என்பது, அன்று+ஆகில், மின்+ஒளிர், காதல்+திருமகன், உரு+அறியா.

3. இப்பாடச் செய்தியை முப்பது வரிகளுள் ஒரு கட்டுரையாக எழுதுக.

4. இராமனே இப்பாடச் செய்தியைக் கூறுவது போலக் கூறுக.

3. திருவிளையாடற் புராணம்

விறகு விற்ற படலம்

மதுரையில் சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு. அவற்றைக் கூறும் செய்யுள் நூல் திருவிளையாடற்புராணம் எனப்படும். கி. பி. 13ஆம் நூற்றுண்டில் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர் திருவிளையாடற் புராணம் செய்தார். கி. பி. 15 அல்லது 16ஆம் நூற்றுண்டில் பரஞ்சோதி முனிவர் என்பவர் மிக விரிந்த அளவில்

திருவிளையாடற் புராணம் பாடினர். இவருடைய செய்யுட்கள் சொல்லழகும் பொருளழகும் உடையவை. இவர் நூலிலிருந்து இச்செய்யுட்கள் தரப்பட்டுள்ளன.

ஏமநாதன்

மன்றலந் தெரியல் மார்பன்
வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவ லானிற்
பொலியுநாள் ஏம நாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன்
வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதி னேடும்
விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான். (1)

பூழியர் பெருமான் கோயில்
புகுந்துவேத் தவையத் தெய்திச்
சூழிமால் யானை யானைத்
தொழுதுபல் புகழ்கொண் டாடி
ஏழிசை மழலை வீணை
யிடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்னன்
அஞ்செவி வழியப் பெய்தான். (2)

முகையுடைந் தவிழ்ந்த மாலை
முடித்தலை துளக்கித் தூசு
பகலவிர் மணிப்பூண் நல்கிப்
பல்லுணக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி
அரசர்கோன் வரிசை செய்ய
இகலறு களிப்பி னேடும்
இசைவலான் இல்லிற் புக்கான். (3)

பாண்டியனும் பாணபத்திரனும்

மீனவன் வரிசை பெற்ற
செருக்கினும் விருதி னனும்
மானமேல் கொண்டு தன்னே
டின்னிசை பாட வல்ல

தானயாழ்ப் புலவர் வேறிங்
 கில்லெனத் தருக்குஞ் செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப்
 பத்திரன் கொணர்திர் என்றான். (4)

உழையரால் விடுக்கப் பட்ட
 பத்திரன் உவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக்
 கௌரிய னோக்கிப் பாணி
பழகிசை வல்லா னோடும்
 பாடுதி கொல்லோ வென்ன
மழலையாழ் இடந்தோ ளிட்ட
 பாணர்கோன்வணங்கிச்சொல்வான். (5)

தென்னவர் பெரும யானுன்
 திருவுள வலனுங் கூடல்
முன்னவன் அருளுங் கூட்டு
 முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி
 அவனைவீ றழிப்பன் என்றான்
மன்னவன் நாளைப் பாடு
 போகென வரைந்து சொன்னான். (6)

ஏமநாதன் மாணவர்

இற்கண்ணே இசைவல் லான்போய்
 இருந்துழி அனையான் பாங்கர்க்
கற்கும்பாண் மக்கண் மல்லல்
 ஆவணங் கவலை மன்றம்
பொற்குன்றம் அனைய மாட
 மறுகெங்கும் போகிப் போகிச்
சொற்குன்ற வகையாற் பாடித்
 திரிந்தனர் வீறு தோன்ற. (7)

இவ்விசை கேட்டு நன்றென்
 றதிசயித் திசைவல் லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும்
 வண்ணமீ தென்னை கெட்டேன்

அவ்விசை வல்லான் பாடு
முறையெற்ரே அவனை நாளைச்
செவ்விசை பாடி வெல்வ
தெவனெனத் திவவுக் கோலான். (8)

[பின்பு பாணபத்திரன் கோவிலுக்குச் சென்று, மறு நாள் நடைபெறும் இசைப் போட்டியில் தனக்கு வெற்றி கிடைக்க அருள் புரியுமாறு சிவபெருமானை வேண்டிக் கொண்டு தன் வீடு சென்ருன்.]

சிவன் விறகு விற்பவன் வேடம் கொள்ளுதல்

வருத்த ளுகிவந் திரந்தவன் இசைப்பகை மாற்ற
விருத்த னும்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த ளுரறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த ளுர்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார்.

அழுக்கு மூழ்கிய சிதரசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வெண்மதி வாங்கியே செருகிய தொப்ப
மழுக்குகூனல்வெள் வாய்க்குயம்வலம்படச்செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததாள் ஏற்றி.

பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க்
[கோரேள்
உழையதாகவிட் டெருத்தலைத் தூசலாடியவொண்
குழைய காதினிற் களவிணர் குறியகாய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமையடை
[தாங்கி. (11)

தறிந்த இந்தனந் தினந்தொறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையும் காணு
தெறிந்த இந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி.

என்பு தோன்றியூன் இன்றியே இளைத்தயாக்
[கையராய்
அன்பு தோன்றியே கண்டவர் அகங்களித் திரங்க
வன்புதோன்றிய மனமொழி கடந்ததாண் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்திளுன் முடிமிசைச் சூட.

திருமு கத்துவேர் வரும்பவாய் குவிந்தொலிசெய்ய
வருவர் கற்சுமை தாங்கிமேற் சார்த்துவர் மடுநீர்
பருகு வாரெடுப் பார்தலை வெம்மைவேர் பறிய
இருகை யாலடிக் கடியெடுத் தேந்தியூர் புகுவார்.

நடந்துகொள்ளுநர்க் கருவிலை பகர்ந்துநான்மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும்
[பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச்
[செல்வார். (15)

[அப்பொழுது மாலைப் பொழுது தோன்றியது.]

விறகாளும் ஏமநாதனும்

எடுத்த இந்தனம் ஒருபுறத் திறக்கியிட் டூன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிதெழீஇப் பாடினர் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவான் என்றிசை வல்லான்.

வண்டறை கொன்றை யான்முன்
வந்துநீ யாரை யென்றுன்
பண்டரு விபஞ்சி பாண
பத்திரன் அடிமை யென்றுன்
முண்டக மலரோன் மாயோன்
புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவல்
அடிமையாக் கொண்ட வம்மான். (17)

கனியிசைக் கிழவன் தன்கீழ்க்
கற்பவர் அநேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு
நானுமவ் வினைஞன் ஆனேன்
தனியிசைக் கிழவன் நோக்கித்
தசையெலாம் ஒடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக் காகாய்
என்றெனைத் தள்ளி விட்டான். (18)

வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனும் ஐய
இவ்வுயிர் ஓம்பு கேனென் றித்தொழில்
[பூண்டேன் என்ன
நைவளந் தெரிந்த ஏம நாதனும் விறகு மள்ளா
அவ்விசை யொருகால் இன்னும் பாடென
[வையன் பாடும். (19)

விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தான் என்னே
அரசாய் மதுரை யமர்ந்தான் அவனென்
புரைசார் மனனும் புகுந்தான் என்னே. (20)

இசையின் சிறப்பு

கண்ணிறை நுதலோன் சாம
கண்டத்தி னெழுந்த முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ்
சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும்
விழுங்கித்தன் மயமே யாக்கி
உண்ணிறை யுயிரும் மெய்யும்
உருக்கிய திசைவல் லானே. (21)

சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப்
[புலன்கள்
ஐந்தும் ஓசையா யிசைவலான் இருந்தன ணுகப்
பந்த நான்மறை நாவினுற் பத்திரன் ஆளாய்
வந்து பாடினுர் இந்தனச் சுமையொடு மறைந்தார்.

ஏமநாதன் கவலையும் மறைவும்

யான றிந்தசா தாரியன் றிம்பருள் இதனை
நான றிந்ததென் றொருவரு நவின்றிலர் தேவ
கான மீதிவற் குணர்த்தினேன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வல்லரோ இதுவியப் பென்னு. (23)

இழுக்கி விட்டவிக் கிழமகன் இசையிதேல் அந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றேவென மதியா

அழுக்க முற்றெழுந் திசைவலான் அடுத்ததன்
[பண்டர்
குழுக்க ளுங்குலே குலேந்திட இருள்வழிக்
[கொண்டான். (24)

பத்திரன் கனவில் சிவன்

அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
இன்று பத்திர விசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திரன் அடிமையாம் என்றுபாண்செய்து
வென்று பத்திரஞ் செய்தும்நின் வேண்டுகோள்
[என்ருர். (25)

பத்திரன் சிவனே வணங்குதல்

கண்மலர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்மலர்ந்தெழும் அன்புகொண் டூக்கவெங்
[கதிரோன்
விண்மலர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயிற்
பண்மலர்ந்தநான் மறைப்பொருள் அடித்தலம்
[பணிந்தான். (26)

கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ முண்டகத்தாள்கணெந்திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளேந்ததே குற்றம்.

நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடியனேன்பொருட்டாகவிச்சேணிலந்தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ ஐயநின் பெருமை.

பாண்டியன் உண்மை அறிதல்

என்ன வந்தனே செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனே வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரா ஞகிய வரகுண தேவன்
தன்னே வந்தடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன்.

வந்த ஏழிசைத் தலேமகன் வரவறிந் தரசன்
அந்த வேழிசைக் கிழவனேயழைபெனவுழையோர்

பந்த யாழ்மகன் இருக்கைபோய்ப் பார்த்தனர்
[காணூர்
சிந்தை யாகுல மடைந்தவன் போனவா தெரியார்.

எங்கு ளானெனத் தேடுவார் இவரெதிர் அயல்வாய்
அங்கு ளார்சிலர் அறிந்தவா றறைகுவார் அவனேற்
றிங்கு ளான்விற கெடுத்தொருமுதுமகன் இவன்பாற்
பொங்கு மேழிசைப் பத்திர னடிமையாய்ப்
[போந்தான். (31)

பாடி னுன்பின்பு பட்டது தெரிகிலேம் பாணுள்
ஓடி னுனெனக்கேட்டலும்ஒற்றர் போய்க்கொற்றஞ்
சூடி னுனவை யடைந்தவர் சொல்லிய வாறே
ஆடி னூர்வியப் படைந்தனு மானமுற் றரசன்.(32)

தன்ன டைந்தவத் தந்திரித் தலைவனை நோக்கி,
என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுநீ செய்தனை யெனஇசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை
[மொழிவான். (33)

[அப்பொழுது பாணபத்திரன் தான் முன்னுள் சிவ பெருமானை வேண்டிக்கொண்டதும், அப்பெருமான் விற காளாய்ச் சென்று இசைபாடி மீண்ட செய்தியைத் தன் கனவில் தோன்றிக் கூறியதும் பாண்டியனிடம் கூறினுன். பாண்டியன் இது சிவபெருமான் திருவிளையாட்டாகும் எனத் தெளிந்தான்.]

பாண்டியன் சிவனைப் பணிதல்

இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையரு நேயந்
திகழ்ந்த பத்திரன் அன்பையுந்தேவரைக்காப்பான்
அகழ்ந்த ஆழிநஞ் சுண்டவன் அருளையும் வியந்து
புகழ்ந்துபோய்மதுராபுரிப்புனிதனைப்பணியா.(34)

பத்தர் யாழிசைக் கிழவனைப் பனைக்கைமான்
[எருத்தில்
வைத்து மாடநீள் நகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்த மாழ்ந்திட வரிசைகண் மிதப்புறச் செய்து
தத்து மான்றெடைத் தேரினுன் றன்மனை புகுவான்.

அருஞ்சொற்பொருள்

1. மன்றல் - மணம். ஓச்சி - செலுத்தி. பொன்தலம்-பொன்னுலகம். காவலன் - இந்திரன். விறல் - வெற்றி. வடபுலம் - வடநாடு. விஞ்சை - வித்தை, கல்வி.

2. பூழியர் - பாண்டியர். கோயில் - அரண்மனை. சூழி - முகபடாம். ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். மழலை வீணை - மழலை போலும் இனிமை பயக்கும் வீணை. தழீஇ - தழுவி, சொல்லிசை அளபெடை. வாழி - அசைச்சொல். இசைத்தேன் - உருவகம்.

3. முகை - அரும்பு. துளக்கி - அசைத்து. தூசு - ஆடை. பகல் - ஒளி. உணு - உணவு. இகல் - பகைமை.

4. மீனவன் - பாண்டியன். மானம் - பெருமை. உழையர் - ஏவலாளர்.

5. உவரி - கடல். கழல் - பாதம், தானியாகுபெயர். கௌரியன் - பாண்டியன். பாணி - பாடுதல்.

6. தென்னவர் - பாண்டியர். வலம் - வலிமை. வீறு - தருக்கு, கர்வம்.

7. அணியான் - ஏமநாதன். மல்லல் - வளமிக்க. ஆவணம் - கடைவீதி. கவலை - கவர்வழி. மறுகு - தெரு. போகிப் போகி - அடுக்குத் தொடர். வீறு - இசைவன்மை.

8. திவவுக் கோலான் - நரம்பின் கட்டமைந்த யாழில் வல்ல பாணபத்திரன்.

9. இசைப்பகை - இசைவல்ல பகைவன். திருத்தன் - தீர்த்தன்.

10. சிதர் - கந்தை. அசைத்து - உடுத்தி. அவிர் சடை - வினைத்தொகை. கூனல் - வளைந்த. குயம் - அரிவாள்.

11. பொல்லம் பொத்திய - தைக்கப்பெற்ற. பத்தர் - யாழின் ஓர் உறுப்பு. கோல்+தோள்=கோறோள். எருத்து-பிடரி. கள இணர்க் குறிய காய் - களாவின் பூங்கொத் தோடு கூடிய சிறிய காய். சுமையடை - சும்மாடு.

12. தறிந்த - முறியுண்ட. மறிந்த - அலைமடங்குகின்ற. இந்தனம் - விறகு. பங்கி - தலைமயிர்.

13. ஊன் - தசை. வன்பு - கடினம்.

14. வேர் - வியர்வை. பறிய - நீங்க.

15. அரு - படியாத (மிகுதியான). முடுக்கர் - குறுந் தெரு. மிடைந்து - நெருங்கி. கடைத்தலை - கடைவாயில்.

16. அடுத்தவன் - வந்தவனாகிய ஏமநாதன். எழீஇ - எழுப்பி, சொல்லிசை அளபெடை. சுருதி - இசை.

17. வண்டறை=வண்டு+அறை - வண்டுகள் ஒலிக் கின்ற. பண்டரு=பண்+தரு - பண் அமைந்த. விபஞ்சி- யாழ். முண்டகம் - தாமரை.

18. கனியிசைக் கிழவன் - பாணபத்திரன். வேட்டு - விரும்பி. தனியிசைக் கிழவன் - பத்திரன். கிழமை - உரிமை. கிழவன் - உரிமையுடையவன்.

19. வெவ்விறகு - உலர்ந்த விறகு. எறிந்து - வெட்டி. நைவளம் - நட்டபாடை என்னும் பண். மள்ளா - மள்ளனே. (ஐயன்) பாடும் - 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று, ஆண்பாலுக்கு வந்தது.

20. விரை - மணம். மலரோன் - பிரமன். விகிர்தன்- பெருமான். என்னே - இஃது என்ன வியப்பு. புரை - குற்றம்.

21. கண்ணிறை - கண் நிறைந்த. சராசரம் - இயங்கு வனவும் நிற்பனவும். இசை வல்லான் - ஏமநாதன்.

22. ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புலன்கள் - ஐம்பொறிகளால் நுகரப்படும் ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம்.

23. சாதாரி - சாதாரிப்பண். இம்பர் - இந்நிலவுலகில். என்னு - என்று, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினை யெச்சம்.

24. இழுக்கிவிட்ட - வயது முதிர்ந்தவன் என்ற குற்றம் காட்டி நீக்கி விடப்பட்ட. மதியா - கருதி,

எண்ணி ; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அழுக்கம் - வருத்தம். பண்டர் - பாண் மக்கள். குலை குலைந்திட - இரட்டைக் கிளவி.

25. ஆடல் - வெற்றியையுடைய. ஏறு - காளை. ஏற்று அழகர் - காளையை ஊர்தியாக உடைய சொக்கர். பாண் செய்து - இசைபாடி. பத்திரம் செய்தும் - காத்தனம்.

26. இலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஊக்க - செலுத்த. பண்மலர்ந்த - இசை நிறைந்த.

27. கடிய - கொடிய. அடாத சொல் - பத்திரனுக்கு மாணவன் என்ற சொல்.

28. செடியனேன் - பாவியேன். சுருதிமுடி - வேதங்களின் முடிகள்.

29. வந்தனை செய்து - வணங்கி. மின் - மின் போல்வாள், பார்வதி. தந்திரி - நரம்பு, இங்குச் சினையாகு பெயராய் யாழை உணர்த்திற்று.

30. ஏழிசைத் தலைமகன் - பாணபத்திரன். ஏழிசைக் கிழவன் - ஏமநாதன். பந்தம் - கட்டமைந்த. காணூர் - காணாது ; முற்றெச்சம்.

31. வாய் - இடம். அறைகுவர் - சொல்லுவர். முது மகன் - முதுமை+மகன்.

32. பட்டது - நடந்த செய்தி. தெரிகிலோம் - அறியோம் ; தன்மைப் பன்மை வினைமுற்று. பானாள்=பால்+நாள் - பாதி இரவு. ஆடினர் - கூறினர். அநுமானம் - குறிகளால் அறிதல்.

33. இசைப் பெருமான் - பாணபத்திரன்.

34. இடையறு - இடை விடாத. காப்பான் - காக்க, வினையெச்சம். பணியா - பணிந்து, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

35. பனைக் கை மான் - யானை. தத்துமான் - தாவுகின்ற குதிரைகள். தொடை - பூட்டிய.

கேள்விகள்

1. ஏமநாதனுக்கு மரியாதை செய்த பாண்டியன், பாணபத்திரனை அழைத்தது ஏன்?
2. பாண்டியன் கேள்விக்குப் பாணபத்திரன் அளித்த விடை யாது?
3. சிவபெருமான் எவ்வாறு விறகு விற்பவனாக வேடம் கொண்டார்?
4. சிவபெருமான் பாடிய பாடல் யாது?
5. சிவபெருமான் ஏமநாதனை எப்படி அச்சம் கொள்ளச் செய்தார்?
6. சிவபெருமான் கனவில் தோன்றி மறைந்த பின்பு பாணபத்திரன் யாது செய்தான்?
7. ஏமநாதனை அழைத்து வரச் சென்ற காவலர் வந்து கூறிய செய்தி யாது?
8. பாண்டியன் பாணபத்திரனை எவ்வாறு சிறப்பித்தான்?

பயிற்சி

1. இப்பாடப் பகுதியில் பாண்டியனைக் குறிக்கும் நான்கு தொடர்களைக் கூறி அவற்றின் பொருளைத் தருக.

2. இப்பாடப் பகுதியில் பாணபத்திரனைக் குறிக்கும் தொடர்களுள் நான்கினைக் கூறி அவற்றின் பொருளினைத் தருக.

3. இப்பாடப் பகுதியிலிருந்து நீவிர் அறியும் பாணபத்திரன் நல்லியல்புகளைக் கூறுக.

4. இறைவன் அடியார்க்கு அடியன் என்பதை இவ்வரலாறு கொண்டு தெளிவுறுத்துக.

5. இக்கதையால் அறியப்படும் படிப்பினையைக் கூறுக.

6. சிவபெருமானே இக்கதையைக் கூறுவது போலக் கூறுக.

7. பாணபத்திரன் இக்கதையைச் சொல்வது போலச் சொல்லுக.

4. சீறுப் புராணம்

நபி அவதாரம்

சீரு என்பது அரபு மொழி; 'புகழ்' என்பது பொருள். புராணம்-பழைய வரலாறு. சீறுப் புராணம் என்பது, முகமது நபியின் புகழ்பெற்ற பழைய வரலாறு எனப் பொருள்படும்.

இந்நூலின் ஆசிரியர் உமறுப் புலவர் என்பவர். இவர் காலம் கி. பி. பதினேழாம் நூற்றுண்டு. இவர் எட்டையபுரம் அரசவைப் புலவராய்த் திகழ்ந்தவர்; பின்பு கீழைக்கரையில் வாழ்ந்த சீதக்காதி வள்ளலாலும் அவர் அமைச்சரான அப்துல்காசிம் என்பவராலும் ஆதரிக்கப்பெற்றவர். இவருடைய பாடல்கள் சொற்சிறப்பும் பொருட் சிறப்பும் வாய்ந்தவை.

நபியின் பிறப்பு

கோதறப் பழுத்த மதுரமே கனிந்த
 கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி யேவல்செய் திருப்பச்
 செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி யாமினு வுதர
 மனையிடத் திருந்துமா நிலத்தி
லாதரம் பெருக நல்வழிப் பொருளா
 யகுமது தோற்றின ரன்றே. (1)

பூதலத் தரசு பதியென வுதித்த
 புகழ்பெறு மக்கமா நகரிற்
சீதவொண் கதிர்சேர் கஃபத்துல் லாவின்
 றிசையினில் வடகிழக் காக
வேதமொன் றணுகா ஜெம்றத்தி லுஸ்தா
 வெனுமொரு தலத்தினி னடுவே
மாதவ ரபித்தா லிபுதிரு மனையின்
 முகம்மது நபிபிறந் தனரே. (2)

நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
 நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
 சுடரிலா மனையது போலக்

குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே. (3)

பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர்தரு தருநிழ லெனலா
யீனமுங் கொலையும் விளைத்திடும் பலநோ
யிடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைஷியிற் றிலதமே யெனலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே. (4)

செங்கதிர் பரப்பி யுலகெலாம் விளக்கித்
திரிதின கரனும்வெண் ணமுதந்
தங்கிய கிரணச் சசியுமந் தரத்திற்
றவழ்தரு முடுக்குல மனைத்தும்
பொங்கொளி யெவையுஞ் சுவனநா டனைத்தும்
பூதலம் விசும்புமற் றனவு
மிங்கெழின் முகம்ம தொளியினி லென்று
லிவர்க்கெவை யுவமைசொல் லுவதே. (5)

அருஞ்சொற்பொருள்

1. கொவ்வை - கொவ்வைக்கனி. கொவ்வை வாய் - கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாய். உதரம் - வயிறு. ஆதரம் – அன்பு.

2. சீதம் – குளிர்ச்சி. கஃபத்துல்லா – கடவுள் கோயில் (அல்லாவின் வீடு). மாதவர் - பெருந்தவத்தினர். அபித் தாலிபு - முகம்மது நபியின் பெரிய தந்தை.

3. திரியா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மருள் – மயக்கம். மதம் – செருக்கு. நெடுநிலம் – பண்புத் தொகை. இலாமனை - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர். குபிர் - இறைவனுக்கு மாறு செய்தல்.

4. பானு - சூரியன். தரு - மரம். ஈனம் - இழிவு. அரு மருந்து - பண்புத்தொகை. தீன் - இசுலாமிய நெறி. செழு மழை - செழுமை+மழை, பண்புத்தொகை. குறைஷி - மக்காவில் இருந்த பெருங்குடி மக்கள்.

5. தினகரன் - சூரியன். சசி - சந்திரன். உடு - விண் மீன். சுவனநாடு - தேவநாடு.

கேள்விகள்

1. முகம்மது நபி பிறந்தபொழுது நாடு இருந்த நிலையையும் மக்களது அவல நிலையையும் விளக்குக.

2. முகம்மது நபி எவற்றுக்குத் தருநிழலாய், அருமருந்தாய், செழுமழையாய்ப் பிறந்தார்?

பயிற்சி

1. பிரித்துக் காட்டுக:—

கோதற, செழுங்கமலம், வடகிழக்கு, நெடுநிலம், குலமறுத்து, மருவிலா, அருமருந்து, செழுமழை.

2. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—

கோதற, தீதற, மாதவர், பரந்து, மருவிலா, செழுமழை, மணி விளக்கு, எழில்.

3. இப்பகுதியிலுள்ள ஐந்து செய்யுட்களின் திரண்ட கருத்தினை உன் சொந்த நடையில் எழுதுக.

4. நூல் நிலையத்து நூல்களின் துணையைக்கொண்டு 'மக்கமாநகர்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

5. தேம்பாவணி

தாவீதனும் கோலியாத்தும்

தேம்பா+அணி=தேம்பாவணி - வாடாத பாமாலை. இஃது இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையாரான சூசையப்பரது வரலாற்றைக் கூறும் பெருநூல். இதனைப் பாடியவர்

வீரமாமுனிவர் என்னும் மேனுட்டுப் பாதிரியார். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்ருண்டின் இறுதியும் 18ஆம் நூற்ருண்டின் முற்பாதியும் ஆகும்.

தாவீதன் என்பவன் கடவுள் பக்தி கொண்ட சிறுவன்; சத்திய வேதப்படி நடந்தவன். கோலியாத்து என்பவன் சத்திய வேதத்தின் எதிரி. அவனைச் சேர்ந்தவர்களும் எதிரிகளே. அவன், எதிரிகள் சார்பில் தோன்றிச் சத்திய வேதத்தின்படி நடந்துவந்த சூதேய நாட்டுக் குடிகளைப் போரில் எதிர்க்க வந்தான். மிகப்பெரிய உருவத்தைப் படைத்த அக்கொடியவனை இளைஞனை தாவீதன் என்பவன் கவண்கல் வீசிக் கொன்ருன். இந்த நிகழ்ச்சியையே கீழ்வரும் பாடல்கள் விளக்குகின்றன.

பிலித்தையர் எதிர்ப்பு

மறைவ ழங்கிய வளங்கொணுட் டிடைசவு லாண்ட
முறைவ ழங்கிய கால்மறை பகைத்தனர் முகினின்
றுறைவ ழங்கிய வொப்பெனச் சரமழை வழங்கிப்
பொறைவ ழங்கிய பிலித்தையர் போர்செய
[வெதிர்த்தார். (1)

கோலியாத்து முழக்கம்

வேலி பாற்கது விடாத்திரு நகரெலா நடுங்க
மாலி பாற்கதிர் வகுத்தவா ளேந்தினர் நாப்பண்
ஆலி யாற்கரிந் தகல்முகி லுருக்கொடு வேய்ந்த
கோலி யாத்தெனுங் கொடியதோ ரிராக்கத
[னெதிர்த்தான். (2)

கூர்த்த போர்செயக் கூடினர்க் கொருவன்வந்
[தெய்திச்
சீர்த்த நானவன் சிறந்தபோர் தனித்தனித் தாக்கத்
தோர்த்த பாங்கினர் தொழும்ப ரென்ருகுவ ரென்னு
வார்த்த வோகையா னகைத்திகழ் வறைந்தறைந்
[தழைப்பான். (3)

[சவுல் மன்னனின் போர் வீரருள் ஒருவரேனும் கோலி யாத்தை எதிர்க்கத் துணியவில்லை. கோலியாத்துத் தன் எதிரிகளையும் அவர்கள் நம்பிய இறைவனையும் பழித்துப் பேசினான். இவ்வாறு நாற்பது நாட்கள் கழிந்தன.]

தாவீதன் என்ற சிறுவன்

இன்ன வாய்பக னாற்பது மிரிந்தபின் னண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப் போயின ரவரைத்
துன்ன வாசையாற் றுடர்ந்திள தாவீத னெய்தி
யன்ன யாவையு மஞ்சின ரறைதலுங் கேட்டான்.

கேட்ட வாசகங் கிளர்திற நெஞ்சிடத் தெரியை
யீட்ட லாமென வெழுந்துள நினைந்தவை யாக்கிக்
காட்ட வாய்மையிற் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட லால்விளி விழுங்கிய கயவனா ரென்றான்.

சிறுவனின் துணிச்சல்

கைவ யத்தினாற் கருத்திடத் துடலினூங் கோங்கும்
பொய்வ யத்தினான்புகைந்தசொற்கஞ்சுவதென்னா
மெய்வ யத்தினால் விழைசெய மாவதோ கடவுள்
செய்வ யத்தினாற் சிறுவனான் வெல்லுவே
[னென்றான். (6)

[சவுல் மன்னன் தாவீதன் என்ற சிறுவனைக் கோலியாத் துடன் போர் செய்ய வேண்டா எனத் தடுத்தான். சிறுவன் கேட்கவில்லை. ஆதலால் மன்னன் அவனுக்கு ஆசி வழங்கிப் போர்க்களத்திற்கு அனுப்பினான். அச்சிறுவனைக் கண்ட கோலியாத்துப் பரிகசித்தான்.]

கோலியாத்தின் எள்ளல் உரை

நீய டாவெதிர் நிற்பதோ மதம்பொழி கரிமே
னாய டாவினை நடத்துமோ கதங்கொடு நானே
வாய டாபிளந் துயிர்ப்பிட மறுகிநீ நுண்டூ
ளாய டாவுல கப்புறத் தேகுவா யென்றான். (7)

தாவீதன் உரையும் செயலும்

வெல்லை வேல்செயு மிடலதுன் மிடலடா நானே
வெல்லை யாதர வியற்றெதி ரிலாத்திறக் கடவுள்
வல்கை யோடுனை மாய்த்துடல் புட்கிரை யாக
வொல்செய் வேனென வுடைகவண் சுழற்றின
[னிளையோன். (8)

கோலியாத்தின் வீழ்ச்சி

கல்லை யேற்றலுங் கவணினைச் சுழற்றலு மக்க
லொல்லை யோட்டலு மொருவருங் காண்கில
[ரிடிக்குஞ்
செல்லை யொத்தன சிலைநுதற் பாய்தலு மன்ன
னெல்லை பாய்ந்திரு ளிரிந்தென வீழ்தலுங்
[கண்டார். (9)

தாவீதன் வெற்றி

கடையு கத்தினிற் கருமுகி லுருமொடு விழும்போற்
படைமு கத்தினிற் பார்பதைத் தஞ்சவீழ்ந்
[தனன்றன்
புடைய கத்தினிற் புணர்ந்தவாளுருவியென்றெய்வ
முடையு ரத்தினை யுணர்மினென் றிருஞ்சிரங்
[கொய்தான். (10)

அருஞ்சொற்பொருள்

1. மறை - சத்திய வேதம். நாடு - சூதேய நாடு. சவுல் - அரசன் பெயர். மறை பகைத்தனர் - சத்திய வேதத்தைப் பகைத்தவர், பிலித்தையர் என்ற மலை நாட்டு மக்கள். முகில் - மேகம். சரம் - அம்பு. பொறை - மலை.

2. வேலி - மதில். கதுவிடா - அழியாத. மாலியால் - சூரியனால். நாப்பண் - நடுவில். ஆலியால் - நீரினால்.

3. கூர்த்த - மிகுந்த. எய்தி - சேர்ந்து. தொழும்பர் - அடிமைகள். என்னு - என்று. ஓகை - உவகை, களிப்பு. அறைந்து அறைந்து - அடுக்குத் தொடர்.

4. இரிந்த - கடந்த. அண்ணர் - அண்ணன்மார். முரண் - போர். துன்ன - அடைய (பார்க்க). அஞ்சினர்- பயந்தவர், வினையாலணையும் பெயர்.

5. வாசகம் - வார்த்தை. கிளர் - மேலான. ஈட்ட லாமென - குவித்தது போலாகி. வாய்மையில் - சொல்லில் அடங்காத. நகைப்ப - இகழ்ச்சி சொல்ல. விளி - சாவை. கயவன் - கீழ்மகன்.

6. பயம் - வல்லமை. ஊங்கு - மிகவும். மெய் - உடல். செய் - தரும். வயத்தினுல் - திறத்தைக் கொண்டு.

7. எதிர் - எதிராய். வினை - போர். கதம் - சினம். உயிர்ப்பு - மூச்சு. மறுகி - சுழன்று.

8. வெல் - வெல்லற்கு அரிய. வை - கூர்மையான. மிடல் - வல்லமை. எல்வை - சமயத்திற்கு. வல்கை - வலக்கை. புட்கு - புள் + கு - பறவைகளுக்கு. ஒல் - பொருந்த.

9. ஒல்லை - விரைவில். ஓட்டலும் - எறியவும். செல் - மேகம். சிலை-வில். எல்-சூரியன். இரிந்தன-சாய்வதுபோல.

10. கடையுகம் - உலகம் முடியும் கடைசியுகம். உரும் - இடி. படைமுகம் - போர்க்களம். புடையகம் - இடை. புணர்ந்த - கட்டியிருந்த. உரம் - வல்லமை. இரு - பெரிய. கொய்தான் - அறுத்தான்.

கேள்விகள்

1. பிலித்தையர் என்பவர் யாவர்?
2. மறை வழங்கிய நாட்டினர் யாவர்?
3. கோலியாத்து என்பவன் போர்க்களத்தில் கூறியது யாது?
4. தாவீதன் என்பவன் யாவன்?
5. கோலியாத்தின் பேச்சைக் கேட்ட தாவீதன் கூறியன யாவை?
6. தன்னை எதிர்க்க வந்த தாவீதனைக் கண்ட கோலி யாத்து யாது கூறிப் பரிகசித்தான்?

7. தன்னைப் பரிகசித்த கோலியாத்தை நோக்கித் தாவீதன் யாது கூறினன் ?

8. தாவீதன் கோலியாத்தை எவ்வாறு வென்றான் ?

பயிற்சி

1. பொருள் கூறுக:—மறை, சவுல், சரமழை, ஆலி, கூர்த்த, சீர்த்த, தொழும்பர், என்னு, ஓகை, முரண், அறைதல், வாய்மை, விளி, வயம், மறுகி, கதம், மிடல், வல்கை, நுதல், இரிந்து, உரும், உணர்மின்.

2. கீழ் வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—

சரமழை, நாப்பண், சீர்த்த, தனித்தனி, அறைந்த றைந்து, எய்தி, வாய்மை, கயவன், கதம், மிடல், சுழற்று, கவண், கருமுகில், அஞ்ச.

3. இப்பாடல்களில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியைக் கோலியாத்தே கூறுவது போலக் கூறுக.

4. இப்பாடல்களில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியைத் தாவீதன் சொல்வது போலச் சொல்லுக.

IV. பலசுவை

1. வருணனை

[கீழ்வரும் பாடல்கள் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் இருப்பவை.]

மருகல் நாட்டுத் தஞ்சாவூர்

உள்ளும் புறம்பும் குலமரபின்
ஒழுக்கம் வழுவா ஒருமைநெறி
கொள்ளும் இயல்பிற் குடிமுதலோர்
மலிந்த செல்வக் குலப்பதியாம்
தெள்ளுந் திரைகள் மதகுதொறும்
சேலும் கயலும் செழுமணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு
மருகல் நாட்டுத் தஞ்சாவூர். (1)

திருக்கடவூர்

வயலெலலாம் விளைசெஞ் சாலி
வரம்பெலாம் வளையின் முத்தம்
அயலெலலாம் வேள்விச் சாலை
அணையெலாம் கழுநீர்க் கற்றை
புயலெலலாம் கமுகின் காடப்
புறமெலாம் மலரின் தோற்றம்
செயலெலலாம் தொழில்கள் ஆறே
செழுந்திருக் கடவூர் என்றும். (2)

குடங்கையின் அகன்ற உண்கண்
கடைசியர் குழுமி ஆடும்
இடம்படு பண்ணை தோறும்
எழுவன மருதம் பாடல்
வடம்புரி முந்நூல் மார்பின்
வைதிக மறையோர் செய்கை
சடங்குடை இடங்கள் தோறும்
எழுவன சாமம் பாடல். (3)

துங்கநீள் மருப்பின் மேதி
படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக்
கமலமும் தீம்பால் நாறும் ;
மங்குல்தோய் மாடச் சாலை
மருங்கிறை ஒதுங்கும் மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும்
ஆகுதிப் புகைப்பால் நாறும். (4)

பாலாறு

துங்க மாதவன் சுரபியின்
திருநகில் சொரிபால்
பொங்கு நீத்தமாய் நந்திமால்
வரைமிசைப் போந்தே
தங்கண் நித்திலம் சந்தனம்
அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந்
திழிப்பது பாலி. (5)

பிள்ளை தைவரப் பெருகுபால்
சொரிநகில் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர்
பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால்
வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை
உடைப்பது பாலி. (6)

அருஞ்சொற்பொருள்

1. மலிந்த - மிகுதியாக இருந்த. குலப்பதி - சிறந்த ஊர். சேல் - ஒருவகைச் சிறந்த மீன். கயல் - கெண்டைமீன். பொன்னி - காவிரி ; பொன்னைக் கொழித்து வருதலால் இப்பெயர் பெற்றது. பொன்னி நீர் நாடு - சோணாடு. மருகல் நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர் ; இது திருமருகல் என்னும் தலத்திலிருந்து சுமார் ஏழரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

2. செஞ்சாலி - செந்நெல். வளை - சங்கு. முத்தம் - சங்கு ஈன்ற முத்தம். அயல் - வயற்பக்கம். கழுநீர்க் கற்றை - செங்கழுநீர்த் தொகுதி. புயல் - மேகம். அப்புறம்- அவற்றின் புற இடங்கள். ஆறு தொழில்கள் - ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

3. குடங்கை - உள்ளங்கை. உண்கண் - மைதீட்டிய கண். கடைசியர் - உழவர் பெண்கள். குழுமி - சேர்ந்து. இடம்படு - இடமகன்ற. மருதம் பாடல் - மருதப் பண்ணைப் பாடும் ஓசை. வடம்புரி - வடமாக முறுக்கிய. சாமம் பாடல் - சாமவேதத்தைப் பாடும் ஓசை.

4. துங்க - தூய்மையான. மருப்பு - கொம்பு. மேதி - எருமை. வாவி - பொய்கை. பாய்ந்து - பாய்தலால் அந் நீர் தெறித்த. மங்குல் - மேகம். மாடச்சாலை - மாடங்களை யுடைய வேள்விச்சாலை. இறை - சிறிது. மஞ்சு - மேகம்.

5. துங்கமாதவன் - வசிட்டன். சுரபி - காமதேனு. இழிவது - கீழிறங்கி ஓடிவருவது. பாலி - பாலியாறு (பாலாறு).

6. தைவர - தடவ. மள்ளர் - உழவர். வருட - வேனிற் காலத்தில் மணல் மேடுகளைப் பிசைந்து கால் உண் டாக்கி ஒழுங்கு செய்ய. வெள்ளநீர் - ஊறிப் பெருகுகின்ற நீர். பள்ள - பள்ள நிலத்தில் உள்ள. பருமடை - பருத்த மடைகள்.

கேள்விகள்

1. மருகல் நாட்டுத் தஞ்சாவூரின் சிறப்பு யாது?
2. ஆறு தொழில்கள் எவை?
3. திருக்கடவூரின் சிறப்பு யாது?
4. பாலாற்றின் தோற்றம் பற்றி ஆசிரியர் யாது கூறி யுள்ளார்?
5. வேனிற் காலத்தில் பாலாற்றில் நீர்வரச் செய்யும் முறை யாது?

பயிற்சி

1. பாலாற்றின் தோற்றம், கால்வாய்ப் பெருக்கம் ஆகிய இவைபற்றிப் பத்து வரிகள் எழுதுக.

2. திருக்கடவூரின் சிறப்பினைப் பதினைந்து வரிகளில் வரைக.

3. நீங்கள் அறிந்த ஊர் அல்லது ஆற்றின் சிறப்பினை இருபது வரிகளில் எழுதுக.

4. நீர்வளமுள்ள நாட்டில் காணப்படும் காட்சிகளைக் குறிப்பிடுக.

5. பின்வருவனவற்றை நன்கு விளக்குக :—

மருதப் பாடல், சாமம் பாடல், பொன்னி நீர் நாட்டு மருகல் நாடு, பண்ணை.

6. பின்வருவனவற்றுக்குக் காரணங் காட்டுக :—

கமலம் தீம்பால் நாறுதல், மேகமும் மழை நீரும் புகை நாறுதல்.

2. *சீட்டுக்கவி*

சீட்டுக்கவி—ஒருவருக்குப் புலவர் தம் பெருமையும் தேவையும் விளங்க எழுதி விடுக்கும் பாட்டு. சீட்டுக்கவி பாடுதலில் அந்தகக்கவி வீரராகவ முதலியார் பெயர் பெற்றவர். இவர் சிறந்த புலவர்; திருக்கழுக் குன்றத்து மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் உலா முதலிய நூல்களைப் பாடிப் புகழ் பெற்றவர்; 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

குதிரை வேண்டிக் குலசேகரற்கு விடுத்த சீட்டுக்கவி

ஏடா யிரம்கோடி எழுதாது தன்மனத்
 தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
 ராகவன் விடுக்கும்ஓலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
 திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
 செழியனெதிர் கொண்டுகாண்க
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
 பற்றிக் கொலாதகோணம்

பறவாத கொக்கனற் பண்ணுத கோடைஐம்
படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன்றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

அருஞ்சொற்பொருள்

முதல் இரண்டு அடிகளும் முதலியார் அந்தகர் (குருடர்) என்பதையும் நினைவாற்றல் மிக்கவர் என்பதையும் உணர்த்துவன. விரகன் - வல்லவன். சேடன் - பாம்பு. சேட+ அதிபன்=பாம்புகட்குத் தலைவன்; ஆதிசேடன், வட மொழித் தொடர். புரந்து – காத்து. தாகம் - குடிகளது துன்பம். பாடாத கந்தருவம்..................கிள்ளை – இவை குதிரைக்கு வெளிப்படை; கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன 'குதிரை' எனப் பொருள் படுமாறு அடைமொழி தந்து பிற பொருள்களினின்று பிரித்துக் காட்டிய திறம் காண்க. கந்தருவம் – (வண்டு), குதிரை. கந்துகம் – (பந்து), குதிரை. கோணம் - (பற்றிக் கொல்லும் யந்திரப் பொறி), குதிரை. கொக்கு - (ஒருவகைப் பறவை), குதிரை. கோடை - (கோடைக்காலம்), குதிரை. ஐம்படை - சங்கு, சக்கரம், கதை, வில், வாள். குந்தம் – (ஈட்டி), குதிரை. பாடலம் - (ஒரு வகைப்பூ), குதிரை. மா – (மாமரம்), குதிரை. சடிலம் – (சடை), குதிரை. சொன்ன – உடன் பாட்டுப் பெயரெச்சம். சொல்லாத – எதிர்மறைப் பெயரெச்சம்.

கேள்விகள்

1. சீட்டுக்கவி என்பது யாது?
2. அதனில் கூறப்பெறும் செய்திகள் யாவை?
3. குதிரையைக் குறிக்கும் பல்வேறு பெயர்கள் யாவை?
4. கவிஞர் யாருக்குச் சீட்டுக்கவி வரைந்தனுப்பினர்?
5. கவிஞர் வேண்டுகோள் யாது?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களிற் பயன்படுத்துக :—

விரகன், எதிரிலா, புரந்து, சொன்னசொல், சொல்லாத.

2. இச்சீட்டுக்கவியின் பொருளை உன் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

3. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை - (தொண்டைநாட்டில் உள்ள) தொட்டிக்கலை என்னும் ஊர்ப் பெயரின் மரூஉ. அவ்வூரைப்பற்றிய சிலேடை வெண்பாக்களைக் கொண்ட நூல் 'கலைசைச் சிலேடை வெண்பா' எனப் பெயர் பெற்றது. சிலேடை - ஒரு வடிவாக நின்ற சொற்றொடர் பல பொருள் உடையதாக வரும் அணி.

இந்நூலின் ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்; 18ஆம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவர்.

சேலார் செழுந்தடத்தில் செந்தா மரையினிற்றேன்
காலாறு பாயும் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று. (1)

புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் [பூங்குழலும்
கண்ணிவா சஞ்செய் கலைசையே-எண்ணியொரு
மன்னுக மத்தினுன் வாரிகடைந் தோர்க்கிரங்கும்
மன்னுக மத்தினுன் வாழ்வு. (2)

அருஞ்சொற்பொருள்

1. சேல் ஆர் - கெண்டைமீன்கள் பொருந்திய. கால் - வாய்க்கால். ஆறு - வழி. காலாறு - ஆறுகால்களையுடைய வண்டு. சூல் - சூலப்படை. ஏறு - தாங்கிய. பாணியார் - கையினர். வேணி ஆர் பாகீரதி என்னும் பாணி ஆர் வேணியார் - ஆகாயத்தில் தங்கிய பாகீரதி என்னும் நீரையும் ஆத்தி மாலையையும் உடைய சடையினர். பற்று - இடம்.

2. புண்ணியம் - நன்மை. மெய் பண்ணவர் - உண்மைத் தேவர்கள். கண்ணி-நினைத்து, மதித்து. வாசம் செய்-தாம் வாசம் செய்யும். கள் + நிவாசம் செய் - தேன் பொருந்தியிருக்கும். மன் + நாகம் + மத்தினன் - வலிமை பொருந்திய மந்தரமலை என்னும் மத்தினால். வாரி - பாற்கடல். இரங்கும்-(விடத்தை உண்டு) அருள் செய்யும். மன் ஆகமத்தினன் - நிலைபெற்ற ஆகம நூல்களைத் தந்தருளிய சிவன். வாழ்வு - வாழும் இடம்.

பயிற்சி

1. "சேலார் செழுந்தடத்தில்...........கலைசையே"-இவ்வரிகட்குச் சிலேடைப் பொருள் கூறுக.

2. "சூலேறு பாணியார்...........பற்று"—பதம் பிரித்துப் பொருள் தருக.

3. "வேணியார் பாகீரதியென்னும் பாணியார் வேணியார்"—இதில் அமைந்த வரலாற்றைத் தெரிவிக்க.

4. "புண்ணிய மெய்ப் பண்ணவரும்...........கலைசையே"-இவ்வரிகட்குச் சிலேடைப் பொருள் தருக.

5. "எண்ணியொரு...........வாழ்வு"—சொற் பிரித்துப் பொருள் கூறுக.

4. சிறு நூல்கள்

1. நந்திக் கலம்பகம்

நந்தி - மூன்றும் நந்திவர்ம பல்லவன்; காலம் - கி. பி. 9ஆம் நூற்றுண்டு. இஃது இவன்மீது பாடப்பட்ட கலம்பகம். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இன்றுள்ள கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது இதுவேயாகும்.

தன் கணவனுடைய ஆசை நாயகியர் வீட்டில் தங்கி இரவு முழுமையும் பாடிக்கொண்டிருந்த பாணனை மறுநாட் காலையிற் கண்ட தலைவி, அவன் தன் கணவனது தவருன ஒழுக்கத்திற்குத் துணையாக நிற்றலை மறைமுகமாகக்

கண்டித்து அவனை நாணுமாறு செய்ததைக் கீழ்வரும் செய்யுள் உணர்த்துகிறது ; நகைச் சுவை மிக்கது.

ஈட்டு புகழ்நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்.

2. மீனாட்சியம்மை குறம்

இதனைச் செய்தவர் குமரகுருபரசுவாமிகள்; பல பிரபந்தங்களைப் பாடியவர் ; காசி மடத்தைத் தோற்றுவித்தவர் ; 17ஆம் நூற்றாண்டினர்.

குறக்குடியின் இயல்பு

குறத்தி, மீனாட்சியம்மையிடம் தன் இனத்தவர் தொழில்களைக் கூறுதல்.

கொழுங்கொடியின் விழுந்தவல்லிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தயரக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே.

3. தமிழ் விடு தூது

இதனை இயற்றியவர் பெயர் இதுகாறும் புலப்படவில்லை. இந்நூலைப் பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்.

பிரிவால் துன்புற்ற தலைவன் தலைவியருள் ஒருவர் மற்றவர்பால் தமது ஆற்ருமையைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருளையோ அஃறிணைப் பொருளையோ தூதனுப்புவதாகச் செய்யுள் செய்தல் புலவர் மரபு. இதுவே தூது எனப்படும்.

மதுரையில் உள்ள சோமசுந்தரக் கடவுள்மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி, துன்புற்றுத் தன் வருத்த மிகுதியைச் சென்று தெரிவிக்கும்படி அக்கடவுள்பால் தமிழையே தூதுவிட்டதாகச் செய்யப்பட்டது தமிழ் விடு தூது எனப்படும்.

என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானே உரைசெய்வேன் —
இன்சொல்லாய் (1)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகஎன்ற—சொற்குள்ளே (2)

எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய் உனக்குரைக்க வல்லனே ?—
சொல்லியவுன் (3)

ஈரடிக்குள் ளேஉலகம் எல்லாம் அடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிகர்உண்டோ —ஓரடிக்கோர்

ஆயிரம் பொன்இரைக்கும் ஐயரை வீதியிலே
போயிரந்து தூதுசொல்லப் போக்கினேய்—
ஆயிருந்தும் (5)

மாண்பாய்ஓர் தூதுசொல்லி வாவென்பேன்
என்வருத்தம்
காண்பாயென் பெண்மதிநீ காணதே. (6)

4. தஞ்சைப் பெருவுடையார் உலா

தஞ்சைப் பெருவுடையார் - தஞ்சைப் பெரிய கோவில் சிவபெருமான். இவ்வுலா நூலைப் பாடியவர் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர். இவர் 19ஆம் நூற்றுண்டினர்.

சிறந்த தலைமகன் ஒருவன் அல்லது கடவுளின் திருவுருவம் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடப்பெறும் சிறுநூல் உலா எனப் பெயர் பெறும். உலா நூலின் முற்பகுதியில் உலாக்கொள்ளும் தலைவனுடைய குடிப் பிறப்பு, சிறப்பு, அவன் நீராடுதல், ஊர்திகளில் செல்லுதல், உலாவில் உடன் வருபவர் இயல்புகள் என்பன கூறப்படும். பிற்பகுதியில் உலா வரும் தலைவன் அல்லது கடவுள்மீது விருப்பங் கொண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழு பருவங்களைச் சேர்ந்த பொதுமகளிர் நினைப்பனவும், பேசுவனவும் உலா நூலில் இடம் பெறும். ஐந்து வயது முதல் ஏழு வயது முடிய உள்ள பெண் 'பேதை' எனப் பெயர் பெறுவாள்.

பேதையின் வினுக்களும் தாய்மார் விடைகளும்

வலங்கையினில் ஓங்கு மழுவையென்னி தென்ருள்
இலங்கி யிடும்பரசி தென்ருர்—நலங்கொளிடம் (1)

தன்னில் வளருமுழை தன்னையிது என்னென்ருள்
கன்னி யிதுகலைமான் கன்றென்ருர்—இன்னதனை

வாங்கியெனக் கிப்போது வண்பாவை தன்னுடனே
தாங்கிவிளை யாடத் தருகென்ருள்—ஆங்கவரும்

மாங்குயிலே யிம்மான் வனமான் இனமல்ல
ஓங்கு முனிவரர்கள் ஓமத்தில்—ஆங்கெழுந்து (4)

தேனையுற்ற பூங்கொன்றை வேணிச் சிவபெரு
மானையன்று பாய்வதற்கு வந்ததுகாண்-ஆனநெடு

வன்கண்மை யுள்ளதிவர் மாமலர்க்கை போலவே
நின்கை யினிலடங்கி நிற்குமோ—என்குறித்தாய்

வாங்கி யளித்தவுடன் மன்னு முனையுமுன்றன்
பாங்குறுபொற் பாவையையும் பாய்ந்திடுங்காண்-
நாங்களினி (7)

வானத் தெழுந்து வருங்கலைமா னைப்பிடித்துத்
தானிற்றை நாளே தருகின்றேம்—தேனேவா (8)

என்ன எடுத்தார் இவளிருகண் முத்துதிர்த்தாள்
அன்னவரும் இன்சொலால் ஆற்றினர். (9)

அருஞ்சொற்பொருள்

1. நந்தி பாண - நந்தியின் பாணனே. எங்கையர் - என் தங்கையர். விடிவுஅளவும் - பொழுது விடியும் வரையும்.

2. கல்லி - தோண்டி. தேறல் - தேன். வாய்மடுப்போம் - அருந்துவோம். விருந்து அயர - விருந்தினர் அருந்த. பாயல் - பாய். கண்படுதல் - தூங்குதல். கயற்கணி - கயல் மீன் போன்ற கண்களையுடையவள்; மீனாட்சி அம்மை. வினை - பழைய வினைகள். கணி - 'கண்ணி' என்பதன் இடைக்குறை.

3. தமிழ் - இனிமை. 'கற்க...தக'—இது திருக்குறள். வல்லாய் - (முன்னிலை) வினையாலணையும் பெயர். ஈரடி - திருக்குறள். நேரடி - நாலடியார். ஐயர் - பெரியோர். பெண்மதி - பேதைமை.

4. (1) மழு - கோடரி.

(2) உழை - மான். இடந்தனில் - இடப்பக்கத்தில். கன்னி - பெண்ணே.

(3) பாவை - பொம்மை. வண்பாவை - வளம் பொருந்திய (அழகிய) பொம்மை.

(4) மாங்குயிலே - பெண்ணை அழைத்தபடி. வனமான் - காட்டில் திரிகின்ற மான். முனிவர்கள் - தாருகா வனத்து முனிவர்கள். ஓமம் - யாகம்.

(5) வேணி - சடை. ஆன - அத்தகைய.

(6) என் குறித்தாய் - என்ன நினைத்தாய்.

(7) அளித்தவுடன் - கொடுத்தவுடன்.

(8) கலைமானை - சந்திரனிடமுள்ள மானை. இற்றை நாளே - இன்றைக்கே. தேனே - தேன் போன்றவளே.

(9) முத்து - முத்துப்போன்ற கண்ணீர். ஆற்றினார் - தேற்றினார்.

கேள்விகள்

1. பாணன் பாடிய பாட்டைக் கேட்டு யார் யார் என்னென்ன கூறினர்? ஏன்?

2. "எங்கள் குறக்குடிக்கு அடுத்த செயல்கள் இவை" எனக் குறத்தி எவற்றைக் கூறினாள்?

3. தலைவி யாது கூறித் தமிழைத் தூது விடுத்தாள்?

4. தஞ்சைப் பெருவுடையாரைக் கண்ட பேதை, தாய்மாரை நோக்கிக் கேட்ட கேள்விகள் யாவை?

பயிற்சி

1. கீழ்வருவனவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :—

விடிவளவும், கொழுங்கொடி, கல்வி, தொடுப்போம், மடுப்போம், கொழுஞ்சாறு, தேறல், மரவுரி, இசைந்திட, நறுந்தேன், அயர, பாயல், கயற்கணி, இரங்குவது, கசடற, தக.

2. கீழ்வருவனவற்றிற்குப் பொருள் கூறுக :—

இரங்குவது, நீதி, கசடு, தக, இயம்பி, ஈரடி, நேரடி, பெண்மதி.

3. நந்திக்கலம்பகப் பாடலின் பொருளை நகைச்சுவை தோன்ற எடுத்துக் கூறுக.

4. குறவரின் பல்வேறு செயல்களைக் குறிப்பிடுக.

5. தலைவி தமிழின் சிறப்பை விளக்கும் திறத்தினைப் புலப்படுத்துக.

6. பேதையின் கேள்விகளையும் தாய்மார் கூறிய விடைகளையும் உன் சொந்த நடையில் எழுதுக.

5. வழிபாட்டுப் பாடல்கள்

1. தேவாரம்

[இப்பாடல் திருநாவுக்கரசர் பாடியது. இவர் சைவ சமய குரவர்; கி. பி. 7ஆம் நூற்றாண்டினர். இவர் தில்லைக் கூத்தப் பெருமானைக் கண்டு வியந்து பாடிய பாட்டு இது.]

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

2. நாச்சியார் திருமொழி

[நாச்சியார் – ஆண்டாள்; கி. பி. 8 அல்லது 9ஆம் நூற்றாண்டினர்; பெரியாழ்வார் மகளார்; சீவில்லிபுத்தூரினர்.]

கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன்
வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே.

3. சீறாப் புராணம்

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
    தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
    தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்த
    பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
    மண்ணினில் மதிமறந் தவரே.

4. இரட்சணிய யாத்திரிகம்

[இரட்சணியத்தை அடைய விரும்பிய ஆன்மாவின் மோட்ச யாத்திரையைப் பற்றிய நூல். இது கிறித்துவக் காவியம். இதன் ஆசிரியர் H. A. கிருஷ்ண பிள்ளை என்பவர்; கி.பி. 19ஆம் நூற்றாண்டினர்; திருநெல்வேலிப் பதியினர்.]

அகில லோகம் படைத்தளித் தன்பினால்
சகல மன்னுயி ருங்கதி சார்ந்துய
மகவை நல்கிய மாண்புறு தாதையாம்
பகவ னுக்கித யாஞ்சலி பண்ணுவாம்.

5. திரு அருட்பா

தனித்தனிமுக் கனிபிழிந்து
    வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின்
    பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து
    பசுப்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம்
    பருப்பிடியும் விரவி

இனித்தநறு நெய்யளைந்தே
இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும்
இனித்திடுதெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில்
விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம்
அலங்கலணிந் தருளே.

அருஞ்சொற்பொருள்

1. குனித்த - வளைந்த, பெயரெச்சம். கொவ்வை - கொவ்வைப்பழம், செந்நிறம் உடையது. பனித்த - குளிர்ச்சியுள்ள. வெண்ணீறு - விபூதி. இனித்தம் - இனிமை. பொன் - அழகிய.

2. நாறுமோ - மணக்குமோ. மருப்பு - தந்தம். ஒசித்த - ஒடித்த.

3. இதயாசனம் - இதய + ஆசனம் - மனமாகிய இடம். உறைந்து - வாழ்ந்து. பதி - ஊர். மதி - அறிவு.

4. கதிசார்ந்து - நன்மை பெற்று. உய - உய்ய - பிழைக்க. மகவை - ஏசுநாதரை. நல்கிய - உலகிற்குக் கொடுத்த. தாதை - தகப்பன். பகவன் - கடவுள். இதயாஞ்சலி - இதய + அஞ்சலி - மன வணக்கம். தீர்க்கசந்தி பெற்ற வடமொழித்தொடர்.

5. முக்கனி - மா, பலா, வாழை. தெங்கு - தென்னை. தீம்பருப்பு - முந்திரிப்பருப்பு, வாதுமைப் பருப்பு முதலியன. இடி - தூள். விரவி - கலந்து. அளைந்து - கலந்து, பிசைந்து. அனித்தம் அற - நிலைபெறுதல் இல்லாமை நீங்க. பொதுவில் - பொது + இல், அம்பலம். அடிமலர் - பாதமாகிய மலர், உருவகம். அலங்கல் - மாலை.

கேள்விகள்

1. திருநாவுக்கரசர் ஏன் மனிதப் பிறவி வேண்டும் என்று கூறுகிறார்?
2. ஆண்டாள் வெண் சங்கைப் பார்த்துக் கேட்பன யாவை?

3. உமறுப் புலவர் இறைவன் தன்மையை எவ்வாறு கூறியுள்ளார் ?

4. கிருஷ்ண பிள்ளை பகவனைப்பற்றிக் கூறுவது யாது ?

5. 'சுவைக்கட்டி' எங்ஙனம் செய்யப்படும் ?

பயிற்சி

1. இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு செய்யுளின் திரண்ட கருத்தையும் எழுதிக் காட்டுக.

2. இப்பகுதியிற் காணப்பெறும் பாடல்களில் உள்ள வினைமுற்றுக்கள், வினையெச்சங்கள், பெயரெச்சங்கள் ஆகியவற்றைக் கூறுக.

3. நூல்நிலையத்தில் உள்ள நூல்களின் துணையைக் கொண்டு கீழ்வருவனவற்றுள் ஒவ்வொன்று பற்றியும் ஒரு குறிப்பு வரைக :—

கருப்பூரம், பவளம், மருப்பு, முக்கனி.

MALLIGAI VACHAKAM

STANDARD VIII

BY

Dr. M. RAJAMANIKKANAR, M.A., L.T., M.O.L., Ph.D.

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1

 [*Re.* **1·80** *P.*